விலை: 30.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378

# வலம்புரி Valampurii

E-mail: valampurii@yahoo.com, valampurii@sltnet.lk

சங்கு 21 வள்ளுவர் ஆண்டு 2051 மாசி 15 வியாழக்கிழமை (27.02.2020) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 70

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1000/= + 300/= மட்டுமே

## ஐ.நா தீர்மானத்திலிருந்து இலங்கை விலகுகின்றது

### உத்தியோகபூர்வமாக அறிவித்தார் தினேஷ் குணவர்த்தன

(ஜெனிவா)

இலங்கை தொடர்பான 30/1, 40/1 பிரேரணைகளின் இணை அனுசரணையிலிருந்து இலங்கை அரசாங்கம் விலகுவதாக அமைச்சர் தினேஷ் 23

ஐ.நா மனித உரிமைகள் பேரவையில்

## இலங்கையின் போர்க்குற்றம் தொடர்பான விவாதம் இன்று

(ஜெனிவா)


ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 43ஆவது கூட்டத் தொடர் ஜெனிவாவில் நடைபெற்று வரும் நிலையில், இலங்கை தொடர்பான விவாதம் இன்று நடைபெறுகிறது.

இலங்கையின் இன்றைய விவாதத்தில் இறுதிக்கட்டப் போரின்போது இடம்பெற்ற மனித உரிமைகள் மீறல்கள் தொடர்பிலும் காணா 23

போர்க்குற்ற விவகாரம் தொடர்பில்

# உள்ளக விசாரணைக்கு இலங்கை தயார்

### ஜெனிவாவில் வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்த்தன அறிவிப்பு



*(ஜெனிவா)* போர்க்குற்ற விவகாரம் தொடர்பில் உள்ளக விசாரணையை மேற்கொள்ள இலங்கை அரசாங்கம் தயாராகவுள்ளதாக வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்த்தன ஜெனிவாவில் நேற்று அறிவித்தார். உள்நாட்டிலேயே இலங்கை உயர் நீதிமன்ற நீதிபதியின் தலைமையிலான விசாரணை ஆணைக்குழு ஒன்று அமைக்கப்படும் என்றும் தெரிவித்தார்.

*(23ஆம் பக்கம் பார்க்க)*

5 பேர் கொண்ட கும்பலால்

## வர்த்தக நிலையம் மீது யாழில் தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் வர்த்தக நிலையம் ஒன்றுக்குள் வந்த வன்முறைக் கும்பல் அங்குள்ள பொருட்களை அடித்து சேதப்படுத்தி விட்டு தப்பிச் சென்றுள்ளது. தப்பிச் செல்லும் போது வீதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த முச்சக்கரவண்டி ஒன்றையும் அடித்து சேதப்படுத்தி விட்டு சென் 23

## நள்ளிரவு வீட்டுக்குள் நுழைந்த வாள்வெட்டு கும்பல் அடாவடி

(கரணவாய்)

யாழ். கொடிகாமம் பகுதியில் வீடொன்றுக்குள் நுழைந்த வாள்வெட்டுக் கும்பல் வீட்டிலிருந்தவர்கள்ளை அச்சுறுத்தி அங்கிருந்த பொருட்களை அடித்து சேதப்படுத்திவிட்டு அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளதாக கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. 23

அதிபர் - ஆசிரியர்கள் வேலை நிறுத்தத்தினால்

## நாடளாவிய ரீதியில் பாடசாலைகளில் கல்வி நடவடிக்கைகள் ஸ்தம்பிதம்

(கொழும்பு)

சம்பள முரண்பாட்டுப் பிரச்சினைக்கான தீர்வை உடனடியாக பெற்றுத்தரக்கோரி அதிபர், ஆசிரியர்களினால் முன்னெடுக்கப்பட்ட சுகவீன விடுமுறை போராட்டம்



மற்றும் ஆர்ப்பாட்டப் பேரணியின் காரணமாக பாடசாலை மாணவர்களின் கற்றல் கற்பித்தல் நடவடிக்கைகள் நேற்று ஸ்தம்பிதமடைந்தது.

இடைக்கால கொடுப் 23

மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசராக

## ஆர்.எம்.சோபித ராஜகருணா கோட்டா முன்னிலையில் பதவியேற்பு



23

ஐ.நா செல்லும் போது கட்டுநாயக்கவில்

## இலக்கு வைக்கப்பட்டு அதிகளவு சோதனைக்குள்ளானேன்

### ஜெனிவாவில் அனந்தி சசிதரன் ஆதங்கம்

(ஜெனிவா)

ஐக்கிய நாடுகள் சபையின் ஜெனிவா கூட்டத்தொடரில் கலந்து கொள்வதற்காக செல்லும்போது கட்டுநாயக்க விமான நிலையத்தில் இலக்கு 23

## நேர்முகத் தேர்வில் இராணுவ அதிகாரிகள்



10

5 ரூபாயால்

## பணிஸ் விலை இன்றுமுதல் குறைப்பு

(யாழ்ப்பாணம்)

பணிஸ் விலை இன்று முதல் ஐந்து ரூபாயினால் குறைக்கப்படும் என யாழ்.மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கச் செயலாளர் பாஸ்கரன் 23

## சர்வதேச நீதிமன்றில் இலங்கை நிறுத்தப்படும்

### காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் ஐ.நாவில் தெரிவிப்பு

02 பக்கம் பார்க்க

## 22 கிலோ கிராம் கேரள கஞ்சாவுடன்

### பலாலிப் பகுதியில் ஒருவர் கைது

(கரணவாய்)

22 கிலோ கிராம் கேரள கஞ்சாவுடன் சந்தேகநபர் ஒருவர் பலாலிப் பகுதியில் கைது செய்யப்பட்டுள்ளதாக சங்கானை 23

## நீதிமன்ற குற்றவாளிகளுக்கே ஜனாதிபதி உயர் பதவிகளை வழங்கியுள்ளார்

### விஜித ஹேரத் குற்றச்சாட்டு

(கொழும்பு)

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் சிறந்த நிர்வாகத்தை பிரதமர் மகிந்த ராஜபக்ஷவே சீர்குலைக்கின்றார் என்று மக்கள் கருதுவது முற்றிலும் தவறானதாகும். நீதிமன்றத்தினால் குற்றவாளி என்று குறிப்பிடப்பட்டவர்களுக்கு ஜனாதிபதி அரச உயர் பதவிகளை வழ 23

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# சர்வதேச நீதிமன்றில்...

ஐக்கிய நாடுகள் மனித உரிமை தீர்மானத்திலிருந்து இலங்கை விலகுவதாக உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ள நிலையில், அது எமக்கு மன சோர்வை தராது என காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.

ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையின் 43வது அம்ர்வு கடந்த 24ம் திகதி ஜெனிவாவில் ஆரம் பமாகியது. இந் நிலையில் இலங்கையின் மனித உரிமைகள் தொடர்பான அமர்வு நேற்று நடைபெற்றது.

இந்நிலையில், இந்த கூட்டத்தொடரில் வடக்கு கிழக்கில் இருந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் சார்பில், மூவர் பிரதி நிதியாகக லந்துகொண்டிருந்தனர்.

அவர்கள் வழங்கிய விசேட செவ்வியில் இவ்வாறு கூறியுள்ளனர்.

ஜெனிவாவில் இலங்கை வெளியேறியது எமக்கு வெற்றியே இலங்கையை சர்வதேச நீதிமன்றில் நிறுத்த இது வழிவகுக்கும் என்றும் தெரிவித்தார்

(ம)


## விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள Bajaj 2 Stroke QE இலக்க முச்சக்கரவண்டி, Apple I mac Desktop computer with Bose Champion Sub Woofer, Samsung 7 Kg Front Lorder சலவை இயந்திரம் என்பன உடன் விற்பனைக்கு உண்டு. (c-9347)

தொடர்பு த.அஜந்தன்
0769827097, 0212262171



## கிழவன்காடு கலாமன்றத்தின் கண்ணீர் பூக்கள்



எமது கலாமன்றத்தில் மிருதங்க ஆசிரியராக கடமையாற்றும் லயஞான சுரபி **மா.சிதம்பரநாதன்** அவர்களது பாசமிகு சகோதரர்

அமரர்

**மாரிமுத்து சபாநாதன்**

அவர்களது மறைவுச் செய்தி அறிந்து துயர் அடைவதுடன் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரது ஆத்மா எல்லாம் வல்ல ஈழத்துச் சிதம்பர தில்லைக்கூத்தன் திருவடிகள் சேர பிரார்த்திக்கின்றோம்.

சாந்தி! சாந்தி! சாந்தி!

**கிழவன்காடுகலாமன்றம்**
**காரைநகர் கிளை, யாழ்**

(c-9348)

**நிர்வாக சபையினர், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள்**



## ST.JOHN'S COLLEGE, JAFFNA
## CHUNDIKULI GIRLS' COLLEGE, JAFFNA
## ADMISSION- GRADE 1 in 2021 & G.C.E. A/L (2023 Batch) in 2020

1.அ.விண்ணப்பப்படிவங்களை அந்தந்தக் கல்லூரிகளிலிருந்து 28.02.2020 முதல் 20.03.2020 வரை பெற்றுக்கொள்ளலாம்.

ஆ.எமது விண்ணப்பப்படிவங்கள் தவிர்ந்த ஏனைய விண்ணப்பப்படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது

இ.விண்ணப்பப்படிவங்கள் ஏற்கப்படும் இறுதி நாள் 20.03.2020 திங்கட்கிழமை அத்திகதிக்குப் பின்னர் எமக்குக் கிடைக்கும் விண்ணப்பங்கள் கவனத்தில் எடுக்கப்பட மாட்டாது

2.விண்ணப்பப்படிவங்களுடன் பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்தின் பிரதி (photocopy) இணைக்கப்பட வேண்டும் .

3.விண்ணப்பப்படிவங்களை ஞாயிற்றுக்கிழமையும் விடுமுறை தினங்களும் தவிர்ந்த ஏனைய நாட்களில் காலை 9.00 மணி முதல் பிற்பகல் 2.00 மணிவரை அந்தந்தக் கல்லூரிகளில் பெற்றுக் கொள்ளலாம்.

4.ஒரு படிவத்திற்கான கட்டணம் ரூபா 1000

5.வயதெல்லைகள்:

தரம் 1 விண்ணப்பதாரி 01.02.2015 க்கும் 31.01.2016 க்குமிடையில் பிறந்திருத்தல் வேண்டும்

தரம் 12 (A/L 2013 batch) விண்ணப்பதாரி 01.02.2004 இல் அல்லது அதற்குப் பின் பிறந்திருத்தல் வேண்டும்

அதிபர்கள் (c-9346)



## நடேஸ்வரா அன்னையின்
## வாழ்த்துக்கள்




**திரு:செல்வராசா.பிரகாஸ்**

**(B.Ed, SLPS III)**

உயர்ந்ததே உங்கள் பணி
கொள்கின்றோம் பேருவகை தான் இனி!
அதிபர் அமிர் இன் விண் பயணத்தோடு
துன்பச் சாகரத்துள் நடேஸ்வரா துயன்றிருந்தபோது
ஆண் பறவையாய் வந்து அடைகாத்த
தூண் நிகர் தோள் கொண்ட செங்கோலனே
நின் பணி கண்டு பிரதி அதிபர் பதவி முதல்வரானது
யாழ்.பெரியவிளானும் இனி
பட்டொளி வீசும் உங்கள் கரம் பட்டு.

எமது கல்லூரியில் 2017.01.11 தொடக்கம் பிரதி அதிபராக கடமையை பொறுப்பேற்று தற்போது யா/பெரியவிளான் றோ.க.த. பாடசாலையில் அதிபராக பதவி உயர்வு பெற்று 2020.02.26 கடமையைப் பொறுப்பேற்றுச் சென்ற **திரு.செல்வராசா பிரகாஸ்** அவர்களை மேலும் பல பதவி உயர்வுகளை பெற்று நீடூழி வாழ எல்லாம் வல்ல ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாளின் ஆசி வேண்டி பாராட்டி வாழ்த்துகின்றோம்.

**ஆசிரியர் நலன்புரிக்கழகம்,**
**யா/நடேஸ்வரக் கல்லூரி, காங்கேசன்துறை.**



## கரைச்சி தெற்கு பல நோக்கு கூட்டுறவுச்சங்கம் (வ-து)
## பதிவு இலக்கமும் திகதியும்:-P /46 08.02.1971
## அறிவித்தல்

### கிளைக்குழுக்களைத் தெரிவு செய்தல்- 29.02.2020

வடக்கு,கிழக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும்,பதிவாளரும் அவர்களினால் ஆக்கப்பட்டு 1998.05.19ஆம் திகதிய 1028/6ஆம் இலக்கம் கொண்ட அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதுமான வடக்கு,கிழக்கு மாகாண எல்லைக்குட்பட்ட பகுதியில் இயங்கிவரும் வரையறுக்கப்பட்ட பல நோக்கு கூட்டுறவுச்சங்கங்களின் கிளைக் குழுக்களைத்தெரிவு செய்வதற்காக ஆக்கப்பட்ட விதிகளுக்கமைய வடக்கு மாகாண கூட்டுறவு அவிபிருத்தி ஆணையாள்ரும் கூட்டுறவுச்சங்களின் பதிவாளருமான திரு.பொ.வாகீசன் அவர்களினால் மேற்படி சங்கத்தின் துணைவிதி 23இற்கு அமைய சங் கத்தின் சகல கிளைகளினதும் கிளைக்குழுத் தெரிவிற்கானகிளை பொதுச் சபைக்கூட்டங்களை 29.02.2020ஆம் திகதி முற்பகல் 10.00மணிக்கு பின்வரும் அட்ட வணையின்படி நடாத்துவதற்கு அந்த கூட்டங்களை அழைப்பதற்கும் அவற்றின் தவிசாளராகக கடமையாற்றுவதற்கும் கீழ்வரும் அலுவலர்கள் பெயர் குறித்து நியமிக்கப்பட்டுள்ளனர் என்பதனை அறியத்தருகின்றோம்.

காலம் - 29.02.2020ஆம் திகதி (சனிக்கிழமை)

நேரம் - முற்பகல் 10.00மணி

| கிளை இல | கிளையின் பெயர் | தவிசாளர் பெயர் | கூட்டம் நடைபெறும் இடங்கள் |
|---|---|---|---|
| 01 | கணேசபுரம் | திருமதி த.செல்வகேந்தினி | பொதுநோக்கு மண்டபம்,கணேசபுரம் |
| 02 | கனகபுரம் | திருமதி கே.கலைவாணி | பொதுநோக்கு மண்டபம்,கனகபுரம் |
| 03 | திருநகர் | திருமதி ஸ்ரீ.இமல்டா | பாரதி முன்பள்ளி மண்டபம்,திருநகர்தெற்கு |
| 04 | ஜெயந்திநகர் | திரு.க.உதயரூபன் | கிளி இந்துஆரம்பவித்தியாலயம்,ஜெயந்திநகர் |
| 05 | கிளி மேற்கு | திருமதி.அ.ரஞ்சினி | புனித திரேசா பெண்கள் கல்லூரி.கிளிநொச்சி |
| 06 | உருத்திரபுரம்மேற்கு | திரு.தே.வேணுகோபாலன் | பொதுநோக்கு மண்டபம்,உருத்திரபுரம் மேற்கு |
| 07 | உருத்திரபுரம்கிழக்கு | திரு.க.செல்வகுமார் | பொதுநோக்கு மண்டபம்,உருத்திரபுரம்கிழக்கு |
| 08 | சிவநகர் | திரு.செ.செல்வகுமாரன் | பொதுநோக்கு மண்டபம்,சிவநகர் |
| 09 | புதுமுறிப்பு | திரு.அ.செந்தூர்ச்செல்வன் | பொதுநோக்கு மண்டபம்,புதுமுறிப்பு |
| 10 | கிளி கிழக்கு | திருமதி.மு.புஸ்பலட்சுமி | புனித திரேசா பெண்கள் கல்லூரி.கிளிநொச்சி |
| 11 | இரணைமடு கிழக்கு | திரு.சி.சிறிதரன் | பொதுநோக்கு மண்டபம்,மருதநகர் |
| 12 | கனகாம்பிகைகுளம் | திரு.ஜெ.சஞ்சிவ் | பொதுநோக்கு மண்டபம்,கனகாம்பிகைகுளம் |
| 13 | திருவையாறு | திரு.உ.ஜெயந்தபிரகாஸ் | பொதுநோக்கு மண்டபம்,1ம்பகுதி திருவையாறு |
| 14 | இரத்தினபுரம் | திருமதி.த.சிவகுமாரி | பொதுநோக்கு மண்டபம்,இரத்தினபுரம் |
| 15 | ஆனந்தபுரம் | திரு.பா.வாகீசன் | பொதுநோக்கு மண்டபம்,ஆனந்தபுரம் |
| 16 | பாரதிபுரம் | திரு.ம.லெட்டினன் | பொதுநோக்கு மண்டபம்,பாரதிபுரம் |
| 17 | உதயநகர் | திரு.அ.துஷ்யந்தன் | பொதுநோக்கு மண்டபம்,உதயநகர்மேற்கு |
| 18 | அம்பாள்குளம் | திரு.க.பாலகிருஷ்ணன் | பொதுநோக்கு மண்டபம்,அம்பாள்குளம் |
| 19 | செல்வாநகர் | திரு.க.விஷ்னுகரன் | பொதுநோக்கு மண்டபம்,செல்வாநகர் |

கிளை பொதுச்சபைக்கூட்டத்திற்கு சமுகமளித்து வாக்களிக்கத்தகைமையுடைய உறுப்பினர்களுக்கு கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும் கூட்டுறவுச்சங்களின் பதிவாளர் அவர்களினால் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரால் 1998.05.19 ஆம் திகதிய 1028/6 ஆம் இலக்கம் கொண்ட அதி விசேட வர்த்தமானியின் அறிவுறுத்தலுக்கு அமைய கூட்ட அறிவித்தல் வழங்கப்பட்டுள்ளது.இவ் அறிவித்தல் கிடைக்காத வாக்களிக்க தகுதியுடைய அங்கத்தவர்களும் இவ்வறிவித்தலை தனிப்பட்ட அறிவித்தலாக கருதி அன்றைய கிளைப் பொதுச்சபை கூட்டங்களுக்கு சமுகமளித்து தாங்கள் ஜனநாயக உரிமையை பயன்படுத்தி கூட்டுறவு அமைப்பினை ஜனநாயக ஆளுமை கொண்டதாகச் செயற்படுத்துமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

கிளைக்குழு தெரிவு செய்வதற்கான கிளைப்பொதுச்சபை கூட்டங்கள் தொடர்பான நடைமுறை ஒழுங்குகள் பற்றிய பொது அறிவுறுத்தல்களைச் சங்கத்தின் சகல கிளைகளிலும் பார்வைக்கு வைக்கப்படும் என்பதன்னை அறியத்தருகின்றோம

(c-9345)

செ.ம.ஜெயரத்தினம்.
செயலாளர்.
கரைச்சி தெற்குப.நோ.கூ.சங்கம்
கிளிநொச்சி

### தீர்மானத்திற்கு வழங்கிய இணை அனுசரணையிலிருந்து விலகினாலும்

# ஐ.நா. மனித உரிமைகள் பேரவையிலிருந்து விலகும் நிலைப்பாடு அரசிற்கு இல்லை!

## இராஜாங்க அமைச்சர் தயாசிறி விளக்கம்

## அழுத்தங்களைப் பிரயோகித்து கட்டுப்படுத்த இடமளிக்க முடியாது

(கொழும்பு)

**ஜெனிவா மனித உரிமைகள் பேரவையின் 31/1 தீர்மானத்துக்கு வழங்கிய இணை அனுசரணையிலிருந்து விலகினாலும் மனித உரிமைகள் பேரவையிலிருந்து விலகும் நிலைப்பாடு அரசாங்கத்திற்கு இல்லை எனத் தெரிவித்த ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளரும் கமத்தொழில் துறை இராஜாங்க அமைச்சருமான தயாசிறி ஜெயசேகர, சிறுபான்மை சமூகத்தினருக்கு நாம் ஆதரவாக இருக்கின்றபோதிலும் அழுத்தங்களைப் பிரயோகிப்பதன் மூலம் அரசாங்கத்தை கட்டுப்படுத்துவதற்கு ஒருபோதும் இடமளிக்க முடியாது என்றும் தெரிவித்தார்.**

சமகால அரசாங்கம் அதிகூடிய சிங்கள பௌத்த மக்களின் வாக்குகளால் தெரிவு செய்யப்பட்டதாகும். எனவே கடந்த அரசாங்கத்தைப் போன்று ரவூப் ஹக்கீம், றிசாத் பதியுதீன் மற்றும் எம்.ஏ. சுமந்திரன் போன்றோரால் ஆட்சி செய்யப்பட்டதைப் போன்ற நிலைமை தற்போதில்லை என்றும் தயாசிறி தெரிவித்தார்.

சுதந்திரக்கட்சி தலைமையகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது "இணை அனுசரணையிலிருந்து விலகுவதாக அரசாங்கம் அறிவித்த போதிலும் தீர்மானத்திலிருந்து முழுமையாக விலக முடியாது என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்திருக்கிறார்.



இந்த கருத்து தொடர்பில் அரசாங்கத்தின் நிலைப்பாடு என்ன? " என ஊடகவியலாளர்எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்த போதே தயாசிறி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இது சுமந்திரன் போன்றவர்களது அரசாங்கமல்ல. அதிகூடிய முஸ்லிம்,பௌத்த மக்களின் வாக்குகளால் தெரிவு செய்யப்பட்ட அரசாங்கமாகும். தமிழ் மற்றும் முஸ்லிம் மக்கள் ஓரளவு வாக்களித்திருந்தார்கள். தற்போதைய அரசாங்கம் ரணில் அரசாங்கத்தைப் போன்று ரவூப் ஹக்கீம், றிசாத் பதியுதீன் மற்றும் எம்.ஏ. சுமந்திரன் போன்றோரால் ஆட்சி செய்யப்பட்டதைப் போன்றதல்ல.

உதாரணமாக கடந்த ஜனாதிபதித் தேர்தலில் வடக்கில் நூற்றுக்கு 85 வீதமான மக்கள் சஜித் பிரேமதாஸவுக்கே வாக்களித்திருந்தனர். அதேபோன்று சிங்கள பௌத்த மக்களில் 85 வீதமானோர் கோட்டாபய ராஜபக்ஷவுக்கு வாக்களித்திருந்தார்கள்.

இவ்வாறான பிளவினை சுமந்திரன் போன்றோரே ஏற்படுத்தியிருக்கிறார்கள். எவ்வாறிருப்பினும் சிறுபான்மையினருக்கு எமது முழுமையான ஆதரவு இருக்கிறது. ஆனால் அதற்காக அரசாங்கத்தை கட்டுப்படுத்த ஒருபோதும் இடமளிக்க முடியாது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## அதிபர், ஆசிரியர்கள் யாழ்.நகரில் கவனயீர்ப்புப் போராட்டம்







(யாழ்ப்பாணம்)

கடந்த23 வருடங்களாக நீடிக்கும் அதிபர், ஆசிரியர்களின் சம்பள முரண்பாட்டுக்குத் தீர்வு காணுதல், அதிபர், ஆசிரியர் சேவைகளை ஒருங்கிணைந்த சேவைகளாக மாற்றியமைத்தல் உள்ளிட்ட ஆறு பிரதான கோரிக்கைகளை முன்வைத்து இலங்கை ஆசிரியர் சேவை சங்கம், இலங்கை ஆசிரியர் சங்கம் உள்ளிட்ட பல்வேறு தொழிற்சங்கங்கள் நேற்றுப் புதன்கிழமை நாடளாவிய ரீதியில் சுகவீன விடுமுறைப் போராட்டத்தை முன்னெடுத்தன.

குறித்த போராட்டத்துக்கு வலுச் சேர்க்கும் முகமாக வடமாகாண அதிபர், ஆசிரியர்கள் இணைந்து நேற்று முற்பகல் 10.45 மணி முதல் யாழ். நகரில் கவனயீர்ப்புப் போராட்டம் மற்றும் பேரணியில் ஈடுபட்டனர். (இ-18-101-105)

## வடக்கில் இருவருக்கு புதிய நியமனங்கள்






(யாழ்ப்பாணம்)

வடமாகாண ஆளுநர் செயலகத்தில் வைத்து நேற்று ஆளுநரின் செயலாளர் எஸ்.சத்தியசீலனால் இரு புதிய நியமனங்கள் வழங்கப்பட்டன.

வடமாகாண சிறுவர் நன்னடத்தை மற்றும் பராமரிப்பு திணைக்களத்தின் ஆணையாளராக ராஜேந்திரம் குருபரன் தனது நியமனக் கடிதத்தை வடமாகாண ஆளுநரின் செயலாளரிடமிருந்து பெற்றுக்கொண்டார்.இவர் முன்பு வடமாகாண விளையாட்டுத் துறை திணைக்களத்தின் பணிப்பாளராக கடமையாற்றியமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை வடமாகாண விவசாய அமைச்சின் மீன்பிடித்துறை உதவிப் பணிப்பாளராக கடமையாற்றிய பாலன் முகுந்தன் விளையாட்டுத்துறை திணைக்களத்தின் பணிப்பாளராக தனது புதிய நியமனக் கடிதத்தை ஆளுநரின் செயலாளரிடமிருந்து பெற்றுக் கொண்டார். (இ-7)

## ரஞ்சன் பிணையில் விடுவிப்பு; வெளிநாடு செல்லத்தடை



(கொழும்பு)

நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்க பிணையில் விடுவிக்கப்பட்டார். நுகேகொடை நீதவான் நீதிமன்றில் நேற்றுப் புதன்கிழமை அவர் ஆஜர்படுத்தப்பட்டதைத் தொடர்ந்தே அவர் பிணையில் விடுவிக்கப்பட்டார். அத்தோடு அவருக்கு வெளிநாடுகளுக்குச் செல்வதற்கும் தடை விதித்து நீதிமன்றம் உத்தரவிட்டது. (இ-7)

# அவிஷ்க, மெண்டிஸ் அசத்தல் சதம்; தொடரை வென்றது இலங்கை

மேற்கிந்திய தீவுகளுக்கு எதிரான இரண்டாவது ஒருநாள் போட்டியில் குசல் மெண்டிஸ் மற்றும் அவிஷ்க பெர்னாண்டோ ஆகியோரின் அபார துடுப்பாட்டத்துடனும், பந்துவீச்சாளர்களின் பங்களிப்புடனும் இலங்கை அணி 161 ஓட்டங்களால் அபார வெற்றிபெற்று, தொடரை 2-0 என கைப் பற்றியது.

போட்டியின் நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற மேற்கிந்திய தீவுகள் அணி முதலில் துடுப்பெடுத்தாடும் வாய்ப்பை இலங்கை அணிக்கு வழங்கியது. அதன்படி, களமிறங்கிய இலங்கை அணி 50 ஓவர்கள் நிறைவில் 8 விக்கெட்டுகளை இழந்து 345 ஓட்டங்களை குவித்தது.

இலங்கை அணி சார்பாக ஆரம்பத்தில் அணித் தலைவர் திமுத் கருணாரத்ன மற்றும் 100 ஆவது ஒருநாள் போட்டியில் விளையாடிய குசல் பெரேரா ஆகியோர் குறைந்த ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து வெளியேறினர். ஆனாலும், அடுத்ததாக களமிறங்கிய குசல் மெண்டிஸ், ஆரம்ப துடுப்பாட்ட வீரர் அவிஷ்க பெர்னா ண்டோவுடன் இணைந்து சிறப்பாக ஓட்டங்களை குவித்தார்.

இவர்கள் இருவரும் மூன்றாவது விக்கெட்டுக்காக 239 ஓட்டங்களை இணை ப்பாட்டமாக பெற்றனர். இந்த இணைப்பாட்டமானது இலங்கையில் வைத்து இரண்டாவது விக்கெட்டுக்காக பெறப்பட்ட அதிகூடிய இணைப்பாட்டமாக பதிவாகியது.

தனது இரண்டாவது ஒருநாள் சதத்தை பதிவுசெய்த குசல் மெண்டிஸ் 119 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க, அவிஷ்க பெர்னாண்டோவும் தன்னுடைய இரண்டாவது சதத்தை கடந்து 127 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். இவர்களின் ஆட்டமிழப்பின் பின்னர் களமிறங்கிய திசர பெரேரா 36 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க, வனிந்து ஹசரங்க மற்றும் இசுரு உதான ஆகியோர் தலா 17 ஓட்டங்களை பெற்றனர்.

மேற்கிந்திய தீவுகள் அணியின் பந்து வீச்சை பொருத்தவரை ஷெல்டன் கொட்ரல் 4 விக்கெட்டுகளையும், அல்ஸாரி ஜோசப் 3 விக்கெட்டுகளையும் அதிகபட்சமாக வீழ்த்தினர்.

இதேவேளை, இலங்கை அணியின் இந்த ஓட்ட எண்ணிக்கையானது ஒருநாள் போட்டிகளில் சிக்ஸர்கள் இல்லாமல் பெறப்பட்ட அதிகூடிய ஓட்ட எண்ணிக்கையாக பதிவாகியது.

கடினமான வெற்றி இலக்கை நோக்கி துடுப்பெடுத்தாட களமிறங்கிய மேற்கிந்திய தீவுகள் அணி 39.1 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 184 ஓட்டங்களை பெற்று, 161 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியை கண்டது. இதன்படி, ஓட்டங்களின் அடிப்படையில் (161) மேற்கிந்திய தீவுகள் அணிக்கு எதிராக பெற்ற மிகச்சிறந்த வெற்றியையும் இலங்கை அணி பதிவுசெய்தது.

மேற்கிந்திய தீவுகள் சார்பாக சிறந்த ஆரம்ப இணைப்பாட்டம் பெறப்பட்ட போதும், அதன் பின்னர் களமிறங்கிய வீரர்கள் எதிர்பார்த்த அளவில் பிரகாசிக்கவில்லை. டெரன் பிராவோ, ரொஸ்டன் ஷேஸ் ஆகியோர் ஓட்டங்களை குவிக்க தொடங்கிய போதும், மிகப்பெரிய ஓட்ட எண்ணிக்கைக்கு செல்ல த்வறியிருந்தனர். இதில், கீரன் பொல்லார்ட் வந்த வேகத்தில் ஓட்டங்கள் இன்றி, வனிந்து ஹஸரங்கவின் முதல் பந்தில் ஆட்டமிழந்தார்.




ஒரு பக்கம் விக்கெட்டுகள் விழுந்து கொண்டிருக்க, களத்தில் இருந்து துடுப்பெடுத்தாடிய நிக்கோலஸ் பூரன் ஓட்டங்களை பெற்றுக்கொண்டார். எனினும், மேற்கிந்திய தீவுகள் அணியின் ஓட்ட வேகம் குறைவாக நகர்ந்ததன் காரணமாக அவரின் முயற்சியும் வீணாக, அணியால் வெற்றியிலக்கை அடையமுடியவில்லை.

மேற்கிந்திய தீவுகள் சார்பாக அதிபட்சமாக ஷேய் ஹோப் 51 ஓட்டங்களையும், நிக்கோலஸ் பூரன் 31 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர். இலங்கை அணியின் பந்துவீச்சில் வனிந்து ஹசரங்க மற்றும் லக்ஷான் சந்தகன் ஆகியோர் தலா 3 விக்கெட்டுகளையும், நுவன் பிரதீப் 2 விக்கெட்டுகளையும் அஞ்செலோ மெதிவ்ஸ் ஒரு விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரை சிறந்த துடுப்பாட்டம், பந்துவீச்சு மற்றும் களத்தடுப்பு என அனைத்திலும் பிரகாசித்த இலங்கை அணி 2-0 என கைப்பற்றியுள்ளது. இந்த நிலையில், இரண்டு அணிகளுக்கும் இடையிலான மூன்றாவது ஒருநாள் போட்டி எதிர்வரும் முதலாம் திகதி பல்லேகலை சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் நடை பெறவுள்ளது.




## கொரோனா வைரஸ் கட்டுக்குள் வராவிடில் டோக்கியோ ஒலிம்பிக் போட்டிகள் ரத்து?




உலகையே அச்சுறுத்தியுள்ள கொரோனா வைரஸ் கட்டுக்குள் வராவிடில் டோக்கியோ ஒலிம்பிக் போட்டிகள் ரத்து செய்யப்பட வாய்ப்புள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளது.


டோக்கியோ ஒலிம்பிக் போட்டிகள் ஜப்பான் தலைநகர் டோக்கியோவில் வருகிற ஜூலை 24-ம் தேதி முதல் ஆகஸ்டு 9-ம் தேதி வரை நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.


அதேவேளையில், சீனாவில் பரவிய கொரோனா வைரஸ் உலகம் முழுவதையும் அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கியுள்ளது. ஒலிம்பிக் போட்டிகள் நடத்த திட்டமிடப்பட்டுள்ள ஜப்பானையும் கொரோனா வைரஸ் தாக்கம் விட்டு வைக்கவில்லை. இதனால், வரும் ஜூலை மாதம் ஒலிம்பிக் போட்டிகள் ஜப்பானில் திட்டமிட்டபடி நடத்தப்படுமா? என்று கேள்விகள் எழுந்தன.

இந்த நிலையில், மே மாதத்திற்குள் கொரோனா வைரஸ் கட்டுக்குள் வராவிடில் ஒலிம்பிக் போட்டிகள் ரத்து செய்யப்பட வாய்ப்பு உள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளது. சர்வதேச ஒலிம்பிக் கமிட்டி உறுப்பினர் கூறியதாக அசோசியேட் பிரஸ் செய்தி நிறுவனம் மேற்கூறிய தகவலை வெளியிட்டுள்ளது.

டோக்கியோ ஒலிம்பிக்கை வேறு இடத்திற்கு மாற்றவோ, ஒத்திவைக்கவோ திட்டமில்லை எனவும் ஒலிம்பிக் கமிட்டி உறுப்பினர் கூறியதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

## ஐசிசி துடுப்பாட்ட தரவரிசை;முதல் இடத்தை ஸ்மித்திடம் பறிகொடுத்த கோலி





நியூசிலாந்துக்கு எதிரான வெலிங்டன் டெஸ்டில் சொதப்பியதால் ஐசிசி பேட்டிங் தரவரிசையில் முதல் இடத்தில் இருந்து 2-வது இடத்திற்கு சரிந்தார் விராட் கோலி.

ஐசிசி பேட்டிங் தரவரிசை: முதல் இடத்தை இழந்தார் விராட் கோலி- 10-வது இடத்தில் மயாங்க் அகர்வால்

ஐசிசி-யின் டெஸ்ட் போட்டிக்கான பேட்ஸ்மேன் தரவரிசையில் முதல் இடத்தை பிடிக்க ஸ்மித், விராட் கோலி இடையே கடும் போட்டி நிலவி வருகிறது. ஆஷஸ் தொடரில் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தியதால் விராட் கோலியை பின்னுக்குத்தள்ளி ஸ்மித் முதல் இடத்தை பிடித்தார்.

அதன்பின் வங்காளதேசம் அணிக்கெதிராக சதம் அடிக்க மீண்டும் விராட் கோலி முதல் இடத்தை பிடித்தார். இதற்கிடையே பாகிஸ்தான் மற்றும் நியூசிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடரில் ஸ்மித் சிறப்பாக விளையாடவில்லை.

இந்நிலையில் நியூசிலாந்துக்கு எதிரான வெலிங்டன் டெஸ்டில் விராட் கோலி மோசமான ஆட்டத்தை வெளிப்படுத்தியதால் மீண்டும் 2-வது இடத்திற்கு சரிந்துள்ளார். ஸ்மித் முதல் இடத்தை பிடித்துள்ளார்.

ஸ்மித் 911 புள்ளிகளும், விராட் கோலி 906 புள்ளிகளும் பெற்றுள்ளனர். கேன் வில்லியம்சன் 853 புள்ளிகளுடன் 3-வது இடத்திற்கு முன்னேறியுள்ளார். மார்னஸ் லபுஸ்சேன் 827 புள்ளிகளுடன் 4-வது இடத்திற்கு சரிந்துள்ளார். பாபர் அசாம் (800), டேவிட் வார்னர் (793) ஐந்தாவது மற்றும் 6-வது இடத்தை பிடித்துள்ளனர்.

ஜோ ரூட் (764) 7-வது இடத்திலும், ரகானே (760) 8-வது இடத்திலும், புஜாரா (757) 9-வது இடத்திலும், மயங்க் அகர்வால் (727) 10-வது இடத்திலும் உள்ளனர்.

## மரண அறிவித்தல்

### அமரர் விஸ்வலிங்கம் நாகேஸ்வரி



பிறப்பு 1939.08.16 இறப்பு 2020.02.25

யாழ்.கும்பிழாவளை மேற்கு அளவெட்டியை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட அமரர் **விஸ்வலிங்கம் நாகேஸ்வரி** அவர்கள் 25.02.2020 செவ்வாய்க்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற முருகேசு கண்ணை தம்பதியின் அன்பு மகளும், காலஞ்சென்ற சிதம்பரி கற்பகம் தம்பதியரின் அன்பு மருமகளும், அமரர் விஸ்வலிங்கம் அவர்களின் அன்பு மனைவியும், சிவமலர், சத்தியமலர், சிறிகாந்தராசா (பிரான்ஸ்), சாந்தமலர், யோகமலர் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், சிவபாக்கியம் அவர்களின் பாசமிகு சகோதரியும், பாலசுப்பிரமணியம், யோகலிங்கம், அன்பரசி (பிரான்ஸ்), மகேஸ்வரன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும்

சுஜீபன் தர்சினி (பிரான்ஸ்), ரஜீபன் ருக்ஷா (பிரான்ஸ்), கஜனியா பிரதீப், வஜீபன், மயூராஜ் செல்வமலர், கிசோபா, அபிரா, கயிறா, பிரணவன் (பிரான்ஸ்), லக்ஷன், ஜாதவன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு பேத்தியாரும் லியானா, மித்ரா (பிரான்ஸ்) அவர்களின் அன்புப் பூட்டியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 28.02.2020 நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக வயிரவர் அடைப்பு மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இத் தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(2391)

கும்பிழாவளை மேற்கு,
அளவெட்டி.

075 6750 698

குடும்பத்தினர்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

கடந்த வருடம் 10.03.2019 ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்த எமது அன்புத் தந்தை

### அமரர் சுந்தரம் ஈஸ்வரதாஸ்

மண்ணில் 1926 . 12 . 20



விண்ணில் 2019 . 03 . 10

**ஆண்டொன்று கழிந்ததையா ஆறாமல் தவிக்கிறோம்**
**ஏற்றமுற நாம் வாழ என்றும் உழைத்தீர்கள்**
**மாற்றமில்லை என்றுமுமை மறவாது எம் நெஞ்சு**

(2395)

உங்கள் ஆத்மா சாந்தியடைய சாளம்பை முருகனைப் பிரார்த்திக்கிறோம்.

கோட்டைக்காடு,
மல்லாகம்.

குடும்பத்தினர்.

# கண்ணீர் அஞ்சலி




இ.சோமசுந்தரம்



ஆ.தேவராஜா



தே.சுகந்தினி



தே.சுதர்சன்

சோமசுந்தரம் கமலநாதன் அவரது தந்தையார் அவரது முக்கிய குடும்ப உறுப்பினர்கள் விபத்தில் அகாலமரணமடைந்த செய்தி கேட்டு அதிர்ச்சியடைகின்றேன். அன்னாரது இழப்பு ஈடு செய்ய முடியாததும், ஆற்றொணா துன்பத்தில் ஆழ்த்தியுள்ளது. சோ.கமலநாதனுக்கும் உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த கவலையை தெரிவிப்பதோடு அவர்களின் ஆத்மா காரை சௌந்தராம்பிகை சமேத நடராஜரின் பாதங்களில் சேரப் பிரார்த்திக்கின்றேன்.

(C-9342)

*கஜமுகன் ஹாட்வெயர்ஸ்,*
*147, 149, ஸ்ரான்லி வீதி,*
*யாழ்ப்பாணம்.*

**021 222 2833**

*இ.ச.பே.நாகரத்தினம்*
*உரிமையாளர்.*

# யமுனா ஏரியின் தடுப்பு மதிலை மாற்றியமைக்க அங்கஜன் நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

தொல்பொருள் திணைக் களத்துக்குச் சொந்தமான நல் லூர் யமுனா ஏரியின் தடுப்பு மதிலை மக்கள் கோரிக்கைக்கு அமைய யாழ்.மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான அங்கஜன் இராமநாதன் மாற்றியமைப்பதற்கான அடிக்கல்லை கடந்த 22 ஆம் திகதி நாட்டினார். (இ-10)

# மாணவர்கள் கௌரவிப்பு



(யாழ்ப்பாணம்)

யாழ்.ஒஸ்மானியாக் கல்லூரியில் தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றி சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுக் கொண்ட மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு சர்வதேச யாழ்ப்பாணம் முஸ்லிம் சமூகத்தின் ஏற்பாட்டில் அண்மையில் ஒஸ்மானியாக் கல்லூரி அதிபர் ஜனாப் எம்.சேகுராஜிது தலைமையில் கல்லூரியின் மஹ்மூத் மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் யாழ்ப்பாணம் பிரதேச செயலாளர் சாம்பசிவம் சுதர்சன் பிரதம விருந்தினராகக் கலந்து கொரண்டார். (இ-7)





போக்கட்டி அ.த.க. பாடசாலையின் மாணவத் தலைவர்களுக்கான சின்னம் சூட்டும் நிகழ்வு கடந்த திங்கட்கிழமை அதிபர் அபராஜிதன் தலைமையில் இடம்பெற்றது. இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக முன்னாள் ஆசிரியரும் யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரி விரிவுரையாளருமான தி.சிவகஜன், பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்றுக்குழுச் செயலாளர் மா.மயூரன், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

(படங்கள்:-கொடிகாமம் செய்தியாளர்)

# நலம் தரும் ஜோதிட குறியீடுகள்

## முன் பிறவி வினைகள் போக்கும் ராமேஸ்வரம்

ஜாதகத்தில் ஜென்ம லக்னத்திற்கு ஒன்பதாம் பாவம் போன பிறவியைக் குறிக்கும் பாவமாகும். பிறவியில் மனிதன் செய்த கர்மங்களை குறிக்கும் பாவம் லக்னத்திற்கு ஆறாம் பாவமாகும். அது எப்படியென்றால், போன பிறவியைக் குறிக்கும் ஒன்பதாம், பாவத்தை போன பிறவியின் ஜென்ம லக்னமாகப் பாவித்துக் கொண்டு பார்க்கும் பொழுது அதற்கு பத்தாமிடமாக எந்த இடம் வருகிறதோ, அந்த இடம் தற்போதைய பிறவி லக்னத்திற்கு ஆறாமிடமாக வரும் காலப்புருஷ லக்னமான மேஷத்திற்கு ஆறாமிடம் கன்னி இராசியாகும்.

ஒவ்வொரு பாவத்திற்கும், அதற்கு நேர் ஏழாவது பாவம், நிவர்த்தி பாவமாகும். அதன்படி கன்னி இராசிக்கு நேர் ஏழாவது இராசி மீனராசியாகும். மீன இராசி ஒரு உபய இராசி மற்றும் நீர் இராசியாகும். அதாவது உபய நீரைக் குறிக்கும் இராசியாகும். உபய நீர் என்பது ஒரு குறிப்பிட்ட எல்லைக்குள் அசைந்து கொண்டிருக்கும் நீராகும். கடல் நீர்தான் கரையை தாண்டாமல் கடலுக்குள்ளேயே அலை அலையாய் அசைந்து கொண்டிருக்கும். எனவே உபய நீர் என்பது கடல் நீராகும். உபய இராசியான மீன இராசி கடல் இராசியாகும்.

கடலுக்குள் பாதையும், கடலை ஒட்டி பாதமும் அமைந்துள்ள இடம் ராமேஸ்வரமாகும். கடலுக்குள் ராமர் பாலம் அமைந்துள்ளது. நடைபாதையைக் குறிக்கும் கிரகம் சனியாகும். ராமேஸ்வரம் கடற்கரையில் ராமர் பாதம் அமைந்துள்ளது. பாதத்தைக் குறிக்கும் கிரகம் குருவாகும். பாதவிரல்களைக் குறிக்கும் கிரகம் புதனாகும். நட்சத்திரங்களில் பாதத்தைக் குறிக்கும் நட்சத்திரம் ரேவதியாகும். அதன் அதிபதி புதனாகும்.

புதனின் அதிதேவதை விஷ்ணுவாகும். எனவே ரேவதி நட்சத்திரம் விஷ்ணு பாதமாகும். ராமர் விஷ்ணுவின் அவதாரமாகும். ராமர் நடந்து சென்ற பாதை கடலுக்குள் உள்ளது. அந்த நடைபாதையைக் குறிக்கும் நட்சத்திரம் உத்திரட்டாதியாகும்.

மீன இராசியின் அதிபதி குருவாகும். மீன இராசிக்குள் பூரட்டாதி, உத்திரட்டாதி, ரேவதி ஆகிய மூன்று நட்சத்திரங்கள் அமைந்துள்ளன. பூரட்டாதி, உத்திரட்டாதி நட்சத்திரங்களை இறைவனின் இரு திருப்பாதங்களாக குறிப்பிடுவர். மேற்கண்ட ஆய்வுகளின் மூலம் மீன இராசி குறிக்கும் இடம் ராமேஸ்வரம் என்பதை அறிய முடிகிறது.

போன ஜென்மத்தில் செய்த கர்மங்கள் தீர ராமேஸ்வரம் சென்று தீர்த்தமாட வேண்டும் என்பதை ஆய்வின் மூலம் அறிய முடிகிறது. நம் முன்னோர்கள் காலம் காலமாக ராமேஸ்வரம் சென்று தீர்த்தமாடி வருகின்றனர். முன் ஜென்ம பாவங்கள் தீர ராமேஸ்வரம் சென்று தீர்த்தமாட வேண்டுமென்ற குறிப்பு பல நாடி ஜோதிட நூல்களில் காணப்படுகிறது.

# சொற்பொழிவு

(யாழ்ப்பாணம்)

நீர்வேலி கந்தசுவாமி கோவில் பிரதான மண்டபத்தில் நாளை 28 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 5.30 மணியளவில் சமயஜோதி க.நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் சிவநெறிச் செம்மல் சைவசின்மயர் நித்தியபாபுதரனால் குருவாய் வருவாய் எனும் தலைப்பில் சொற்பொழிவு இடம்பெறும். (இ-7)

# செயற்பட்டு மகிழ்வோம்

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை சுப்பிரமணிய வித்தியாசாலை செயற்பட்டு மகிழ்வோம் விளையாட்டு நிகழ்வு நாளை 28 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் பாடசாலை மைதானத்தில் அதிபர் ஜெ.கோகுலவாசன் தலைமையில் நடைபெறும். இதில், பிரதம விருந்தினராக வலி.மேற்கு பிரதேச சபைத் தவிசாளர் தர்மலிங்கம் நடனேந்திரன், சிறப்பு விருந்தினராக, மூளாய் சைவப் பிரகாச வித்தியாலய பிரதி அதிபர் திருமதி நேசமலர் மரியதாசன் ஆகியோர் கலந்து கொள்வர். (இ-5)

# இராசி பலன்

**மீனம்:** கற்பனை மிகுதியான நாள், போசன சுகமுண்டு, ஆன்மீக சிந்தனை மேலோங்கும் நாள், போசன நன்மையுண்டு, ஆரோக்கியமான நாள்.

**மேடம்:** எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்டும் சூழ்நிலை உருவாகும், சுப செலவுகள் மேலோங்கும் நாள், உறவினர் விவகாரங்களில் தேவையில்லாமல் தலையிடுவதை தவிர்ப்பது நல்லது.

**இடபம்:** பொருளாதார நிலையில் முன்னேற்றம் காண்பீர்கள், கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம், எடுதத காரியங்கள் எளிதில் கைகூடும்.

**மிதுனம்:** செய் தொழிலில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள், போசன சுகமுண்டு.

**கும்பம்:** உஷ்ண சம்பந்தமான ரோக பயமுண்டு, பெண்கள் வழியில் பெருமைக்குரிய சம்பவங்கள் இடம்பெறலாம், வாக்கு மேன்மையுண்டு.

**கடகம்:** ஆன்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு, செய் தொழிலை விருத்தி செய்யும் எண்ணம் உருவாகும்.

**மகரம்:** உறவினர்கள் உங்களின் முன்னேற்றத்தில் அக்கறை காட்டுவர், மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், காரிய அனுகூலமுண்டு.

**சிம்மம்:** மனதில் இனம்புரியாத கவலைகள் தோன்றி மறையும், எடுத்த காரியங்கள் உடனுக்குடன் முடியாமல் தாமதமாகலாம், பிரயாண பயமுண்டு.

**தனுசு:** நண்பர்கள் சந்திப்பால் பரவசமடைவீர்கள், பெரிய மனிதர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், போசன நன்மையுண்டு.

**விருச்சிகம்:** பிறருக்கு உதவும் எண்ணம் உருவாகும், தேவையற்ற விவாதங்களை தவிர்ப்பது நல்லது, தாழ்ந்த சுபாவமுண்டு, புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**துலாம்:** செய் தொழில் மேன்மையுண்டு, காரிய அனுகூலமுண்டு, விருந்துகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, எதிர்ப்பாக இருந்தவர்கள் மனம் மாறுவர்.

**கன்னி:** எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள்.

**கிரகநிலை**

சுக்., சந்
ராகு
சூரி
புத
சனி,கேது, குரு,செவ்

சந்திராஷ்டமம்
பூரம், உத்தரம்

**27.02.2020**

மாசி 15, வியாழக்கிழமை
சூரிய உதயம் காலை 6.32 மணிக்கு
சதுர்த்தி பின்னிரவு 5.16 மணிவரை
ரேவதி முன்னிரவு 11.56 மணிவரை
சுபநேரம் 7.59-9.29 மணிவரை
இராகுகாலம் 1.59-3.29 மணிவரை
சதுர்த்தி விரதம்
அன்னதானத்திற்கு நிகர் என்ன தானம் உள்ளது

வளவன்

# கைகொடுக்கும் நண்பர்கள் அமைப்பின் 7 ஆவது ஆண்டு நிறைவு விழா

(யாழ்ப்பாணம்)

கைகொடுக்கும் நண்பர்கள் அமைப்பின் 7 ஆவது ஆண்டு நிறைவு விழா நாளை மறுதினம் சனிக்கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் அரியாலையிலுள்ள சர்வோதயம் மண்டபத்தில் அமைப்பின் இயக்குநர் அ.மௌலி தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வில் அமைப்பின் ஸ்தாபகர் மாவை ரி.நித்தியானந்தன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு "தற்கொலைகளை தடுப்பது எப்படி?" என்னும் தொனிப் பொருளில் சிறப்புரையாற்றவுள்ளார். மேலும் இந்நிகழ்வில் மனம் விட்டுப் பேசு எனும் நாடகம் மற்றும் பட்டிமன்றம் என்பனவும் சிறப்பு நிகழ்வாக சமூகத்திற்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கோடு சஞ்ஜை சிவாவின் இயக்கத்தில் உருவான "தளராதே" குறும்பட வெளியீடும் இடம்பெறும். (இ-7)

# 128 மெகாவோள்ட் மின்சாரத்தை தனியார் நிறுவனங்களிடமிருந்து கொள்வனவு செய்யத் தீர்மானம்

(கொழும்பு)



128 மெகாவோள்ட் மின்சாரத்தை தனியார் நிறுவனங்களிடமிருந்து உடனடியாகக் கொள்வனவு செய்ய மின்சக்தி மற்றும் சக்திவள அமைச்சு தீர்மானித்துள்ளது. இது தொடர்பாக அமைச்சர் மகிந்த அமரவீர சமர்ப்பித்த அமைச்சரவைப் பத்திரத்திற்கு அமைச்சரவையின் அனுமதி கிடைத்தது.

இது தொடர்பில் இலங்கை மின்சார சபைக்கு அறிவிக்கப்பட்டதாக அமைச்சின் ஊடகப் பேச்சாளர் சுலக்ஷன ஜெயவர்த்தன தெரிவித்தார்.

நாட்டில் நிலவும் வரட்சியான காலநிலை காரணமாக மின்சார விநியோகத்தை தடையின்றி மேற்கொள்ளும் நோக்கில் இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது. (இ-7)

## கேள்வி அறிவித்தல்

**பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை - கிளிநொச்சி**
**2020/2021 ஆம் வருடத்திற்கு தேவையான வழங்கல்கள்/சேவைகள் பெற்றுக்கொள்ளல்**

கிளிநொச்சி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனைக்கும், அதன் பிரிவுக்குட்பட்ட வைத்தியசாலைகளுக்கும் 2020/2021 ஆம் ஆண்டிற்கான பின்வரும் வழங்கல்களுக்கு/சேவைகளுக்கு கேள்விகள் கோரப்படுகின்றன.

| விடயம் | வழங்கல் சேவை எண்ணிக்கை | சேவைக்காலம் | மீளளிக்கப்படாத வைப்புத்தொகை (ரூபா) | மீளளிக்கப்படும் வைப்புத் தொகை (ரூபா) | மீளளிக்கப்படும் வைப்புத் தொகைக்கான காலம் |
|---|---|---|---|---|---|
| வாகனங்கள் சுத்திகரிப்பு செய்தல் | 47 (வாகனங்கள்) | 01.04.2020 - 31.03.2021 | 1,000.00 | 30,000.00 | 11.06.2020 |
| உலர் உணவு வழங்கல் | 2 வைத்தியசாலைகள் | 01.05.2020 - 30.04.2021 | 1,000.00 | 50000.00 | 11.06.2020 |

1) 2020/2021 ஆம் ஆண்டுக் காலப்பகுதிக்கு இவ் வழங்கல் சேவைகளுக்கு முத்திரையிடப்பட்ட கேள்விப்பத்திரங்கள் கோரப்படுகின்றன. விலைக் கேள்விதாரர்கள் உரிய விநியோகத்திற்கேற்ற வகையிலான வியாபார பதிவுடையவராக இருத்தல் வேண்டும்.
2) விண்ணப்பிக்கத்தகுதியானோர் கீழ் குறிப்பிடப்படும் தொகையை செலுத்துவதுடன் வழங்கல்கள்/சேவைகள் என்பவற்றுக்கான பொருத்தமான ஆவணங்களை சமர்ப்பித்து கேள்வி ஆவணங்களை 27.02.2020 தொடக்கம் 11.03.2020 வரை அலுவலக நாட்களில் காலை 9.00 மணி தொடக்கம் 15.30 மணிவரை கிளிநொச்சி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பர்ளர் பணிமனையில் பெற்றுக்கொள்ள முடியும்.
3) ஒரு வைத்தியசாலைக்கு அல்லது தொகுதிக்கு குறிப்பிட்ட ஒரு வழங்கல் சேவைக்கான ஒரு வழங்குநருக்கு ஒரு ஆவணத்தொகுதி மட்டுமே வழங்கப்படும்.
4) அரசாங்க ஒப்பந்தத்தை செய்யமுடியாதவாறு தடைசெய்யப்பட்டவர்களுக்கோ அல்லது தடைசெய்யப்பட்ட நிறுவனங்களுக்கோ கேள்விப்பத்திரங்கள் விநியோகிக்கப்படமாட்டாது.
5) கேள்விப்பத்திரங்கள் 12.03.2020 ஆம் திகதி மு.ப. 10.30 மணிக்கு முன் கிடைக்கக்கூடியவாறு தலைவர் கேள்விச்சபை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை. கிளிநொச்சி எனும் முகவரிக்கு பதிவுத்தபாலிலோ அல்லது நேரடியாக அலுவலக கேள்விப் பெட்டியில் இடமுடியும். தாமதமாக கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும் "வழங்கல்கள்/சேவைகள் விபரம், விண்ணப்பிக்கும் வைத்தியசாலை" போன்ற விபரங்கள் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் தெளிவாக எழுதப்பட்டிருத்தல் வேண்டும்.
6) கேள்விகள் யாவும் 12.03.2020 ஆம் திகதி மு.ப. 10.30 மணிக்கு திறக்கப்படும்.
7) 01.01.2020 ஆம் திகதிக்குப்பின் அந்தந்தப் பிரதேச செயலாளர்களிடம் இருந்து பெறப்பட்ட தமது சொத்துக்களின் பெறுமதியை உறுதிப்படுத்தும் சான்றுக் கடிதமும் (பி.எஸ்.எம்.201, பொது 170 படிவம்) அத்துடன் வங்கி உத்தரவாதக்கடிதம் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
8) ஏற்கனவே சேவையினை வழங்கி வரும் ஒப்பந்தக்காரர்கள் எதிர்வரும் காலங்களுக்கு புதியவர்களாகவே கருதி தீர்மானம் எடுக்கப்படும்.
9) கேள்வி நேரம் முடிவடைந்ததுடன் கேள்விப்பத்திரங்கள் திறக்கப்படும். விண்ணப்பதாரரோ அல்லது எழுத்து மூலம் நியமிக்கப்பட்ட பிரதிநிதியோ கேள்விகள் திறக்கும் போது சமுகமளிக்கலாம்.
10) கேள்வி தொடர்பான கேள்விச் சபையின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும். மேலதிக விபரங்களை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

தலைவர்,
பெறுகைகள் குழு,
பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, கிளிநொச்சி.
(C-9343)

## அகவை 60 இன் நிறைவு, பணி ஓய்வு வாழ்த்து




**திருமதி.ஜெயபவானி வேல்ராஜா**
(பயிற்றப்பட்ட விஞ்ஞான ஆசிரியை
யா/கோண்டாவில் இராமகிருஷ்ண ம.வி.)

வியப்புறு வகையில் விஞ்ஞான பாடம் நடாத்தும் வித்தகியும் எமது உயர்தர வகுப்பு உயிரியல் பிரிவு 76/78 தோழியும் மகாஜன அன்னையின் மகளும் ஆகிய ஜெயபவானியின் 60வது பிறந்தநாளினை வாழ்த்துவதோடு அவர்தம் ஓய்வுக்காலத்தில் சீரும் சிறப்பும் பொலியச் சிரித்த முகத்தோடு திகழ வாழ்த்துகின்றோம்.

**வாழ்த்துவோர்:**
**திருமதி தேவகி கணேந்திரன்**
(ஓய்வுநிலை ஆசிரியர்-யா/வீமன்காமம் ம.வி, மாவிட்டபுரம்)
**செல்வி.வேலுப்பிள்ளை பத்மலோஜினி**
(ஓய்வு நிலை பிரதி அதிபர், விஞ்ஞானபாட ஆசிரியை-யா/மகாஜனக் கல்லூரி)
**திரு மா.லி.பாஸ்கரன்**
(முன்னாள் இணைப்பாளர்-ஓய்வுநிலை RESC - யாழ்ப்பாணம்)
**செல்வி செ.கலாவல்லி**
(சங்கீத ஆசிரியை-யா/இணுவில் இந்துக் கல்லூரி)
(76/78 உயிரியல் பிரிவு மாணவர்கள்-மகாஜனக் கல்லூரி)
(2389)

## 32 வருடகால ஆசிரிய சேவையாற்றி ஓய்வு பெறும் நாளில் மணிவிழா நாயகியை வாழ்த்துகின்றோம்




ஆசிரியர் பணியை திறம்பட ஆற்றி ஓய்வு பெறும் ஆசிரியை
திருமதி.**ஜெயபவானி வேல்ராஜா**
(Science.Trd) (பகுதித்தலைவர், SLTS-I)
அவர்களின் மணிவிழா நாளில் அவர்களுக்கு பிறந்தநாள் நல்வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்வதுடன் அவரது ஓய்வுக் காலம் சிறப்பாகவும், நலமாகவும் அமைய எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்தித்து வாழ்த்துகின்றோம்.

**சேவை விபரம்**

| | |
|---|---|
| யா/கீரிமலை நகுலேஸ்வர ம.வி. | 1988.04.06 - 1991.02.04 |
| பலாலி ஆசிரியர் கலாசாலை | 1991.02.05 - 1992.02.11 |
| யா/கீரிமலை நகுலேஸ்வர ம.வி. | 1992.02.12 - 1993.02.11 |
| பலாலி ஆசிரியர் கலாசாலை | 1993.02.12 - 1993.12.31 |
| யா/வயாவிளான் மகா வித்தியாலயம் | 1994.01.01 - 1995.12.31 |
| கிளி/கனகபுரம் மகா வித்தியாலயம் | 1996.01.01 - 1996.11.14 |
| வவு/முதலியார் குளம் றோ.க.த.க. | 1996.11.15 - 1998.08.09 |
| கொ/கொட்டாஞ்சேனை முஸ்லிம் வித்தி | 1998.08.10 - 2003.03.27 |
| யா/சந்திரோதய வித்தியாலயம் | 2003.03.28 - 2010.07.14 |
| யா/கோண்டாவில் இராமகிருஷ்ண ம.வி. | 2010.07.15 - 26.02.2020 |

**"வாழ்க வாழ்கவென வாழ்த்துவோர்"**
**ஆசிரியர் நலன்புரிக் கழகம், யா/கோண்டாவில் இராமகிருஷ்ண ம.வி.**
(2378)



மாவிட்டபுரம் தெற்கு அ.மி.த.க. பாடசாலையின் அரங்கத் திறப்பு விழா அண்மையில் அதிபர் செ.டெ.புஸ்பகரன் தலைமையில் இடம்பெற்றது. இதில் பிரதம விருந்தினராக வலிகாமம் வலயக் கல்வி அலுவலக ஆசிரிய ஆலோசகர் திருமதி.பிரேமலோஜினி சுதேஸ்குமார் கலந்து கொண்டார்.

# போக்குவரத்தை ஒழுங்குபடுத்த இராணுவத்துடன் இணைகிறது கடற்படை, விமானப்படை!

(கொழும்பு)

**கொழும்பு மற்றும் புறநகர்ப்பகுதிகளில் போக்குவரத்து நெரிசலைக் குறைக்க களமிறக்கப்பட்டுள்ள இராணுவப் பொலிஸாருடன், விமானப்படை மற்றும் கடற்படையையும் இணைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது என பாதுகாப்புப் பணியாளர்களின் தலைமைத் தளபதி, இராணுவத் தளபதி லெப்டினனட் ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.**



தற்போது. போக்குவரத்து ஒழுங்குபடுத்தலில் சுமார் 150 இராணுவத்தினர் ஈடுபட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

பெலியாகொட, வெள்ளவத்தை, பாராளுமன்ற வீதி, நுகேகொட வீதி உள்ளிட்ட பல பகுதிகளில் இராணுவத்தினர் பணியில் அமர்த்தப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

போக்குவரத்து நெரிசலை ஒழுங்குபடுத்த கொழும்பின் பல்வேறு பகுதிகளிலும் இராணுவ மோட்டார் சைக்கிள் குழுக்கள் மற்றும் மொபைல் வாகனங்கள் நிறுத்தப்பட்டுள்ளன என்றும் இராணுவத் தளபதி தெரிவித்தார்.

கொழும்பில் காலையிலும் மாலையிலும் கடும் போக்குவரத்து நெரிசல் நிலவுவதால் மக்களின் அன்றாட நடவடிக்கைகளுக்கு பெரும் இடையூறாக மாறியுள்ளதாக இராணுவத் தளபதி மேலும் தெரிவித்தார். (இ-7)

## 45 பொலிஸ் அதிகாரிகளுக்கு திடீர் இடமாற்றம்

(கொழும்பு)

உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் பொலிஸ் தலைமையகம் 45 பொலிஸ் அதிகாரிகளை இடமாற்றம் செய்தது. 6 உப பொலிஸ்மா அதிபர்கள், 4 பொலிஸ் அத்தியட்சர்கள், 3 பிரதி பொலிஸ் அத்தியட்சர்கள், 6 உப பொலிஸ் அத்தியட்சர்கள், 9 பொலிஸ் பரிசோதகர்கள், 16 பிரதிப் பொலிஸ் பரிசோதகர்கள் ஆகியோருக்கே இவ்வாறு இடமாற்றம் வழங்கப்பட்டது. (இ-7)

## ஆட்சி மாற்றத்தின் பின்னரான தமிழர் அரசியல் செல்நெறி

(யாழ்ப்பாணம்)

ஒருமித்த கருத்தும் ஒருமித்த பயணமும், புதிய ஆட்சி மாற்றத்திற்குப் பின்னரான தமிழ் அரசியல் செல்நெறி நாளை மறுதினம் 29 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 2.59 மணியளவில் யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறும். இதில் சிவில் சமூக பிரதிநிதிகளின் விமர்சனங்களுக்கு தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் ஜனாதி பதி சட்டத்தரணியும் பாராளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் பதிலளிப்பார். (இ-5)

## பாகிஸ்தானால் இலங்கை மாணவர்களுக்கு ஆயிரம் புலமைப்பரிசில்கள்



(கொழும்பு)

பாகிஸ்தான் அரசாங்கம் இலங்கை மாணவர்களுக்கு ஆயிரம் புலமைப் பரிசில்களை வழங்குவதற்கு தீர்மானித்துள்ளது.

பிரதமர் மகிந்த ராஜபக்ஷவுக்கும் பாகிஸ்தான் உயர்ஸ்தானிகர் மொஹமட் சாத்பட்டக்குக்குமிடையே அலரி மாளிகையில் கடந்த 24 ஆம் திகதி இடம்பெற்ற சந்திப்பின்போதே பாகிஸ்தான் உயர்ஸ்தானிகர் இந்த புலமைப்பரிசில்களை வழங்க உறுதியளித்தார்.

அல்லாமா இக்பால் புலமைப் பரிசில் திட்டத்தின்கீழ் இலங்கை மாணவர்களுக்கு இந்த புலமைப் பரிசில்கள் வழங்கப்படவுள்ளதுடன் இதற்கான விண்ணப்பங்களை எதிர்வரும் 29ஆம் திகதி வரை சமர்ப்பிக்கமுடியும் என்றும் அவர் தெரிவித்தார்.

மேலதிக தகவல்களை பாகிஸ்தான் உயர்ஸ்தானிகராலய இணையத்தளத்தில் பெற்றுக் கொள்ள முடியும்.

பாகிஸ்தான்-இலங்கை கல்வி ஒத்துழைப்புக்கான செயற்றிட்டத்தின் கீழ் இந்த புலமைப்பரிசில் வழங்கப்படவுள்ளதுடன் பொறியியல், மருத்துவம், தொழில்நுட்பம், பௌதீக விஞ்ஞானம் மற்றும் சமூக விஞ்ஞானம், பட்டப்பின் படிப்பு, கலாநிதி பட்டம் ஆகியவற்றை மேற்கொள்வதற்கு இதன் மூலம் வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

இலங்கை மாணவர்களுக்கு இத்தகைய புலமைப் பரிசில் வழங்குவது தொடர்பில் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ பாகிஸ்தான் உயர்ஸ்தானிகராலயத்துக்கு நன்றி தெரிவித்ததுடன் யுத்தத்தின் போதும் பல்வேறு வகைகளிலும் பாகிஸ்தான் வழங்கிய ஒத்துழைப்புகளுக்காக பிரதமர் நன்றி தெரிவித்தார். (இ-7)



வடமாகாண கிராம அபிவிருத்தித் திணைக்களத்தின் அனுசரணையுடன் தீவகம் தெற்கு வேலணை பிரதேச செயலகத்தால் நடத்தப்படும் வேலணை மகளிர் அபிவிருத்தி நிலையத்தின் ஆடைவடிவமைத்தல், அழகுக்கலை, மனைப்பொருளியல் கண்காட்சி அண்மையில் வேலணை செயலகத்தில் பிரதேச செயலர் அ.சோதிநாதன் தலைமையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட மேலதிகஅரசாங்க அதிபர் (காணி) சு.முரளிதரன், சிறப்பு விருந்தினராக வடமாகாண கிராம அபிவிருத்தித் திணைக்கள பணிப்பாளர் திருமதி.ந.இன்பராஜ், கௌரவ விருந்தினர்களாக கிராம அபிவிருத்தித் திணைக்கள யாழ்.மாவட்ட உத்தியோகத்தர் நா.பஞ்சலிங்கம், வேலணை மக்கள் ஒன்றிய தலைவர் அ.மங்களேஸ்வரன், லீ ஹெட்ஜஸ் ஆடைத்தொழிற்சாலை பணிப்பாளர் சி.நரேஷ் ஆகியோர் கலந்து கொண்டனர். இந் நிகழ்வில் தையல் போதனாசிரியர் திருமதி.க.பிரியதர்சினி மாணவிகளால் கௌரவிக்கப்பட்டார்.

# 45 இலட்சம் ரூபாய் கொள்ளை

# வெள்ளை வான் கடத்தல் குறித்த ஊடக சந்திப்பில் பங்குபற்றிய இருவர் உட்பட ஆறு பேர் கைது!

## ரி - 56 ரக துப்பாக்கி, துப்பாக்கி ரவைகள், 40 இலட்சம் ரூபா பணம், நகை பறிமுதல்



(பேலியகொட)

**கொள்ளைச் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் நாடாளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரட்னவின் வெள்ளை வான் கடத்தல் குறித்த ஊடகச் சந்திப்பில் பங்குபற்றிய இருவர் உட்பட 6 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டனர். இதன்போது குறித்த நபர்களிடமிருந்து ரி-56 ரக துப்பாக்கி ரவைகளையும் பொலிஸார் பறிமுதல் செய்தனர்.**

இது தொடர்பாக பொலிஸ் தலைமையகம் விடுத்துள்ள செய்திக் குறிப்பில்,

கம்பஹா பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கெஹெல்பெத்தர வீதி உடுகம்பொல பிரதேசத்திலுள்ள வைத்திய நிலையத்தினுள் இரவு வேளையில் உட்புகுந்து பணியில் ஈடுபட்டிருந்த நபரை துப்பாக்கி முனையில் மிரட்டி கை, கால்களைக் கட்டி 45 இலட்சத்து 96 ஆயிரம் ரூபாய் பெறுமதியான பணம் மற்றும் தங்க நகைகளை கொள்ளையிட்டமை தொடர்பாக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டன. இந்நிலையில் பேலியகொடை மேல் மாகாண வடக்கு குற்றப்பிரிவு உத்தியோத்தர்களால் நேற்று முன்தினம் மாலை 6.40 மணியளவில் சந்தேகநபர்கள் 6 பேர் கைது செய்யப்பட்டு மேலதிக விசாரணைக்காக கம்பஹா பொலிஸா ரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.


ரி-56 ரக துப்பாக்கி -1, ரி-56 ரக துப்பாக்கி ரவைகள்-15, குற்றத்திற்காக பாவிக்கப்பட்ட தொலைபேசி-5, கொள்ளையிடப்பட்ட தங்கச் சங்கிலி-2, குற்றத்திற்காக பாவிக்கப்பட்ட மோட்டார் சைக்கிள்-01, கொள்ளையிடப்பட்ட பணம்-40 இலட்சம் ரூபாய் என்பன மீட்கப்பட்டன.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் 35,39,45,46 வயதுடைய கொச்சிக்கடை, தும்மோதரை, கடவத்தை, கிரில்வலை, தெமழகமை மற்றும் மினுவான் கொடைப் பிரதேசங்களைச் சேர்ந்தவர்களாவர்.

மேலதிக விசாரணைகளை கம்பஹா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். சந்தேக நபர்களில் கடந்த தேர்தல் காலத்தில் வெள்ளை வான் சாரதிகள் என ஊடகங்களுக்கு கருத்துக் தெரிவித்த இரு சந்தேக நபர்களும் உள்ளடங்குகின்றனர்.

இவ்விருவர் மீதும் கொள்ளைச் சம்பவம், அரச உத்தியோகத்தர்களுக்கு அச்சுறுத்தல் விடுத்தமை, போலியான சான்றிழ்களை அச்சிட்டமை தொடர்பாக புதுக்கடை, நீர்கொழும்பு, அத்தனகல்லை, மஹர ஆகிய நீதிமன்றங்களில் வழக்குகள் விசாரணையில் உள்ளன என மேலும் தெரிவிக்கப்பட்டது. (இ-7)

# வான் குடைசாய்ந்தது மூவர் படுகாயம்



(திம்புள்ள.)

திம்புள்ள, பத்தனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஹற்றன் - நுவரெலியா பிரதான வீதியில் கொட்டகலை வைத்தியசாலைக்கு முன்பாக வான் குடை சாய்ந்தது.

இவ்விபத்தில், வாகனத்தில் பயணஞ்செய்த மூவர் படுகாயங்களுக்குள்ளாகி கொட்டகலை பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

ஹற்றன் பகுதியிலிருந்து தலவாக்கலை பகுதியை நோக்கி ஐஸ்கிறீம் வகைகளை ஏற்றிச் சென்றுகொண்டிருந்த வாகனமே இவ்வாறு விபத்துக்குள்ளாகினது.

இவ்விபத்தில் காயமடைந்தவர்கள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வருவதோடு, அவர்களில் குழந்தை ஒன்றும் அடங்குவதாக தெரிவிக்கப்பட்டது.வாகனத்தை பெண் சாரதி ஒருவரே செலுத்தியுள்ளதாகவும், அவருக்கு வாகனத்தை கட்டுப்படுத்த முடியாததன் காரணமாகவே விபத்து இடம்பெற்றதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளதுடன் விசாரணையை முன்னெடுத்துள்ளனர். (ஐ)

# சட்டவிரோத மீன்பிடியைத் தடைசெய்க சாகும்வரை உண்ணாவிரதம் ஆரம்பம்

(திருகோணமலை)

திருகோணமலை கடற்பரப்பில் இடம்பெற்றுவரும் சட்டவிரோத மீன் பிடியைத் தடைசெய்யக்கோரி சாகும்வரையிலான உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளதாக அதன் ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

திருகோணமலை திருக்கடலூரைச் சேர்ந்த வில்வராஜா ஜெயவேந்தன், மனையாவெளியைச் சேர்ந்த செலஸ்டியன் செல்வராசா, வீரநகரைச் சேர்ந்த சண்முகம் கணேஷ் ஆகிய மூவரும் இணைந்து திருகோணமலை சிவன்கோயில் முன்றலில் நேற்று புதன்கிழமை காலை இந்த உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்தனர்.





திருகோணமலை கடற்பரப்பில் சட்டவிரோத மீன்பிடி வலைகளைப் பயன்படுத்தல், வெடிபொருட்களைப் பயன்படுத்துதல் என்பனவற்றை நிறுத்தக்கோரியே இந்த உண்ணாவிரதப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

இப்பிரதேசத்தில், "சட்டவிரோத மீன்பிடி முற்றாக நிறுத்தப்படும் என்ற உறுதிமொழி தரப்படவேண்டும், ஜனாதிபதி, பிரதமர், கடற்றொழில் நீரியல் வள அமைச்சர், கைத்தொழில் பிரதி அமைச்சர், மாகாண ஆளுநர், கடற்றொழில் அமைச்சின் செயலாளர் ஆகியோர் இவ்விடயத்தை உடனடியாகக் கவனத்தில் எடுத்து உத்தரவாதம் தரவேண்டும், இல்லையேல் நாம் சாகும் வரையான போராட்டத்தைத் தொடருவோம்" என உண்ணாவிரதத்தில் ஈடுபட்டுள்ளவர்கள் தெரிவித்தனர்.

இந்தப் போராட்டத்திற்கு 16 மீனவ சங்கங்களின் பிரதிநிதிகள் ஆதரவு தெரிவித்துள்ளதுடன் போராட்டத்தை ஆரம் பித்து வைத்தனர். (இ-7)

# வடக்கில் அதிகூடிய வாக்குகள் பெற்று நாடாளுமன்ற உறுப்பினரானார் ஜனார்த்தனன்

(சாவகச்சேரி)

தென்மராட்சி பிரதேச செயலக தேர்தல் தொகுதியில் இளைஞர் பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிட்ட மீசாலை சீமா இளைஞர் கழகத்தைச் சேர்ந்த ஸ்ரீ.ஜனார்த்தனன் வடக்கு மாகா ணத்தில் அதிகூடிய வாக்குகளைப் பெற்றுள்ளார்.

406 வாக்குகளைப் பெற்ற ஜனார்த்தனன் மாவட்ட ரீதியில் முதலாம் இடத்தையும் அகில இலங்கை ரீதியாக 27 ஆவது இடத்தையும் பெற்று தென்மராட்சி பிரதேச இளைஞர் பாராளுமன்ற உறுப்பினராகத் தெரிவானார்.

2020 ஆம் ஆண்டிற்கான இளைஞர் பாராளுமன்றத் தேர்தல் கடந்த 22 ஆம் திகதி சனிக்கிழமை பிரதேச செயலகங்களில் இலத்திரனியல் முறை மூலம் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (இ-30)

# புகையிரத கடவை காப்பாளர்களின் பிரச்சினைகளை தீர்க்க ஜனாதிபதிக்கு மகஜர்

(குருமன்காடு)

புகையிரத கடவை காப்பாளர்களின் பிரச்சினைகளை தீர்க்கக் கோரி ஜனாதிபதியிடம் மகஜர் கையளிப்பது தொடர்பில் வடக்கு-கிழக்கு புகையிரதக்கடவை ஊழியர்கள் நேற்று வவுனியாவில் கலந்துரையாடல் ஒன்றில் ஈடுபட்டனர்.


வடக்கு-கிழக்கு புகையிரதக் கடவை காப்பாளர் ஒன்றியத்தின் தலைவர் றொகான் ராஜ்குமார் தலைமையில் குறித்த கலந்துரையாடல் நடைபெற்றது.

இதன்போது குறித்த கலந்துரையாடல் நிகழ்வில் கலந்துகொண்ட வடக்கு-கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த புகையிரதக்கடவை ஊழியர்கள் தங்கள் கோரிக்கைகளை முன்வைத்திருந்தனர். வடக்கு-கிழக்கு புகையிரதக்கடவை காப்பாளர் சங்கத்தினரும், அகில இலங்கை புகையிரதக்கடவை காப்பாளர் சங்கத்தினரும் இணைந்து தங்களின் கோரிக்கைகளை ஜனாதிபதி மற்றும் பிரதமரின் கவனத்திற்கு கொண்டு செல்லும் முகமாக புகையிரதக்கடவை ஒன்றியத்தின் தலைவரால் சமயத் தலைவர்கள் ஊடாக புகையிரதக் கடவை காப்பாளர்களின் கோரிக்கைகள் அடங்கிய மகஜர் கையளிக்க நடவடிக்கை எடுப்பதாக தீர்மானிக்கப்பட்டது.

புகையிரதத் திணைக்களத்தில் நிரந்தரமாக புகையிரதக்கடவை ஊழியர்களை உள்வாங்க வேண்டும் என்ற கோரிக்கையுடன், நீதி தேவதையின் உருவச்சிலையானது நீதிமன்றங்களில் மாத்திரம் மட்டுப்படுத்தப்படாது பாராளுமன்றத்தில் நிறுவப்பட்டு அங்கு நாட்டு மக்களுக்கான நீதி நிலைநாட்டப்பட வேண்டும் என்ற கோரிக்கையும்முன்வைக்கப்பட்டுள்ளது.(9-250)




# ஒரு இலட்சம் வேலைவாய்ப்பு; நேர்முகத் தேர்வில் இராணுவத்தினர்



(நெளுக்குளம்)

புதிய அரசினால் ஒரு இலட்சம் வேலைவாய்ப்புக்கான நேர்முகத் தேர்வுகள் அனைத்து நேற்றுக் காலை முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதில் வடக்கிலுள்ள அனைத்து மாவட்டங்களிலும் ஆயிரக்கணக்கான இளைஞர்.யுவதிகள் இவ் வேலைவாய்ப்புக்களுக்கு விண்ணப்பத்திருந்தனர். இவர்களுக்கான நேர்முகத் தேர்வுகள் நேற்றிலிருந்து எதிர்வரும் சனிக்கிழமை வரை இடம்பெறவுள்ளது.



இந்நிலையில் குறித்த நேர்முக தேர்வில் விண்ணப்பதாரிகளை நேர்முகம் காண்பதற்காக அரச உத்தியோகத்தர்களுடன் இரண்டு இராணுவ வீரர்களும் இணைக்கப்பட்டுள்ளளனர்.

இவ்வாறு அரச உத்தியோகத்தர்களுடன் இராணுவத்தினரை நேர்முகம்காண்பதற்கு இணைந்து கொண்டமை சமூக ஆர்வலர்கள் பலரும் விசனம் தெரிவித்து வருகின்றனர்.(9-281-285-299-350)

# புதிய கட்சிகளை உருவாக்காதீர்கள்

## ஜி.ரி.லிங்கநாதன் கோரிக்கை

(நெளுக்குளம்)

தேர்தலில் போட்டியிட விரும்பினால் நாங்கள் விலகிக்கொள்கின்றோம். அதற்காக தற்போதைய நிலையில் புதிய கட்சிகளை உருவாக்குவது எமக்கு ஆபத்தானது என முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் ஜி.ரி.லிங்கநாதன் தெரிவித்தார். வவுனியா கோவில்குளம் கண்ணன் ஆலய அலங்கார நுழைவாயிலின் திறப்பு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

இம்முறை தேர்தலை இலக்காக கொண்டு இந்துக்கள் சார்பாக ஒரு அணியும் கிறிஸ்தவர்கள் சார்பாக ஒரு அணியும் உருவெடுத்திருக்கிறது. நாங்கள் ஏற்கனவே தமிழ் பேசும் மக்களாக இருந்து மதத்தால் பிரிந்திருக்கிறோம்.

இன்னுமொரு மதத்தாலும் பிரிவோமேயானால் இந்த நாட்டில் இரண்டாவது இனமாக அல்ல நான்காவது. ஐந்தாவது இனமாக இந்துக்களும், தமிழர்களும் வந்து விடுவோம். ஆபத்தை உணர்ந்தவர்களாக நாம் மாத்திரம் அல்ல அரசியல் கட்சிகளும் செயற்பட வேண்டும். உள்ளூராட்சிமன்ற தேர்தலுக்கு பின்னர் வட்டாரங்கள் பிரிக்கப்பட்டு உறவினர்களுக்கு உள்ளே பிரிவுகள் ஏற்பட்டு பல கட்சிகள் உருவாகின்ற நிலைமை காணப்பட்டு கொண்டு இருக்கின்றன. தயவுசெய்து இவ்வாறான வேலைகளில் ஈடுபடாதீர்கள்.

புதிது புதிதாக கட்சிகளை உருவாக்கி மக்களை பிரித்து எமது இனத்தை சிறு கூறுகளாக்கி விடாதீர்கள். ஏற்கனவே பௌத்த சிங்கள வாக்குகளை நம்பி ஒரு ஜனாதிபதி வந்திருக்கிறார். அவர் தற்போது தனக்கு பெரும்பான்மையை கேட்டு நிற்கின்றார். அவர் சிறுபான்மை இனத்தை பற்றி சிந்திப்பதாக இல்லை. இவ்வாறான நிலையில் நாங்கள் மத ரீதியாக பிளவுபடும் போது பௌத்த சிங்களம் மூன்றில் இரண்டு பெரும்பான்மையை எடுத்தால் நாங்கள் இங்கு வாழ்வதா? இல்லையா? என்கின்ற மிகப் பெரிய ஐயப்பாடு உருவாகும் என மேலும்தெரிவித்தார். (9-250- 299)

# மணல் கொள்ளையர்களால் பாலம் உடைப்பு-பொலிஸில் முறைப்பாடு



(பனிக்கன்குளம்)

புதுக்குடியிருப்பு பிரதேச சபையின் எல்லைக்கு உட்பட்ட மன்னாகண்டல் பகுதியில் சட்டவிரோத மணல் கடத்தல்காரர்களின் கனரக வாகனங்களின் போக்குவரத்தினால் கட்டிக்கொண்டிருந்த பாலம் உடைக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் புதுக்குடியிருப்பு பிரதேச சபை தவிசாளர் செ.பிறேமகாந்தினால் நேற்றுப் புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு ஒன்று பதிவு செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பில் அவர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில்,

மன்னாகண்டல் கிராமத்தின் வசந்தபுரம் முதன்மை வீதி கடந்த ஆண்டு மழைவெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட நிலையில் ஓ.என்.யூ.ஆர்.திட்டத்தின் ஊடாக புனரமைக்கப்பட்டு இருந்தது. இந்த வீதியில் தலா ஐந்து இலட்சம் ரூபா பெறுமதியில் இரண்டு பாலங்கள் புனரமைக்கப்பட்டிருந்தன. இதில் ஒருபாலம் மணல் கடத்தல் காரர்களின் ஊர்திகள் பாவனையால் மிகப் பாரியளவில் சேதமடைந்துள்ளது. கட்டுமானப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வந்த பாலம் இது வரை மக்கள் பாவனைக்கு விடப்படாத நிலையில் பாலத்தின் ஊடாக டிப்பர் பயணித்து சேதப்படுத்தியமை மற்றும் தொடர்ச்சியாக பேராற்று பகுதியில் சட்டவிரோத மணல் அகழ்வு நடவடிக்கையினால் பேராறு அபாய நிலைக்கு சென்றுள்ளது.

தொடர்ச்சியான சட்டவிரோத மணல் அகழ்வு நடவடிக்கை தொடர்பில் நடவடிக்கை எடுக்கக்கோரியும் புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.(9-281)

# 5 ஆவது நாளாக தொடரும் உண்ணாவிரத போராட்டம்



(மன்னார்)

தமிழ் 'தேசியக்கூட்டமைப்பு கட்சியாக பதிவு செய்ய வேண்டும் என்பது உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து மன்னாரை சேர்ந்த இளைஞர் ஒருவர் கடந்த சனிக்கிழமை காலை ஆரம்பித்த உண்ணாவிரத போராட்டம் ஐந்தாவது நாளாக தொடரும் நிலையில், மன்னார் நகரசபை உறுப்பினர்கள் நேற்று மாலை நேரடியாக சென்று கலந்துரையாடியுள்ளனர்.

மன்னாரைச் சேர்ந்த இரத்தினம் ஞானசேகரம் யூலியஸ் (வயது -39) என்ற நபரே மன்னார் நகர சபை மண்டபத்திற்கு முன்னால் குறித்த உண்ணாவிரத போராட்டத்தை முன்னெடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (9-285)

# சுண்டிக்குளம் கடற்கரையில் கஞ்சாவை புதைத்து வைத்த மூவர் கைது



(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பொலிஸாரினால் 6 கிலோ கஞ்சாவுடன் மூவர் கைது செய்யப்பட்டுள்ளதுடன் அவர்கள் பயன்படுத்திய இரண்டு மோட்டார் சைக்கிள்களும் கைப்பற்றப்பட்டுள்ளன.

புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி எம்.ஏ.அமரசிங்கவுக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் அவருடைய பணிப்பின் பேரில் பொலிஸ் நிலைய தற்காலிக பொறுப்பதிகாரி எம்.சி.சேனசிங்கவின் ஆலோசனைக்கு அமைவாக குற்றத்தடுப்புப் பிரிவு பொறுப்பதிகாரி எஸ்.கே.பண்டார தலைமையிலான குழுவினர் சுதந்திரபுரம் பகுதியில் சந்தேகத்தின் பேரில் மூவரிடம் மேற்கொண்ட விசாரணை மேற்கொண்டனர்.

அவர்கள் வழங்கிய தகவலின் அடிப்படையில் அவர்களை அழைத்துச்சென்று சுண்டிக்குளம் கடற்கரைப் பகுதியில் மண்ணினுள் புதைத்து வைத்திருந்த நிலையில் சுமார் 6 கிலோ கஞ்சாவினை மீட்டதுடன் அவர்கள் மூவரையும் கைது செய்து அவர்களின் மோட்டார் சைக்கிள்கள் இரண்டினையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளார்கள்.

மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வரும் புதுக்குடியிருப்பு பொலிஸார் குறித்த கஞ்சாவின் பெறுமதி எட்டு இலட்சம் தொடக்கம் பத்து இலட்சம் வரை எனவும் குறித்த நபர்கள் வவுனியாவினைச் சேர்ந்த 41,39,26 வயதுடைய குடும்பஸ்தர்கள் எனவும் தெரிவித்தனர். (9-281)

# ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யக் கோரி போராட்டம்



(குருமன்காடு)

வவுனியா, வீரபுரம் மணிவாசகர் மகா வித்தியாலயத்தில் நிலவும் ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யுமாறு கோரி பெற்றோர்களும்மாணவர்களும்இரண்டாவது தடவையாக நேற்றும் பிரதான வீதியில் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

சம்பவ இடத்திற்குச் சென்ற செட்டிகுளம் கோட்டக்கல்வி அதிகாரி, செட்டிகுளம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி, வவுனியா தெற்கு வலயக் கல்விப் பணிப்பாளர் ஆகியோர் போராட்டக்காரர்களுடன் கலந்துரையாடி எதிர்வரும் வெள்ளிக்கிழமைக்குள் ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதாக வழங்கிய வாக்குறுதியையடுத்து போராட்டம் கைவிடப்பட்டது. கடந்த திங்கட்கிழமையும் இவர்கள் பாடசாலை முன்பாக போராட்டத்தில் ஈடுபட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (9-250-299)

# அதிபர், ஆசிரியர்களின் போராட்டத்தால் கற்றல் செயற்பாடுகள் ஸ்தம்பிதம்




(முறிகண்டி)

நாடளாவிய ரீதியில் அதிபர்கள், ஆசிரியர்கள் நேற்று சுகவீன விடுப்பு போராட்டத்தை முன்னெடுத்ததால் பாடசாலை நடவடிக்கைகள் ஸ்தம்பிதம் அடைந்து காணப்பட்டது. குறித்த போராட்டம் காரணமாக பாடசாலையில் கற்றல்,கற்பித்தல் செயற்பாடுகள் முழுமையாக பாதிக்கப்பட்டிருந்ததுடன் வடக்கில் உள்ள பாடசாலைகளும் வெறிச்சோடிக் காணப்பட்டன.

இதேவேளை கிளிநொச்சி மாவட்ட ஆசிரிய சேவைச் சங்கத்தினால் கவனயீர்ப்பு போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது. 5 அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து நாடளாவிய ரீதியில் போராட்டத்தில் ஈடுபடும் அதிபர், ஆசிரியர் சுகவீன விடுப்பு போராட்டத்திற்கு ஆதரவாக குறித்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. குறித்த போராட்டத்தில் அதிபர்கள், ஆசிரியர்கள் என பலர் கலந்து கொண்டனர். (9-100-250-281-285)

# பளையில் மூன்று திருடர்கள் கைது

(தருமபுரம்)

பளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் பல திருட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடைய 3 பேர் நேற்று முன்தினம் பளை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் இவர்கள் திருடுவதாகவும் வாகனங்களை திருடி பகுதி பகுதியாக யாழ்ப்பாணத்தில் உள்ள கடைகளில் விற்று வந்ததாகவும் பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் படி குறித்த நபர்களை பளை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி கிருசாந்தவின் அணியினர்கைது செய்துள்ளனர். (9- 316)

# வயல் நிலங்களில் தீவைக்க வேண்டாம்

## விவசாயிகளிடம் வேண்டுகோள்

(அக்கராயன்)

வயல் நிலங்களில் வைக்கோல்களை எரிக்க வேண்டாம் என கிளிநொச்சி மாவட்ட கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளர் எஸ்.ஆயகுலன் விவசாயிகளிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

காலபோகம், சிறுபோக பயிர்ச்செய்கைகள் முடிவடைந்தவுடன் வயல்களுக்கு தீ மூட்டுகின்ற செயற்பாடுகள் தொடர்கின்றன. வயலில் வைக்கோலினை சேதனப் பசளையாக மாற்ற வேண்டும். வைக்கோலுடன் வயலினை பண்படுத்துகின்ற போது அதிக பலன்களை விவசாயிகள் அடைந்து கொள்ள முடியும். வயலுக்கு தீ மூட்டுவதன் காரணமாக விவசாயிகளுக்கு நன்மை அளிக்கின்ற உயிரினங்களும் அழிந்து விடுகின்றன.

வயலுக்கு தீ மூட்டுகின்ற விவசாயிகளுக்கு உரங்களை நிறுத்தவும் சட்ட நடவடிக்கை எடுக்கவும் எதிர்காலத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (9-350)

# ஆலய நுழைவாயில் திறப்பு




(நெளுக்குளம்)

வவுனியா கோவில்குளம் கண்ணன் ஆலயத்தின் நுழைவாயில் நேற்று திறந்து வைக்கப்பட்டது. வன்னிப்பாராளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதனின் நிதி ஒதுக்கீட்டில் 16 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்ட இந்நுழைவாயில் பாராளுமன்ற உறுப்பினரால் திறந்து வைக்கப்பட்டது.

கோவில்குளம் பகுதியில் அமைந்துள்ள இக் கோவில் வவுனியாவில் உள்ள ஒரேயொரு கண்ணன் ஆலயமாக காணப்படும் நிலையில் இதற்கான நுழைவாயில் சிற்பம் அமைக்கப்பட்டு ஆயல பிரதம குரு மயூர சர்மாவின் பூஜை வழிபாடுகளை அடுத்து திறந்து வைக்கப்பட்டிருந்தது.

இதேவேளை ஆலயத்தின் வளர்ச்சிக்காக பங்காற்றிய மணியம் பாராளுமன்ற உறுப்பினரால் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டிருந்தார். இந் நிகழ்வில் முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் ஜி.ரி.லிங்கநாதன், வவுனியா நகசைபை உறுப்பினர் சந்திரகுலசிங்கம், நிரோசன் மற்றும் பிரதேச சபை உறுப்பினர்கள் உட்பட அடியார்கள் பலரும் கலந்துகொண்டிருந்தனர். (9-299)

# ஓமந்தை விபத்தில் காயமடைந்த பெண் கொழும்புக்கு மாற்றம்

(வவுனியா)

வவுனியா ஓமந்தை பேருந்து-கார் விபத்தில் படுகாயமடைந்த பெண் மேலதிக சிகிச்சைக்காக கொழும்பு வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார். கடந்த ஞாயிற்றுக் கிழமை இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பேருந்தும் காரும் மோதிக் கொண்ட விபத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நால்வர் உட்பட 5 பேர் உயிரிழந்திருந்தனர்.

அதே குடும்பத்தைச் சேர்ந்த சோ.லக்சனா (வயது 29) என்ற பெண் படுகாயமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் மேலதிக சிகிச்சைக்காக கொழும்பு வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டுள்ளார். (9-10)

# பாலைப்பாணியில் வன அதிகாரியை தாக்கிய மரக் கடத்தல்காரர்கள்

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தின் மாங்குளம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பாலைப்பாணி-வன்னிவிளாங்குளம் வீதியில் சட்டவிரோத மரக்கடத்தல்காரர்களால் வனவளத்திணைக்கள அதிகாரி மீது நேற்று முன்தினம் இரவு தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

பாலைப்பாணி கிராமத்தில் இருந்து வாகனம் ஒன்றில் சட்டவிரோதமாக மரம் கடத்தப்படுவதாக மாங்குளம் வனவளத்திணைக்கள அதிகாரிகளுக்கு கிடைக்கப்பெற்ற தகவலினை தொடர்ந்து வனவளத்திணைக்கள அதிகாரிகள் சட்டவிரோத மரக்கடத்தல்காரர்களின் வாகனத்தினை தடுக்க முற்பட்டுள்ளார்கள். இந்நிலையில் கடத்தல்காரர்கள் வனவளத்திணைக்கள அதிகாரிகாரிகளின் உந்துருளி மற்றும் அதிகாரி மீது வாகனத்தினால் மோதித்தள்ளிவிட்டு தப்பி சென்றுள்ளார்கள்.

இதன்போது மாந்தை கிழக்கு பகுதிக்கு பொறுப்பான வன வளத்திணைக்கள அதிகாரியான எம்.டி.என்.குணதிலக (வயது-30) காயமடைந்த நிலையில் மாங்குளம் ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார்.

இச்சம்பவம் தொடர்பாக வனவளத்திணைக்களத்தினால் மாங்குளம் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்ட நிலையில் சட்டவிரோத மரக்கடத்தல்காரர்களால் தாக்கப்பட்ட வாகனம் பொலிஸ் நிலைத்துக்கு எடுத்துவரப்பட்டுள்ளதுடன் குறித்த சந்தேக நபர்களைத் தேடும் நடவடிக்கையில் பொலிஸார் ஈடுபட்டுள்ளனர். (9-281)

# வவு.தமிழ் மத்திய மகா வித்திக்கு புதிய அதிபர் நியமனம்



(நெளுக்குளம்)

வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயத்தின் புதிய நிரந்தர அதிபராக ஆ.லோகேஸ்வரன் கல்வி அமைச்சால் நியமிக்கப்பட்டுள்ளார்.

மடுவலயத்தில் பிரதிக்கல்விப் பணிப்பாளராக கடமையாற்றிய இவருக்கு தற்போது பொதுச்சேவை ஆணைக்குழுவின் அனுமதியுடன் தேசிய பாடசாலை அதிபராக கல்வி அமைச்சர் டளஸ் அழகப்பெரும நேற்று முன்தினம் நியமனக் கடிதத்தை வழங்கி வைத்தார். (9-299)


# இளைஞர் பாராளுமன்ற தேர்தலில் முறைகேடு; பாதிக்கப்பட்டவர்கள் ம.உ.ஆணைக்குழுவில் முறைப்பாடு

(மன்னார்)

இளைஞர் பாராளுமன்ற தேர்தலில் மன்னார் நகர் பிரதேச செயலக பிரிவு மற்றும் நானாட்டான் பிரதேச செயலக பிரிவில் முறைகேடுகள் இடம்பெற்றுள்ளதாக பாதிக்கப்பட்ட இளைஞர் பாராளுமன்ற வேட்பாளர்கள் மன்னார் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் மன்னார் உப காரியாலயத்தில் மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனம் மெசிடோ ஊடாக நேற்று முன்தினம் முறைப்பாடு செய்துள்ளனர்.

மன்னார் நகர் பிரதேச செயலகத்தை சாராத சில இளைஞர்கள் ஏனைய பகுதிகளில் இருந்து பேருந்துகளில் வருகை தந்து தங்களுடைய வாக்குகளை செலுத்தியதாகவும் அடையாள அட்டையில் வேறு பகுதிகளில் வசிக்கும் முகவரி உள்ளவர்கள் மன்னார் பிரதேச செயலக பிரிவை சேர்ந்தவர்கள் என இணையத்தின் ஊடாக பதிவு செய்து வாக்களித்துள்ளனர்.

மேலும் 8 மணி அளவில் பாராளுமன்ற தேர்தல் வாக்குப் பதிவு ஆரம்பிக்கும் என்று குறிப்பிட்ட நிலையிலும் காலதாமதமாகவே வாக்குப்பதிவு ஆரம்பித்ததாகவும் அதற்கான மேலதிக நேரம் எதுவும் வழங்கப்படவில்லை எனவும் தற்காலிக இளைஞர் அடையாள அட்டைகளை வைத்திருந்த இளைஞர்கள் வாக்களிக்க அனுமதிக்கவில்லை எனவும் அதனால் அநேகமான வாக்காளர்கள் வாக்களிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. அதேநேரத்தில் வேறு பகுதிகளைச் சேர்ந்த இளைஞர்கள் எமது பகுதி இளைஞர் பாராளுமன்ற பிரதிநிதியை தெரிவு செய்யும் நிலை ஏற்பட்டுள்ளதாகவும் எனவே குறித்த பிரச்சினை தொடர்பாக மனித உரிமை ஆணைக்குழு தலையிட்டு மீள் தேர்தல் அல்லது தகுந்த நடவடிக்கை மேற்கொண்டு தருமாறு மேற்குறித்த முறைப்பாட்டினை பதிவு செய்துள்ளனர். (9-285)



இலங்கை சதுரங்க சங்கத்தினால் கிளிநொச்சி மாவட்டத்தில் மாணவர்கள் மத்தியில் நடத்தப்பட்ட போட்டியில் கிளிநொச்சி வட்டக்கச்சி ஆரம்ப வித்தியாலயத்தில் இருந்து பங்குபற்றி தேசிய மட்டத்திற்குத் தெரிவாகி உள்ள மாணவர்கள் மதிப்பளிக்கப்பட்டுள்ளனர். பாடசாலை அதிபர் அ.பங்கயற்செல்வன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் அதிபர், ஆசிரியர்களினால் மாணவர்கள் மதிப்பளிக்கப்பட்டனர். (படம்:-அக்கராயன் செய்தியாளர்)





# இந்தியா - அமெரிக்கா இடையே இராணுவ ஒப்பந்தம் கைச்சாத்து

(டில்லி)

இந்தியா- அமெரிக்கா இடையே 21 ஆயிரம் கோடி ரூபாய்க்கு இராணுவ ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் மற்றும் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு இடையே டில்லியில் நேற்று முன்தினம் செவ்வாய்க் கிழமை நடைபெற்ற பேச்சு வார்த்தைக்குப் பிறகு இந்த ஒப் பந்தம் கையெழுத்தானது.

இந்தியாவிற்கு சுற்றுப் பய ணம் மேற்கொண்டுள்ள அமெ ரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், நேற்று டில்லியில் உள்ள ஐதராபாத் இல்லத்தில் பிரதமர் மோடியை சந்தித்துப் பேசினார். குறித்த பேச்சுவார்த்தையின் நிறைவில் இந்தியா- அமெரிக்கா இடையே எரிசக்தி உள்ளிட்ட 3 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தாகின. மேலும் பாது காப்பு ஒத்துழைப்பை மேம்ப டுத்தும் வகையில் 21 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான ஒப் பந்தம் இறுதி செய்யப்பட்டது.



ட்ரம்ப்-மோடி முன்னிலை யில் இதற்கான ஒப்பந்தத்தில் அதிகாரிகள் கையெழுத்திட்ட னர். இந்த ஒப்பந்தத்தின்படி பயங்கரவாதத்துக்கு எதிராக அதிநவீன ஆயுதங்களை இந் தியா பயன்படுத்த அமெரிக்கா உதவும் என்று ஒப்புதல் அளி க்கப்பட்டது.

பாதுகாப்புத்துறையில் செய் யப்பட்ட இந்த புதிய ஒப்பந்தங்கள் இந்திய-இராணுவ துறைக்கு முக்கியத்துவம் வாய்ந்ததாகும் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ-2)

## ஜெயலலிதா மரண விவகாரம்

# ஆறுமுகசாமி விசாரணை ஆணையகத்தின் கால அவகாசம் 7 ஆவது முறையாக நீடிப்பு

(சென்னை)

முன்னாள் முதல்வர் ஜெய லலிதா மரணம் தொடர்பாக விசாரிக்க அமைக்கப்பட்ட ஆறு முகசாமி விசாரணை ஆணை யத்தின் கால அவகாசம் 7 ஆவது முறையாக நீட்டிக்கப்பட் டுள்ளது.

உடல் நலக்குறைவு காரண மாக சென்னை, அப்பலோ வைத் தியசாலையில் அனுமதிக்கப் பட்ட முன்னாள் முதல்வர் ஜெய லலிதா, கடந்த 2016 ஆம் ஆண்டு, டிசெம்பர் 5 ஆம் திகதி காலமானார்.

அவரது மரணம் குறித்து சர்ச்சை எழுந்ததால் விசாரணை நடத்துவதற்காக ஓய்வுபெற்ற நீதிபதி ஆறுமுகசாமி தலை மையில் ஒரு நபர் விசாரணை ஆணையகத்தை அமைத்துத் தமிழக அரசு கடந்த 2017 ஆம் ஆண்டு, செப்டெம்பர் மாதம் உத் தரவிட்டது. இந்த ஆணையகம் 3 மாதங்களுக்குள் விசாரணை அறிக்கையைத் தாக்கல் செய்ய வேண்டும் எனவும் தமிழக அரசு உத்தரவிட்டிருந்தது.



அவ்வப்போது விசாரணை க்குக் கால அவகாசம்' கோரப் பட்டதால், இதுவரை 6 முறை ஆணையகத்தின் கால அவகா சம் நீட்டிக்கப்பட்டது. இதனி டையே, சசிகலா தரப்பு உள்ளிட்ட 154 பேரிடம் விசாரணை நடத்த ப்பட்டது.

இந்நிலையில், மருத்துவக் குழு அமைத்து விசாரணை நட த்த வேண்டும் என்று அப்பலோ வைத்தியசாலை சார்பில் உச்ச நீதிமன்றத்தில் வழக்குத் தொட ரப்பட்டது. அதை விசாரித்த நீதிமன்றம், கடந்த 2019 ஆம் ஆண்டு, ஏப்ரல் மாதம் ஆறு முகசாமி ஆணையகத்துக்கு இடைக்காலத் தடை விதித்தது.

கடந்த 10 மாதங்களாக தடை நீடிக்கும் நிலையில், ஆறுமுக சாமி ஆணையகத்தின் விசா ரணைக் காலம் கடந்த திங் கட்கிழமை நிறைவடைந் தது.

இந்நிலையில், எதிர்வரும் ஜூன் 24 ஆம் திகதி வரை கால அவகாசத்தை 7 ஆவது முறை யாக நீட்டித்துத் தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது. (ஐ-2)

# இந்தோனேசியாவில் கடும் வெள்ளப் பெருக்கு; 200 இற்கும் அதிகமான குடும்பங்கள் பாதிப்பு

(ஜகார்த்தா)

இந்தோனேஷியாவின் தென் பகுதியில் ஏற்பட்டுள்ள கடும் வெள்ளப் பெருக்கால், சுமார் 200 இற்கும் அதிக மான குடும்பங்கள் பாதிக்கப்பட்டன.

அத்தோடு பல இடங்களில் மின் தடை நீடித்துள்ளது. போக்குவரத்து பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. வெள்ளத்தில் சிக்கிக்கொண்ட மக்களை மீட்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

மேலும், வெள்ளம் காரணமாக ஜாவா தீவில் மலையேற்றம் சென்ற பாடசாலை மாணவர்களில் 8 பேர் ஆற்றில் அடித்துச் செல்லப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வருட ஆரம்பத்தில் இந்தோனேஷியாவில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கில் 60 பேர் வரை உயிரிழந்தனர். ஒரு இலட்சத்துக்கும் அதிகமான மக்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஐ-2)



# இராணு... ஒரே நா...

(டமாஸ்கஸ்)

## சிரியாவில் இராணுவம் ப... உச்சக்கட்டத்தை எட்டியுள்... பரிதாபமாகப் பலியாகினர்.

சிரியாவில் ஜனாதிபதி பஷர் அல் அசாத் தலைமையிலான அரச படைக்கும் கிள ர்ச்சியாளர்களுக்கும் இடையே கடந்த 9 ஆண்டுகளாக உள்நாட்டுப் போர் நடந்து வருகிறது. இந்தப் போரில் ஜனாதிபதியின் அரச படைக்கு ரஷ்ய இராணுவம் பக்க பல மாக இருந்து வருகிறது. அதேபோல் கிள ர்ச்சியாளர்களுக்கு அயல் நாடான துருக்கி இராணுவம் ஆதரவு அளித்து வருகிறது.

ரஷ்ய படைகளின் உதவியோடு கிளர் ச்சியாளர்களின் கட்டுப்பாட்டில் இருந்த பெரும்பாலான நகரங்களை சிரிய இரா ணுவம் மீட்டு விட்டது.

தற்போது நாட்டின் வடமேற்கு பகுதியில் உள்ள இட்லிப் மாகாணம் மட்டுமே கிளர்ச்சியாளர்களின் கோட்டையாக இருந்து வருகிறது. இந்த மாகாணத்தின்

# எகிப்து முன்னா... முபாரக் மரணம்



(கெய்ரோ)

எகிப்து நாட்டில் 1981 ஆம் ஆண்டு முதல் தொடர்ந்து 30 ஆண்டுகளாக ஜனாதிபதியாக பதவி வகித்து வந்த ஹோன்சி முபாரக் உடல்நலக் குறை வால் மரணமடைந்தார்.

எகிப்து நாட்டில் 1981 ஆம் ஆண்டு முதல் தொடர்ந்து 30 ஆண்டுகளாக ஜனாதிபதியாக பதவி வகித்து வந்தவர் ஹோன்சி முபாரக். இவர் உடல்நலக் குறைவால் கடந்த திங்கட்கிழமை மரணமடைந்தார். அவருக்கு வயது 94. தொடர்ந்து 30 ஆண்டுகள் ஜனா திபதி பதவியில் இருந்த முபாரக்குக்கு எதிராக 2011 ஆம் ஆண்டு அந்த நாட்டில் மாபெரும் புரட்சி வெடித்தது. முபா ரக்கை பதவி விலகக்கோரி இலட்சக் கணக்கான. இளைஞர்கள் வீதியில் இறங்கிப் போராட்டம் நடத்தினர்.

தொடர்ந்து 18 நாட்கள் நீடித்த இந்த போராட்டத்தில் சுமார் 900 போராட் டக்காரர்கள் கொன்று குவிக்கப்பட்ட



# வெளிநாடு

# ...ணுவம்- கிளர்ச்சியாளர்கள் மோதல்
# ...நாளில் 100 பேர் பரிதாபமாகப் பலி!

**...ணுவம் மற்றும் கிளர்ச்சியாளர்கள் இடையிலான மோதல் ...ாட்டியுள்ளது. இந்த மோதலில் ஒரே நாளில் 100 பேர் ...யாகினர்.**

...அசாத் ...ம் கிள ...ந்த 9 ...நடந்து ...தியின் ...க்க பல ...ல் கிள ...ருக்கி ...கிறது. ...கிளர் ...இருந்த ...இரா ...தியில் ...டுமே ...டயாக ...த்தின்

சரி பாதிக்கும் அதிகமான பகுதிகள் கிளர்ச்சியாளர்கள் வசம் உள்ளன.

மேலும் அயல் மாகாணமான அலெப் போவின் மேற்கு பகுதிகள் சிலவற்றையும் கிளர்ச்சியாளர்கள் தங்கள் கட்டுப்பாட்டில் வைத்திருக்கிறார்கள். கிளர்ச்சியாளர்கள் வசம் உள்ள அனைத்து பகுதிகளையும் மீட்க சிரிய இராணுவம் போராடி வருகிறது.

இட்லிப் மாகாணத்தின் தெற்குப் பகு தியில் தங்களிடம் இருந்து மீட்கப்பட்ட நைராப் நகரை அரச படையினரிடம் இருந்து மீண்டும் கைப்பற்ற கிளர்ச்சி யாளர்கள் கடந்த திங்கட்கிழமை பயங்கர தாக்குதலில் ஈடுபட்டனர்.

துப்பாக்கிகளால் சுட்டும் கையெறி குண்டுகளை வீசியும் இருதரப்பும் பயங் கரமாக மோதிக்கொண்டன. கிட்டத்தட்ட 24 மணி நேரம் நீடித்த இந்த மோதலில் சுமார் 100 பேர் பலியாகினர்.

இதில் 41 பேர் அரச படை வீரர்கள், 53 பேர் கிளர்ச்சியாளர்கள் மற்றும் அவர் களது ஆதரவு பெற்ற பயங்கரவாதிகள் ஆவர். மேலும் இரு தரப்பிலும் 100 இற்கும் மேற்பட்டோர் படுகாயம் அடைந்தனர். எனினும் இந்த சண்டையின் இறுதியில் நைராப் நகரை கிளர்ச்சியாளர்கள் கைப் பற்றினர். இது அரச படைக்கு பெரும் பின்னடைவாக அமைந்துள்ளது.

இதற்கிடையே அங்கு அரசு படைக் கும் கிளர்ச்சியாளர்களுக்கு ஆதரவு அளித்து வரும் துருக்கி இராணுவத்துக்கும் இடையே மோதல் வலுத்து வருகிறது. இரு தரப்பும் பரஸ்பர வான் தாக்குதலில் ஈடுபட்டு வருகின்றன. (ஜ-2)



# ...னாள் ஜனாதிபதி ...ணம்



...னர். அதனைத் தொடர்ந்து. இராணுவம் அவருக்கு நெருக்கடி கொடுத்ததால் அவர் பதவி விலகினார்.

அதனைத் தொடர்ந்து போராட்டக் காரர்களின் உயிரிழப்புக்கு காரணமாக இருந்ததாக முபாரக் மீது வழக்குத் தொட ரப்பட்டது. இந்த வழக்கில் 2012 ஆம் ஆண்டு ஜூன் மாதம் அவருக்கு வாழ் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. எனி னும் இந்தத் தீர்ப்பை எதிர்த்து அவர் மேன்முறையீடு செய்தார். அதை விசா ரித்த அந்த நாட்டு உச்ச நீதிமன்றம் 2014 ஆம் ஆண்டு அவரை விடுதலை செய் தமை குறிப்பிடத்தக்கது. (ஜ-2)

# சீனாவைத் தொடர்ந்து தென்கொரியாவில் வேகமாகப் பரவும் கொரோனா வைரஸ்

- **893 பேர் பாதிப்பு, 9 பேர் பலி!**
- **தேசிய அச்சுறுத்தல் அளவை சிவப்பு சமிக்ஞையாக உயர்த்தியது**



(சியோல்)

சீனாவை உலுக்கிவரும் கொரோனா வைரஸ் தற்போது தென்கொரியாவிலும் மிக வேக மாகப் பரவி வருகிறது.

இந் நிலையில், வைரஸ் பாதிப்பு எண்ணிக்கை நேற்று முன்தினம் 763 ஆக இருந்தது. தொடர்ந்து 8,720 பேரிடம் பரி சோதனை நடத்தப்பட்டது. இந் நிலையில், தென்கொரியாவில் வைரஸ் பாதிப்புக்கு ஆளானோர் எண்ணிக்கை நேற்று 893 ஆக அதிகரித்துள்ளது.

அத்துடன் நேற்று 7 ஆக இரு ந்த எண்ணிக்கை, கூடுதலாக 2 பேர் உயிரிழந்துள்ள நிலையில் 9 ஆக உயர்ந்துள்ளது.

இதனையடுத்து. தென் கொரிய அரசு, தேசிய அச்சுறுத் தல் அளவை சிவப்பு சமிக்ஞை ஆக உயர்த்தியுள்ளது.

தென்கொரியாவில் 4 ஆவது பெரிய நகரான டேகு நகரில் 80 சதவீத பாதிப்புகள் உள்ளன. காய்ச்சல் அல்லது சுவாசப் பாதிப்பு அறிகுறிகள் தென்பட்டால் வீட்டிலேயே இருக்கும்படி மக் களுக்கு அறிவுறுத்தப்பட்டுள் ளது. அதிக எச்சரிக்கையுடன் இருக்கும் படியும் அதிகாரிகள் அறிவுறுத்தியுள்ளனர். (ஜ-2)



# சிரியாவில் கிளர்ச்சியாளர்கள் மீது உக்கிர தாக்குதல்;
# மூன்று முக்கிய இடங்கள் அரச படையினர் வசம்

(டமாஸ்கஸ்)

சிரியாவில் கிளர்ச்சியாளர்கள் கட்டுப்பாட் டின் கீழ் இருந்த மூன்று முக்கிய பகுதிகளை அரச படைகள் கைப்பற்றின.

கிளர்ச்சியாளர்கள் கட்டுப்பாட்டின் கீழ் இருந்த மூன்று முக்கிய பகுதிகளான அல் நக்யார், அர நபியா, அல் டையிர் ஆகிய பகுதிகளே இவ்வாறு கைப்பற்றப்பட்டன.

இதனைத் தொடர்ந்து, சிரிய அரசப் படைகளால் தங்கள் வசம் உள்ள பகுதிகள் கைப்பற்றப்படுவதைத் தவிர்ப்பதற்காக மீதமுள்ள ஜிஹாதி கிளர்ச்சியாளர்கள் மேற்கு நோக்கிப் பின்வாங்கியுள்ளனர்.

அரச படைகள் ரஷ்யாவின் உதவியுடன் சிரியாவின் வடமேற்குப் பகுதியில் தாக்குதல் நடத்தி வருகிறது. இதில் அரச படைகளுக்குப் பல இடங்களில் வெற்றி கிடைத்துள்ளது. இதனால் சிரிய படைகள் வலுவடைந்துள்ளன.

முன்னதாக, சிரியாவில் ஜனாதிபதி பஷார் அல் ஆசாத்துக்கும் ஐ.எஸ். தீவிரவாதிகளுக் கும் இடையே கடந்த ஆறு ஆண்டுகளாக உள்நாட்டுப் போர் நடந்து வருகிறது.

இதில், கடந்த டிசெம்பர் மாதம் முதல் சுமார் 90 ஆயிரம் பேர் சிரியாவிலிருந்து வலுக்கட்டாயமாக வெளியேற்றப்பட்டுள்ளதாக ஐக்கிய நாடுகள் சபையின் அறிக்கையொன்று சுட்டிக் காட்டியுள்ளது. (ஜ-2)

### சின்னப் பிரச்சினையை இழுத்தடிக்கும் ரணில்

# ஐ.தே.முன்னணியிலிருந்து விலகி புறா சின்னத்தில் அசாத் சாலி போட்டி

(கொழும்பு)

பொதுத்தேர்தலில் புறா சின்னத்தில் போட்டியிடத் தீர்மானித்துள்ளதாக தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவர் அசாத் சாலி தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முந்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

'எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் தேசிய ஐக்கிய முன்னணி நாடு பூராகவும் புறா சின்னத்தில் போட்டியிடத் தீர்மானித்திருக்கின்றது.

கேகாலை உட்பட 3 மாவட்டங்களுக்கான வேட்பாளர் பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளது. சிங்களம், தமிழ், முஸ்லிம், கிறிஸ்தவ இனங்களைச் சேர்ந்தவர்கள் எமது கட்சியில் இணைந்து போட்டியிட இருக்கின்றனர்.

அத்துடன் எமது கட்சி ஐக்கிய தேசிய முன்னணியுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துகொண்டிருக்கின்றது. என்றாலும் ஐக்கிய தேசிய கட்சி தனக்குள் இருக்கும் பிரச்சினையை இன்னும் தீர்த்துக்கொள்ளத் தவறி இருக்கின்றது.

**சின்னம் தொடர்பான பிரச்சினைக்கு இன்னும் முடிவில்லாமல் இருக்கின்றது. ஐக்கிய தேசிய கட்சிக்குள் தற்போது ஏற்பட்டிருக்கும் பிரச்சினையை நாடாளுமன்றம் கலைக்கப்படும்வரை இழுத்துக்கொண்டு செல்வதே ரணில் விக்கிரமசிங் கவின் ஆதரவாளர்களின் திட்டமாகும்.**

அத்துடன் அரசாங்கம் ஆட்சிக்கு வந்து 100 நாட்கள் கடந்தும் மக்கள் எதிர்பார்த்த எந்த வேலைத் திட்டத்தையும் மேற்கொள்ளவில்லை. அதனால் ஜனாதிபதித் தேர்தலில் கிடைத்த வாக்குகள் பொதுத் தேர்தலில் கிடைக்கும் என்ற சந்தேகம் அரசாங்கத்துக்கு ஏற்பட்டிருக்கின்றது.

எனவேதான் ஐக்கிய தேசியக் கட்சிக்குள் ஏற்பட்டிருக்கும் பிரச்சினையைத் தொடர்ந்து இழுத்துக்கொண்டு செல்லும் கொந்தராத்தை ரணில் விக்கிரமசிங்க அணியினர் மேற்கொண்டு, தேர்தலில் அரசாங்கத்துக்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெற்றுக்கொடுக்க ஏதுவாக செயற்பட்டு வருகின்றனர்.

அதனால் ஐக்கிய தேசியக் கட்சிக்குள் இருக்கும் சின்னம்



தொடர்பான பிரச்சினைக்குத் தீர்வு தற்போதைக்கு கிடைக்கப் போவதில்லை.

எனவேதான் நாங்கள் ஐக்கிய தேசிய முன்னணியுடன் செய்து கொண்டுள்ள புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் இருந்து வெளியேறி தனித்துப் போட்டியிடத் தீர்மானித்திருக்கின்றோம்.

அத்துடன் பொதுத் தேர்தலில் இணைந்து செயற்படுவதற்கு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் ஆகிய கட்சிகளுக்கும் அழைப்பு விடுத்திருக்கின்றோம். எதிர்வரும் வாரங்களில் இது தொடர்பாக அவர்களுடன் கலந்துரையாட இருக்கின்றோம்' என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## திருவாசக அரண்மனையில் பரத நாட்டிய ஆற்றுகை





(யாழ்ப்பாணம்)

மகா சிவராத்திரியை முன்னிட்டு யாழ்.இந்தியத் துணைத் தூதரகத்தின் நிதிப்பங்களிப்பில் நாட்டிய கலாகேந்திரா நிறுவனத்தால் பரத நாட்டிய நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டு நாவற்குழி திருவாசக அரண்மனை வளாகத்தில் ஆற்றுகை செய்யப்பட்டது.

இந்நிகழ்வில் நாட்டிய கலாகேந்திரா, நர்த்தனஷேத்திரா, பொன்னாலை சந்திர பரத கலாலயம், நீர்வையூர் பொன் சக்தி கலாகேந்திரா மற்றும் வேலாயுதம் நர்த்தனாலயம் ஆகிய நடன நிறுவனங்களைச் சேர்ந்தவர்களின் பரத நடன ஆற்றுகைகள் இடம்பெற்றன. அன்றையதினம் திருவாசக அரண்மனையில் தமது வழிபாடுகளை மேற்கொள்ள வந்த பெருந்திரளான அடியவர்கள் மற்றும் கலை ஆர்வலர்கள் நிகழ்வைக் கண்டுகளித்தனர்.

இதில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ்.இந்தியத்துணைத்தூதுவர் ச.பாலச்சந்திரன், 2 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய்க்கான காசோலையை நாட்டிய கலாகேந்திரா நிறுவனத்தின் இயக்குநர் முனைவர் கி.இரவீந்திராவிடம் கையளித்தார். (இ-7)

# சஜித்தை பிரதமராக்கி அரசு அமைப்பது உறுதி

## அரவிந்தகுமார் நம்பிக்கை

(கொழும்பு)

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் சஜித் பிரேமதாஸவை பிரதமராக்கி அவரின் தலைமையில் புதிய அரசாங்கம் ஒன்றை அமைப்பது உறுதி என நாடாளுமன்ற உறுப்பினர் அரவிந்தகுமார் தெரிவித்தார்.

எல்ல பல்லகெட்டுவ பகுதியில் கடந்த திங்கட்கிழமை மாலை இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். ஐக்கிய தேசிய முன்னணிக்குள் எந்தவித இன ரீதியான வேறுபாடுகளும் இல்லை எனவும் அவர் தெரிவித்தார்.

ஆனால் அவ்வாறான ஒரு கட்சியின் மீது இனவாத சேற்றைப் பூசியே தற்போதைய அரசாங்கம் ஆட்சிப் பீடம் ஏறியதாகவும் அவர் தெரிவித்தார். அவ்வாறு ஆட்சியைக் கைப்பற்றியவர்கள் வழங்கிய எந்தவித உறுதிமொழிகளும் இதுவரை நிறைவேற்றப்படாமையால், வாக்களித்த மக்கள் புலம்பிக்கொண்டிருப்பதாகவும் அவர் கூறினார்.

ஐக்கிய தேசிய முன்னணி இனவாதம் பேசி மக்களை வஞ்சிக்கும் கட்சி இல்லை எனவும் எனவே எதிர்வரும் பொதுத் தேர்தலில் வெற்றி நிச்சயம் எனவும் அவர் தெரிவித்தார். அத்துடன் பதுளை மாவட்டத்தில் தமிழ் வாக்குகளை சிதறடிக்க சிலர் முயற்சித்து வருவதாகவும் அதற்கு இடமளிக்காது பதுளையில் தமிழ் பிரதிநிதித்துவத்தை உறுதிப்படுத்துவது அவசியம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## மருமகள்

இப்போதெல்லாம் நம்ம ஊரிலே மாமியார்– மருமகள் ஒருத்தரை ஒருத்தர் நல்லா புரிந்துகொண்டு நல்லவிதமாகத்தான் இருக்கிறார்கள் பல இடத்திலே.

அதனாலே நான் இப்ப சொல்லப் போற கதையைக் கேட்டுவிட்டு இந்தக் காலத்திலே அவ்வளவு மோசமாக யார் சேர் நடந்துகொள்கிறார்களென்று கேட்டு யாரும் சண்டைக்கு வந்து விடாதீர்கள். இன்னொரு உண்மையையும் சொல்லி விடுகிறேன் என்னுடைய பாதுகாப்புக்காக.

இந்தக் கதையை நமக்கு எழுதி அனுப்பியிருக்கிறதே கொஞ்ச நாளிலே மருமகளாகவும் அதன்பின்பு கொஞ்சக் காலத்திலே மாமியாராகவும் ஆகப் போற ஒரு வாசகர் தான்.

சரி...இப்ப கதைக்கு வருவோம். ஒரு சின்னக் குழப்பம். அந்த வீட்டிலே மாமியார் ஆட்சி. அவங்கள் வைச்சதுதான் சட்டம். மகன் எப்படி என்றால் அம்மா சொல்லுறதையும் கேட்டுக்கொள்வான். மனைவி சொல்லுவதையும் கேட்டுக் கொள்வான். நமக்கு என்னத்துக்கு வம்பு என்கிற ரைப்.

மருமகள் பேரிலே குறை கண்டு பிடிக்கிறதிலே அந்த மாமியாருக்கு ஒரு சுவாரஸ்யம். சின்ன சின்ன விடயத்திலேயெல்லாம் குற்றம் கண்டு பிடித்துக்கொண்டு இருந்தார். பொதுவாக எல்லோரும் எப்படி என்றால் ஏதாவது ஒரு காரணத்துக்காக சண்டை போட்டுக் கொண்டிருப்பார்கள்.

அந்த அம்மா எப்படியென்றால் ஏதாவது ஒரு சண்டை போடுறதுக்காக காரணத்தைத் தேடிக் கொண்டிருப்பார். அப்படி ஒரு மனசு. அந்த மருமகள் பெண் பாவம் பயந்து பயந்து ஒவ்வொரு காரியமும் செய்து கொண்டு வந்தாள்.

இப்படியே பல வருடம் ஓடிப்போச்சு! அந்த மாமியாருக்கும் ரொம்ப வயதாகிவிட்டது. இருந்தாலும் அந்தப் பழைய சுபாவம் மட்டும் மாறவில்லை. திடீரென்று ஒரு நாள் பக்கவாதம் வந்து அந்த அம்மாவுக்கு ஒரு பக்கம் கை, கால் இழுத்துக்கொண்டது. வாய் சுத்தமாகப் பேச முடியாமல் போய்விட்டது. சத்தம் மட்டும் வரும்.

ஒரு பக்கத்து கை, காலை அசைக்க முடியும். பேசுவதெல்லாம் சைகையாலே தான். இப்படிப்பட்ட நிலைமையிலே கூட... அந்தப் பெண் தண்ணியோ பாலோ இவர் முன்னால் கொண்டு வந்து வைத்தாள். அதை வேணுமென்றே தட்டிவிட்டுட்டு வம்பு வளர்க்கிறது. அதன்பின்பு அந்தப் பெண் தரையை சுத்தப்படுத்துமல்லவா அதைப் பார்த்து ரசிக்கிறது! இருந்தாலும் அந்தப் பெண் இதையெல்லாம் பெரிதுபடுத்தாமல் ரொம்பப் பொறு மையாகத்தான் இருந்தது.

ஒருநாள் வீட்டிலே வைத்திருந்த பாலை பூனை குடித்து விட்டு ஓடிவிட்டது. வயதான காலத்திலே இந்த அம்மா பால் இல்லாமல் கஷ்டப்படுவாங்களே என்று நினைத்து பக்கத்து வீட்டிலே போய் கொஞ்சம் பால் வாங்கிட்டு வந்து காய்ச்சி மாமியார் முன்னால் கொண்டு வந்து வைத்தாள் அந்தப் பெண். வழக்கம் போல அந்த அம்மா பாலை தட்டி விட்டிட்டார். இதை அந்த மருமகள் பெண் கவனித்து விட்டாள்.

இவ்வளவு நாள் பொறுமையாக இருந்த அந்த மருமகளுக்கு இன்றைக்கு இதைப் பார்த்ததும் கோபம் வந்துவிட்டது. கதவுக்குப் பக்கத்திலே சாத்தி வைத்திருந்த உலக்கையை எடுத்து மாமியார் தலையிலே போட அது குறி தவறி கழுத்திலே பட அந்த அம்மா கழுத்தைப் பிடித்துக்கொண்டு ஆ...ஊ...என்று கத்த இந்தப் பெண் ஒன்றும் அலட்டிக்காமல் உலக்கையை எடுத்து மறுபடியும் கதவு பக்கம் சாத்தி வைத்துவிட்டு நடந்து போய் விட்டாள்.

இருந்தாலும் மனதுக்குள்ளே லேசா ஒரு பயம். கணவன் வீட்டுக்கு வந்ததும் என்ன விடயம் என்று கேட்டால் எப்படி சமாளிக்கிறது? அன்றைக்கு என்று பார்த்து ரொம்ப நேரம் கழித்து வீடு வந்து சேர்ந்தான் கணவன்.

உடனே அந்த அம்மா புகார் செய்ய ஆரம்பித்து விட்டார். பேச்சு வராதே,.. அதாலே ஒரு பக்கத்து கையாலே சைகை காட்டினார். கதவுக்குப் பக்கத்திலே இருந்த உலக்கை பக்கமாகக் கையை நீட்டிக் காட்டி அப்படியே அந்தக் கையை தன் கழுத்துக்குப் பின் பக்கமாக சுத்திக் க்ாட்டி நாக்கை வெளியே நீட்டி நடந்த விடயத்தை புரிய வைக்க முயற்சி செய்தார்.

இவனுக்கு ஒன்றும் புரியலை."என்ன சொல்றாங்க அம்மா?" என்று மனைவியிடம் கேட்டான். அதற்கு அந்தப் பெண் ரொம்ப புத்திசாலித்தனமாக "என்னங்க உங்க அம்மா உங்களைப் பார்த்து ஏன்டா உலக்கை மாதிரி நிற்கிறாய். சாகப் போற எனக்குச் சங்கிலி எதுக்கு? என் கழுத்திலே கிடக்கிற இந்த சங்கிலியைக் கழற்றி என் மருமகள் கழுத்திலே போடடா என்று சொல்லுறாங்க" என்றாள்.

ஓ...அப்படியா விடயம் என்று சொல்லி "அம்மா கழுத்திலே இருந்த சங்கிலியை எடுத்து மனைவி கழுத்திலே போட்டுவிட்டு அம்மா உன் விருப்பப்படியே போட்டாச்சு இனிமேலாவது நிம்மதியா படுத்துத் தூங்கு" என்று சொல்லிவிட்டு உள்ளே போய் விட்டான். பார்த்தீர்களா கதையை அதனாலே மாமியார்களே சைகை காட்டுறது என்றால் கூட இனிமேல் ஜாக்கிரதையா இருக்க வேண்டும்.







யாழ்.தமிழ்ச்சங்கமும் சாவகச்சேரி இந்துக் கல்லூரி தமிழ்ச் சங்கமும் இணைந்து நடத்திய உலகத் தாய்மொழி நாள் விழாவும் பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை நினைவரங்கமும் அண்மையில் சாவகச்சேரி இந்துக் கல்லூரி பிரதான மண்டபத்தில் அதிபர் ந.சர்வேஸ்வரன் தலைமையில் இடம்பெற்றது.

(படங்கள்:- கொடிகாமம் செய்தியாளர்)

# கடும் வரட்சியால் களுத்துறையில் மட்டும் இரண்டு இலட்சத்து 15,525 பேர் பாதிப்பு!

## அனர்த்த முகாமைத்துவ நிலையம் தகவல்

(கொழும்பு)

நாட்டில் நிலவும் கடும் வரட்சியான காலநிலை காரணமாக நான்கு மாவட்டங்களில் இரண்டு இலட்சத்து 28 ஆயிரத்து 394 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

களுத்துறை மாவட்டத்தில் வசிப்பவர்களே வரட்சி காரணமாக அதிகமாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்த மாவட்டத்தில் சுமார் 2 இலட்சத்து 15ஆயிரத்து 525 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்தது.

குடிநீரில் கடல்நீர் கலந்ததன் காரணமாக களுத்துறை மாவட்டத்தின் பேருவளை, பாணந்துறை, களுத்துறை மற்றும் தொடங்கொட ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளிலுள்ள 2 இலட்சத்து 12 ஆயிரத்து 728 பேர் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர்.

அதேபோல கேகாலை மாவட்டத்தின் ருவன்வெல்ல, புலத்கொஹுபிடிய, தெரணியகலை, கலிகமுவ மற்றும் வரகாபொல ஆகிய பிரதேச செயலக பிரிவுகளுக்கு உட்பட்ட பகுதிகளில் 3697 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்தது. இதேவேளை இரத்தினபுரி மாவட்டத்திலும் 7,959 பேர் பாதிக்கப்பட்டுள்ளனரென்றும் கண்டி மாவட்டத்தில் 1,213 பேர் பாதிக்கப்பட்டுள்ளனரென்றும் குறித்த மத்திய நிலையம் வெளியிட்ட அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டது. (இ-7)

# கோட்டக் கல்வி பணிப்பாளர் நியமனம்

(பொற்பதி)

வடமராட்சிக்கிழக்கு மருதங்கேணி கோட்டத்திற்கு கோட்டக் கல்விப் பணிப்பாளர் நியமிக்கப்பட்டார்.

மருதங்கேணி இந்துத் தமிழ்க்கலவன் பாடசாலையின் முன்னாள் அதிபர் செ.ஸ்ரீராமச்சந்திரனே மருதங்கேணி கோட்டக்கல்வி பணிப்பாளராக நியமிக்கப்பட்டார். (இ-7-64)

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் இந்துக் கல்லூரியின் முன்னாள் அதிபர் செ.யோகநாதன் உடுவில் கோட்டக் கல்விப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார். (இ-7)

# வடமேல்,மேல் மாகாணங்களில் அதிக வெப்பம்-மக்களுக்கு எச்சரிக்கை

(கொழும்பு)

நாட்டின் சில பகுதிகளில் வெப்பநிலை உயர் நிலையில் காணப்படுவதாக வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்தது. குறிப்பாக வடமேல், மேல் மாகாணங்கள் மற்றும் காலி, மாத்தறை, மன்னார் மாவட்டங்களிலேயே இவ்வாறு வெப்பநிலை உயர் நிலையில் காணப்படுவதாக அத்திணைக்களம் தெரிவித்தது.

இதன் காரணமாக மக்களை அவதானத்துடன் செயற்படுமாறு அத்திணைக்களம் எச்சரிக்கை விடுத்துள்ளது. மேலும் அதிகமாக நீர் அருந்துமாறும் அறிவுறுத்தியது. (இ-7)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1985 இந்து
நட்சத்திரம்: புனர்பூசம் 2
கி.பா: செவ் 2 ல்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்: கலைமாணி, உதவிச் செயலாளர்
எதிர்பார்ப்பு: அரச தொழில் பார்க்கும் பெண்
தொ.இ: B/10555

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம்: அனுசம் 2
கி.பா: 25 செவ் 12 ல்
உயரம்:: 5'4"
தகைமை/தொழில்: HND in Computer. Engineer (London)
எதிர்பார்ப்பு: படித்த பெண்,ஆங்கில அறிவுடன் சுமாரான அழகு
தொ.இ: B/10557

பிறப்பு: 1986 இந்து
நட்சத்திரம்: பூரம் 2
கி.பா: 32 1/2 செவ்2 ல் உயரம்: 5'5"
தகைமை/தொழில்: CMA , Financial officer in SRM private
எதிர்பார்ப்பு: படித்த பெண் (உள்நாடு, வெளிநாடு)
தொ.இ: B/10558

பிறப்பு: 1982 இந்து
நட்சத்திரம்: கார்த்திகை 4 செவ் 7 ல்
உயரம்::5'6"
தகைமை/தொழில்: College, CHEF Restourance
எதிர்பார்ப்பு: படித்த பெண்
தொ.இ: B/10563

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1972 இந்து
நட்சத்திரம்: சதயம் 2
கி.பா: - வெ் 12 ல் உயரம்: 5'1"
தகைமை/தொழில்: எதிர்பார்ப்பு: பொருத்தமான மணமகன்.
தொ.இ: G/7200


பிறப்பு: 1991 கிறிஸ்தவம்
நட்சத்திரம்: சதயம் 3
கி.பா: - செவ் 7 ல்
உயரம்: 5'4"
தகைமை/தொழில்: முகாமையாளர்
எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம் பார்க்கும் மணமகன்
தொ.இ: G/7202

பிறப்பு: 1986 இந்து
நட்சத்திரம்: கார்த்திகை 2
கி.பா: 51 செவ் 8 இல் உயரம்: -
தகைமை/தொழில்: M.B.B.S. வைத்தியர்
எதிர்பார்ப்பு: வைத்தியர்
தொ.இ: G/7210

பிறப்பு: 1979 இந்து
நட்சத்திரம்: பூரம் 2 கி.பா: - செவ் 9 ல்
உயரம்: -
தகைமை/தொழில்: க.பொ.த. சாதாரணதரம்
எதிர்பார்ப்பு: சாதாரண உத்தியோகம்
தொ.இ: G/7232

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.


# 9 வயது மகனுக்கு மின்னழுத்தியால் சூடு வைத்த தாய்



(காத்தான்குடி)

காத்தான்குடி இரண்டாம் குறிச்சி ஊர் வீதியில் வசித்து வரும் சிறுவனொருவன் தாய் சூடு வைத்த காயங்களுடன் காத்தான்குடி ஆதார வைத்தியசாலையில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை காலை அனுமதிக்கப்பட்டான்.

நேற்று முன்தினம் காலை சென்ற அப்பிரதேசத்தைச் சேர்ந்த நபர் ஒருவர் அப்பாடசாலையின் அதிபரை சந்தித்து இங்கு தரம் 4 இல் கல்வி கற்கும் 9 வயதுடைய குறித்த சிறுவன் ஒருவனுக்கு அச்சிறுவனின் தாய் மின்னழுத்தியால் சூடு வைத்துள்ளதாக தெரிவித்தார்.

இதையடுத்து குறித்த பாடசாலை அதிபரும் அங்கு கற்பிக்கும் ஆசிரியர் ஒருவரும் மாணவனின் வீட்டுக்கு சென்று சிறுவனை பார்க்க முற்பட்ட போது முதலில் மறுத்த தாய் பின்னர் மகனைக் காண்பித்தார்.

உடலில் பலத்த காயங்களுடன் காணப்பட்ட சிறுவனை அழைத்துக் கொண்டு அதிபரும் ஆசிரியரும் பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்களும் காத்தான்குடி ஆதார வைத்தியசாலையில் அனுமதித்தனர்.

இதனையடுத்து ஆரம்பகட்ட சிகிச்சை மற்றும் விசாரணைகளையடுத்து சிறுவன் மேலதிக சிகிச்சைகளுக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டான்.

குறித்த சிறுவன் கடந்த சனிக்கிழமை மதரசாவுக்கு செல்லாமல் தூக்கத்தில் இருந்துள்ளான். இதன் போது சிறுவனின் தாய் சிறுவனை குர்ஆன் மதரசாவுக்கு செல்லுமாறு வற்புறுத்திய நிலையில் சிறுவன் அங்கு காணப்பட்ட மின்னழுத்தியை எடுத்து தூக்கி எறிந்துள்ளான்.

இதையடுத்து ஆத்திரமடைந்த தாய் மின்னழுத்தியை சூடாக்கி சிறுவனின் உடம்பின் பல இடங்களில் சூடு வைத்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.


கடந்த மூன்று தினங்களாக எந்தவொரு சிகிச்சையும் சிறுவனுக்கு செய்யாமல் வீட்டுக்குள்ளேயே வைத்திருந்ததாகவும் தெரிய வருகின்றது.

இச்சம்பவம் தொடர்பாக வைத்தியசாலை நிர்வாகத்தினர் காத்தான்குடி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாட்டினை செய்துள்ளனர். (இ-7)

# 13வது திருத்தமும் மாகாண சபைகளின் நிதி நிர்வாகமும்

06

கலாநிதி க.தவலிங்கம், தவிசாளர் -எல்லை நிர்ணய ஆணைக்குழு, ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.



6.ஒரு கருத்திட்டத்தின் அமுல்படுத்தல் பூரணப்படுத்தல் காலம் ஒரு வருடத்தைத் தாண்டுமிடத்து ஆண்டுக்குரிய நிதித் தேவையினை உறுதி செய்துகொள்ளும் வகையில் உரிய முறையில் கட்டம் கட்டமாக பிரித்து அமுல்படுத்தல் வேண்டும்.

7.பௌதீக உட்கட்டமைப்பு அபிவிருத்தி கருத்திட்டங்களுக்கு கிரய நலன் ஆய்வானது மேற்கொள்ளப்படுவதோடு சமூக உட்கட்டமைப்பு திட்டங்களுக்கு செயற்றிறனான கிரய கோட்பாடு பின்பற்றப்படல் வேண்டும்.

8.கருத்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட முன்பு அவை தொடர்பான சாத்தியத்தன்மை, தர நிர்ணயம் மற்றும் பராமரித்தல் முறைமை தொடர்பில் உரிய கவனம் செலுத்தப்படல் வேண்டும்.

9.அரச கட்டடங்கள் தொடர்பில், நிலத்தின் தன்மை மற்றும் அப்பிராந்தியத்தின் காலநிலைக்கு ஏற்ப பொருத்தமான ஒரே மாதிரியான வடிவமைப்பு முறையை பின்பற்றுதல்.

10.கட்டடங்களை நிர்மாணித்தல் மற்றும் ஏனைய கட்டமைப்புக்களின் நிர்மாணித்தலின் போது இடவசதியின் உச்ச பயன்பாட்டை உறுதிப்படுத்துவதோடு தேவையற்ற கட்டமைப்புக்களை தவிர்ப்பதிலும் கவனம் செலுத்தப்படல் வேண்டும்.

11.முடியுமான சந்தர்ப்பங்களில் உரிய பங்குபற்றுநர்களின் (உள்ளூராட்சி மன்றங்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள், சமூக அமைப்புக்கள்) நிதிப் பங்களிப்புக்களை பெற்று அரச வரவு-செலவுத்திட்டத்திற்கான தாக்கத்தை குறைத்தல் வேண்டும்.

12.வர்த்தக ரீதியாக சாத்திய கருத்திட்டங்களில் முடியுமான அளவில் பொருத்தமான முறைமையின் கீழ் தனியார் துறை பங்களிப்பு பெற்றுக்கொள்ளப்படல் வேண்டும்.

13.பொதுச் சொத்துக்களை உருவாக்கும் போது பின்தங்கிய மற்றும் அபிவிருத்தி குன்றிய பிரதேசங்கள் மீது முன்னுரிமை அளிக்கப்படல் வேண்டும்.

14.தேசிய மற்றும் மாகாண மட்டத்தில் ஒரே செயற்பாட்டினை மற்றும் நகல் நடவடிக்கைகள் இடம்பெறுவதை தவிர்ப்பதற்கான அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

15.சூழல், மகளிர் விவகாரம், இளைஞர் விவகாரம் போன்ற பலவற்றுடன் தொடர்புபட்ட துறைகள் தொடர்பில் உரிய கவனம் செலுத்தப்படல் வேண்டும். அவைகள் தொடர்பில் அனைத்து துறைகளிலும் கவனம் செலுத்தப்படல் வேண்டும்.

16.பால் சமத்துவத்தை இலக்காகக் கொண்ட வரவு-செலவுத்திட்டம் தொடர்பாக 09.03.2016 இல் மேற்கொள்ளப்பட்ட அமைச்சரவைத் தீர்மானத்தின் படி கிராமிய பொருளாதார அபிவிருத்திக்காக அமுல்படுத்தப்படும் கருத்திட்டங்களில் 25% பெண்களுக்காக ஒதுக்கப்படல் வேண்டும்.

17.இலங்கையில் மாற்றுத்திறன் கொண்டோரை வலுவூட்டும் முகமாக தயாரிக்கப்பட்டுள்ள மாற்றுத்திற்ன் கொண்டோருக்கான தேசிய நடவடிக்கை திட்ட பல்துறை வேலைச் சட்டகத்திற்கு மாகாண அதிகாரிகள் கவனம் செலுத்தல் வேண்டும். ஆகவே மாற்றுத்திறன் கொண்டோருக்கான தேசிய நடவடிக்கை திட்டத்தினை அமுல்படுத்துவதற்கு திருப்திகரமான மட்டத்திலான பங்களிப்பினையும் வழங்க வேண்டும்.

நிதி ஆணைக்குழுவினால் வழங்கப்படும் மேற்கூறியது போன்ற வழிகாட்டல்களை மாகாண சபைகள் பின்பற்றி தமது வருடாந்த வரவு-செலவுத் திட்டத்தை தயாரித்தல் வேண்டும்.

**மாகாண சபை நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களை அமுல்படுத்தும் போது குறிப்பிட்ட ஆண்டு நிதியாண்டிற்குள்ளேயே பூரணப்படுத்துவதற்கு திட்டமிடல், வலுவற்ற சமூகங்களின் தேவைகளைப் பூர்த்தி செய்தல், அமைவிட/பிராந்திய நன்மை என்பவற்றை உறுதி செய்தல், கட்டடங்களை நிர்மாணித்தல் மற்றும் ஏனைய கட்டமைப்புக்களின் நிர்மாணித்தலின் போது இடவசதியின் உச்ச பயன்பாட்டை உறுதிப்படுத்துவதோடு தேவையற்ற கட்டமைப்புக்களை தவிர்ப்பதிலும் கவனம் செலுத்தப்படல், தனியார் துறை பங்களிப்பு பெற்றுக் கொள்ளப்படல் பின்தங்கிய மற்றும் அபிவிருத்தி குன்றிய பிரதேசங்கள் மீது முன்னுரிமை அளிக்கப்படல், சூழல், மகளிர் விவகாரம், இளைஞர் விவகாரம் போன்ற பலவற்றுடன் தொடர்புபட்ட துறைகள் தொடர்பில் உரிய கவனம் செலுத்தப்படல் வேண்டும்**

### மாகாண நியதிச்சட்டங்கள் மற்றும் நிதிக் கட்டளைகள்

அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தம் ஒவ்வொரு மாகாண சபைக்கும் மாகாணத்துக்கு ஏற்புடைத்தான நியதிச்சட்டத்தை ஆக்கிக் கொள்ள ஏற்பாடுகளைச் செய்துள்ளது. மாகாண சபையால் ஆக்கிக் கொள்ளப்படும் ஒவ்வொரு நியதிச்சட்டமும் ஆளுநரின் சம்மதத்துக்கு சமர்ப்பிக்கப்படும். ஆளுநர் நியதிச்சட்டத்துக்கு சம்மதம் வழங்கலாம் அல்லது நியதிச்சட்டத்தை மீண்டும் கவனத்துக்கு எடுத்துக் கொள்ளும்படி மாகாண சபைக்கு திருப்பி அனுப்பலாம். இதுபற்றி முன்னைய கட்டுரை பகுதி II இல் விரிவாகப் பார்த்தோம்.

மாகாண நிதிக்கட்டளைகள் நிதி ஆணைக்குழுவின் யாப்புக்கட்டளைக்கு அமைவாக தயாரிக்கப்பட்டுள்ளது. அத்தோடு மாகாணங்கள் அவற்றின் அபிவிருத்தித் திட்டங்களுக்கான சம்மதத்தை நிதி ஆணைக்குழுவிடமிருந்து பெறவேண்டுமென எதிர்பார்க்கப்படுகிறது. பிரதானமாகப் பின்வரும் நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு மாகாணங்களின் திட்டமிடுதல் மற்றும் நடைமுறைப்படுத்துதலில் நிதி ஆணைக்குழு ஒத்துழைப்பு வழங்கும்.

-மாகாண மூலதனச் செலவு, மீள்வரும் செலவு மற்றும் ஆளணி ஆகியவற்றை வருடாந்தம் மதிப்பீடு செய்தல்

-மாகாண்ங்களில் தேவை மதிப்பீடுகள் தொடர்பாக வழிகாட்டுதல் அறிவுறுத்தல்களை வழங்குதல்

-மாகாணங்களுடன் கலந்துரையாடியபின் மாகாண அபிவிருத்திக்காக தேவையான பகிர்வுகளை அரசாங்கத்துக்கு பரிந்துரை செய்தல்

-அரசாங்கத்தால் ஒதுக்கப்பட்ட வருடாந்த கொடைகளை மாகாணங்களுக்கு அறிவித்தல்

-அரசாங்க கொள்கைகளுக்குள் நிதியைப் பயன்படுத்துதல் மற்றும் வரவு-செலவு சட்டக வேலை உள்ளடங்கலாக வருடாந்த அபிவிருத்தித் திட்டங்கள் தயாரிப்பது மற்றும் நடைமுறைப்படுத்துவது தொடர்பாக வழிகாட்டுதல்களை வழங்குதல்,

-வளங்களை விளை திறனுள்ளதாக பயன்படுத்துவதன் மூலம் சமச்சீர் பிராந்திய அபிவிருத்தி அடைவதை நிச்சயித்துக் கொள்ள மாகாணங்களை வழிநடத்துதல்

### நிதியை மாகாணங்களுக்கு ஏற்பாடு செய்தல்

அரசியலமைப்பின் தேவைகளில் ஒன்றாக , அரசாங்கம் நிதி ஆணைக்குழுவின் ஆலோசனையோடு மாகாணங்களின் நிதித்தேவைகளைநிறைவேற்றுவதற்கு போதுமான நிதிகளைப் பகிர்ந்தளிக்க வேண்டுமெனக் கோருகின்றது. அத்தகைய நிதிகள் மாகாணஙங்களுக்கிடையே சமச்சீர் பிரதேச அபிவிருத்தி அடைவதற்காக பகிரப்படவேண்டிய பொறுப்பு நிதி ஆணைக்குழுமீது சுமத்தப்பட்டுள்ளது. இந்தப் பொறுப்பை நிறைவேற்றுவதற்காக நிதி ஆணைக்குழு இரண்டு பிரதான கடமைகளை ஆற்றுகின்றது.

அ.மாகாணங்களால் தேசிய கொள்கை வழிகாட்டல் மற்றும் முன்னுரிமை ஆகியவற்றுடன் இணங்கிப் போவதை உறுதி செய்வதோடு, சமர்ப்பிக்கப்பட்ட நிதித் தேவைகளை பகுப்பாய்வு செய்வதன் அடிப்படையில் மாகாண நிதித்தேவைகளை மதிப்பீடு செய்கிறது. வருடாந்த பாதீட்டிலிருந்து மாகாணங்களின் தேவைகளுக்கு போதுமான நிதியை பகிரந்தளிக்க ஆணைக்குழு அரசாங்கத்துக்கு அறிவிக்கின்றது.

ஆ.பிரதேச வேறுபாடுகளைக் குறைக்கும் நோக்கத்துக்காக அத்தகைய நிதி மாகாணங்ளுக்கிடையே பகிர்ந்தளித்தல்

பின்வரும் கொடைகள் ஊடாக ஒதுக்கீடுகள் மற்றும் விடுவிப்புகள் ஆகியவற்றைச் செயற்படுத்துவதன் மூலம் அத்தகைய பகிர்ந்தளிப்புகள் மாகாணங்களுக்கு வழங்கப் படுகிறது.

### மொத்தக் கொடை (Block Grant)

மொத்தக் கொடையானது மாகாண் சபைகளின் சேவை வழங்கல் முறைமையின் நிலைபேறு மற்றும் மேம்பாடு என்பவற்றை நோக்காகக் கொண்டு மீண்டெழும் செலவுகளை (recurrent expenditure) ஈடுசெய்வதற்காக வழங்கப்படுகின்றது. மீண்டெழும் செலவுகளில் பிரதானமாக மாகாண சபைகளுக்கு முகாமைத்துவச் சேவைத் திணைக்களத்தினால் (Management Services Department- MSD). அங்கீகரிக்கப்பட்ட ஆளணிக்கான சம்பளங்கள் மற்றும் ஊதியங்களுமாகும். இதன் அடிப்படையில் சம்பளங்கள் மற்றும் ஊதியங்கள் மதிப்பீடானது அனுமதிக்கப்பட்ட ஆளணியிற்கு வரையறுக்கப்பட்டதாகும். இம் மொத்தக் கொடையானது உள்ளூராட்சி மன்றங்களது உறுப்பினர்களுக்கான கொடுப்பனவு மற்றும் அம்மன்றங்களின் ஊழியர்களுக்கான சம்பளங்கள் மற்றும் ஊழியர்களுக்கான மாற்றல்களை உள்ளடக்கியதாகும்.

| அட்டவணை 2: ஒதுக்கப்பட்ட மொத்தக் கொடைகள் 2014 – 2018 (ரூபா மில்லியன்) | | | | | |
|---|---|---|---|---|---|
| மாகாணம் | ஒதுக்கீடு | | | | |
| | 2014 | 2015 | 2016 | 2017 | 2018 . |
| மேல் | 11,699 | 18,842 | 21,743.80 | 15,090.98 | 14,261 |
| மத்திய | 17,917 | 23,542 | 23,374.90 | 23,319.63 | 25,383 |
| தென் | 15,785 | 21,459 | 20,507.80 | 21,032.82 | 22,858 |
| வடக்கு | 12,642 | 16,268 | 16,757.20 | 17,077.53 | 18,651 |
| வட மேல் | 16,413 | 21,705 | 20,829.10 | 21,866.19 | 21,991 |
| வட மத்திய | 10,595 | 13,616 | 14,174.10 | 13,828.65 | 14,707 |
| ஊவா | 12,500 | 16,237 | 16,422.30 | 16,114.89 | 15,711 |
| சப்ரகமுவ | 14,809 | 18,410 | 18,219.20 | 19,350.28 | 21,441 |
| கிழக்கு | 13,783 | 17,475 | 17,166.10 | 18,667.53 | 19,751 |
| மொத்தம் | **126,143** | **167,554** | **169,195** | **166,349** | **174,755** |
| மூலம்: நிதி ஆணைக்குழு மற்றும் திறைசேரி | | | | | |

நடைமுறையில் மொத்தக் கொடையில் பெரும் பகுதியானது அனுமதிக்கப்பட்ட ஆளணியினது சம்பளங்கள் மற்றும் ஊதியங்களைப் பெற்றுக் கொடுப்பதற்குப் பயன்படுத்தப்படுகின்ற அதேவேளை ஒப்பந்த அடிப்படையில் அமர்த்தப்பட்டுள்ள ஊழியர்களுக்கான சம்ப்ளங்களானது மாகாண வருமான சேகரிப்பில் இருந்து ஈடு செய்யப்படல் வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது. 2014-2018 காலப்பகுதியில் ஒதுக்கப்பட்ட மொத்தக் கொடைகள் அட்டவணை 2 இல் தரப்பட்டுள்ளன.

மாகாணங்களுக்கு வரவு-செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்படும் முழுத்தொகையும் திறைசேரியினால் மாகாணங்களுக்கு வழங்கப்படுவதில்லை. திறைசேரியினால் விடுவிக்கப்பட்ட மொத்தக் கொடைகள் அட்டவணை 3 இல் தரப்பட்டுள்ளன. அட்டவணைகள் 2 ஐயும் 3 ஐயும் ஒப்பிடும் போது திறைசேரி பொதுவாக கிட்டத்தட்ட மொத்தக் கொடைகளில் முழுத்தொகையையும் விடுவிப்பதைக் காணக்கூடியதாகவுள்ளது.

| அட்டவணை 3: விடுவிக்கப்பட்ட மொத்தக் கொடைகள் 2014 – 2017(ரூபா மில்லியன்) | | | | |
|---|---|---|---|---|
| மாகாணம் | விடுவிக்கப்பட்டதொகை | | | |
| | 2014 | 2015 | 2016 | 2017 |
| மேல் | 11,699 | 18,842 | 21,741 | 14,989 |
| மத்திய | 17,917 | 23,542 | 23,374 | 23,233 |
| தென் | 15,785 | 21,459 | 20,507 | 21,084 |
| வடக்கு | 12,642 | 16,268 | 16,754 | 17,034 |
| வட மேல் | 16,413 | 21,634 | 20,821 | 21,788 |
| வட மத்திய | 10,595 | 13,616 | 13,722 | 13,686 |
| ஊவா | 12,500 | 16,237 | 16,249 | 15,971 |
| சப்ரகமுவ | 14,809 | 18,410 | 18,218 | 19,281 |
| கிழக்கு | 13,783 | 17,475 | 16,996 | 18,430 |
| மொத்தம் | **126,143** | **167,483** | **168,382** | **165,497** |
| மூலம்: நிதி ஆணைக்குழு மற்றும் திறைசேரி | | | | |

**மொத்தக் கொடையானது (Block Grant) மாகாண சபைகளின் சேவை வழங்கல் முறைமையின் நிலைபேறு மற்றும் மேம்பாடு என்பவற்றை நோக்காகக் கொண்டு மீண்டெழும் செலவுகளை (recurrent expenditure) ஈடுசெய்வதற்காக வழங்கப்படுகின்றது. மீண்டெழும் செலவுகளில் பிரதானமாக மாகாண சபைகளுக்கு முகாமைத்துவச் சேவைத் திணைக்களத்தினால் (Management Services Department-MSD). அங்கீகரிக்கப்பட்ட ஆளணிக்கான சம்பளங்கள் மற்றும் ஊதியங்களுமாகும். 2018ம் ஆண்டு வட மாகாணசபைக்கு வழங்கப்பட்ட மொத்தக் கொடை ரூபா 18,651 மில்லியனாகும்.**

(தொடரும்)

# தெரிவு சரியானதாக அமையுமாயின் மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை தீர்ப்பதற்கான சூழல் உருவாகும்

## அமைச்சர் டக்ளஸ் நம்பிக்கை



(யாழ்ப்பாணம்)

மக்கள் எதிர்கொள்கின்ற பிரச்சினைகளை தீர்க்க வேண்டுமாயின் நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் சரியானவர்கள் தெரிவு செய்யப்பட வேண்டும்.

மாறாக, மக்களின் பிரச்சினைகளைத் தீராத பிரச்சினைகளாக வைத்திருந்து அதனூடு அரசியல் செய்கின்ற தரப்பினரின் உணர்ச்சியை ஏற்படுத்தும் கருத்துக்களை நம்பி தொடர்ந்தும் அவ்வாறானவர்களையே மக்கள் தெரிவு செய்வார்களாயின் பிரச்சினைகளுக்குத் தீர்வைப் பெற்றுக் கொள்ள முடியாத நிலை ஏற்படும் எனவும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

மேலும், ஊறணிப் பிரதேசத்தில் கரைவலை செயற்பாட்டை மேற்கொள்வதற்கான நிரந்தர அனுமதியை வழங்குவது தொடர்பில் சாதகமாக பரிசீலிப்பதாகவும் அமைச்சரால் உறுதியளிக்கப்பட்டது.

மாளிகாவத்தையில் அமைந்துள்ள அமைச்சு அலுவலகத்திற்கு நேற்று சென்ற பொத்துவில் ஊறணி கிராமிய மீனவர் அமைப்பு பிரதிநிதிகள் மத்தியில் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

ஊறணிப் பிரதேசத்தில் கரை வலையைப் பயன்படுத்துவதற்கு 2014 ஆம் ஆண்டு வழங்கப்பட்ட தற்காலிக அனுமதியைப் பயன்படுத்தி சுமார் 70 குடும்பங்களை சேர்ந்த கடற்றொழிலாளர்கள் தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர்.

ஊறணியை அண்டிய பிரதேசங்களில் கரைவலை செயற்பாட்டிற்கு நிரந்தர அனுமதி வழங்கப்பட்ட நிலையில் தமக்கு இதுவரை குறித்த அனுமதி நிரந்தரமாக்கப்படாமையால் நிச்சயமற்ற ஒரு நிலையில் தாங்கள் இருப்பதாகவும் அமைச்சரிடம் எடுத்துக் கூறினர்.

மேலும், குறித்த பிரதேசத்தில் பல்வேறு அசௌகரியங்களை எதிர்கொள்ளும் தங்களுக்கு மீன்பிடிப் படகு மற்றும் வலை போன்றவற்றை கொள்வனவுசெய்ய இலகு வழிமுறைகளையும் ஏற்படுத்தித்தர வேண்டும் என்ற கோரிக்கையையும் முன்வைத்தனர்.

இதன்போது மேலும் கருத்துத் தெரிவித்த அமைச்சர் டக்ளஸ், விரைவில் குறித்த பிரதேசத்திற்கு நேரடியாக வருகை தந்து பிரச்சினைகளை ஆராய்ந்து நியாயமானவற்றிற்கு தீர்வைப் பெற்றுத் தருவதாக உறுதியளித்தார்.

எவ்வாறெனினும், அனைத்து விடயங்களையும் உடனடியாக நிறைவேற்றுவது சாத்தியமில்லை எனவும் தேர்தல் நிறைவடைந்து புதிய அரசாங்கம் பொறுப்பேற்கும் வரை பொறுத்திருக்க வேண்டும் எனவும் அமைச்சர் தெரிவித்தார். (இ-7)

# சுதந்திர பொதுஜன முன்னணியின் தேசிய அமைப்பாளராக விமல்



(கொழும்பு)

மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான ஸ்ரீலங்கா சுதந்திர பொதுஜன முன்னணியின் முதலாவது நிறைவேற்றுக்குழு கூட்டம் நேற்று முன்தினம் இடம்பெற்றது. அலரி மாளிகையில் இந்தக் கூட்டம் இடம்பெற்றது.

இந்தக்கூட்டத்தில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, முன்னணியின் அமைப்பாளர் பசில் ராஜபக்ஷ ஆகியோர் பங்கேற்றனர்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன, ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி, மக்கள் ஐக்கிய முன்னணி, ஸ்ரீலங்கா மக்கள் கட்சி, லங்கா சமசமாஜக் கட்சி , கம்யூனிஸ்ட்கட்சி, தேசிய சுதந்திர முன்னணி, ஜனநாயக இடதுசாரி முன்னணி, தேச விமுக்தி மக்கள் கட்சி போன்ற கட்சிகளின் பிரதிநிதிகளும் இதில் பங்கேற்றனர்.

இதன்போது ஐந்து புதிய அரசியல் கட்சிகள் இணைந்த முன்னணியை நிறைவேற்றுக்குழு அங்கீகரித்தது.

ஏற்கனவே இந்த முன்னணிக்குள் ஈழமக்கள் ஜனநாயகக்கட்சி, இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், தேசிய காங்கிரஸ், தமிழ் மக்கள் விடுதலை கட்சி, ஐக்கிய மக்கள் கட்சி என்பன உள்வாங்கப்பட்டன.

இந்நிலையில் முன்னணியின் உதவி தவிசாளராக அமைச்சர் தினேஷ் குணவர்த்தன நியமிக்கப்பட்டார். தேசிய அமைப்பாளராக அமைச்சர் விமல் வீரவன்ச நியமிக்கப்பட்டார். (ஐ)

# பள்ளிவாசலில் புத்தர் சிலை





(கொழும்பு)

ராகம, மஹர சிறைச்சாலை வளாகத்தில் அமைந்திருக்கும் ஜும்ஆப் பள்ளிவாசலுக்குச் சொந்தமான கட்டடத்தில், சில நாட்களுக்கு முன்னர் சிறைச்சாலை அதிகாரிகளால் புத்தர் சிலை வைக்கப்பட்டது. இப்பள்ளி வாசல், சுமார் 100 வருடங்கள் பழைமை வாய்ந்தது என பிரதேச வாசிகள் தெரிவித்தனர்.

முஸ்லிம் தனவந்தர் ஒருவரால் நன்கொடை செய்யப்பட்ட காணியிலேயே இப்பள்ளிவாசல் இதுவரை காலமும் இயங்கி வந்தது. ராகம பிரதேச முஸ்லிம்கள் இதனையே தமது தொழுகைக்காகப் பயன்படுத்தியும் வந்தனர்.

ஏப்ரல் 21 தாக்குதலுக்குப் பின்னர் மஹர சிறைச்சாலை அதிகாரிகள், பாதுகாப்புக் காரணங்களுக்காக இப்பள்ளிவாசலுக்கு மக்கள் தொழுகைக்காக வருவதைத் தடை செய்தனர்.

இதேவேளை, இப்பள்ளிவாசலைச் சுத்தம் செய்யவோ அல்லது இங்கிருந்த பொருட்களை எடுப்பதற்கோ, எவருக்கும் அனுமதி வழங்கப்படவுமில்லை.

இந் நிலையில், குறித்த பள்ளிவாசல் கட்டடம், அண்மையில் சிறைச்சாலை அதிகாரிகளால் புனரமைக்கப்பட்டு, ஓய்வெடுக்கும் அறையாக மாற்றப்பட்டதுடன் உள்ளே புத்தர் சிலையும் வைக்கப்பட்டது. (இ-7)

# ஆயுர்வேத மருத்துவப் பிரிவை மூடியமை சிறிய வைத்தியசாலையை மூடியதற்கு சமம்

## நகரசபை உறுப்பினர் கவலை

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகரசபையில் நீண்ட காலமாக இயங்கி வந்த ஆயுர்வேத மருத்துவப் பிரிவை மூடியமை சிறிய வைத்தியசாலையை மூடியதற்கு சமமானது என சாவகச்சேரி நகரசபை உறுப்பினர் யோ.ஜெயக்குமார் தெரிவித்தார்.

சாவகச்சேரி நகரசபையில் இடம்பெற்ற மாதாந்த அமர்வின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில், ஆயுர்வேத மருத்துவப் பிரிவை மூடியமை மக்களை வெகுவாகப் பாதித்துள்ளது.

பத்திரிகை அறிவித்தல் மற்றும் எந்தவித முன்னறிவித்தலும் இன்றி நிறுத்தப்பட்டமையால் பொதுமக்கள் மாதக்கணக்கில் வந்து ஏமாற்றத்துடன் திரும்பிச் செல்கின்றனர்.

சிறிய வைத்தியசாலை ஒன்றை மூடியதற்கு சமமானது. மக்களின் நலன்கருதி சாவகச்சேரி நகரசபை ஆயுர்வேத பிரிவிற்கென இடம் வழங்கியும் அவர்கள் அதை உணர்ந்து பொறுப்புணர்வுடன் செயற்படவில்லை.

இதற்கு நகரசபை தீர்க்கமான நடவடிக்கை எடுக்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். நகரசபையில் இயங்கிய ஆயுர்வேத மருத்துவப் பிரிவை மீள ஆரம்பிக்கக்கோரி சுதேச மருத்துவ திணைக்கள பணிப்பாளருக்கு கடிதம் அனுப்பியும் இதுவரை எந்தவித பதிலும் கிடைக்கப்பெறவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

அடுத்த கட்டமாக சுகாதார அமைச்சின் செயலாளர் அல்லது ஆளுநருக்கு கடிதம் அனுப்பி உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என மேலும் சில உறுப்பினர்கள் வலியுறுத்தியுள்ளனர்.(இ-30)



சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தின் 2020ஆம் ஆண்டிற்கான வருட ஆரம்பப் பரிசோதனை நேற்றுப் புதன்கிழமை காலை சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் இடம்பெற்றது. சாவகச்சேரி பொலிஸ் நிலைய பிரதான பொலிஸ் பரிசோதகர் ராஜபக்ஷ தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் மனோஜ் ரனகெத கலந்து கொண்டு பரிசோதனை மேற்கொண்டார். (படங்கள்:- சுபேசன்)

# ஐ.நா.அறிக்கை பாதிக்கப்பட்ட மக்கள் சார்பாக குரலெழுப்பத் தவறிவிட்டது!

## வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் ஐ.நா.மனிதவுரிமைகள் ஆணையாளருக்கு மகஜர்

(ஜெனிவா)

ஐக்கிய நாடுகள் சபையின் அறிக்கை இலங்கை அரசாங்கத்திற்கு சாதகமானதாக, பக்கச்சார்பானதாக அத்தோடு பாதிக்கப்பட்ட மக்கள் சார்பாக குரலெழுப்ப தவறியுள்ளது. முக்கியமாக ஒட்டுமொத்த மனிதவுரிமை மீறல்கள் அதனால் பாதிக்கப்பட்ட மக்களின் தமிழ் அடையாளத்தை அழித்து உள்ளது. ஓ.ஐ. எஸ்.எல் அறிக்கை மற்றும் ஐ.நா. நிபுணர்கள் அறிக்கை இன அடிப்படையில் வன்னியில் உள்ள தமிழர்கள் அநீதியை எதிர்கொண்டு வருகின்றனர் என தெளிவாகக் கூறுகின்றது.



ஆனால் உங்களுடைய அறிக்கை படுகொலை செய்யப்பட்ட வெளிவிவகார அமைச்சர் தொடர்பிலும் தேசிய கீதம் தொடர்பிலும் மாத்திரம் தமிழ் மக்களைத் தொடர்புபடுத்தி குறிப்பிடுகின்றது.

மாறாக நீதிக்காக போராடும் ஒரு சமூகமாக குறிப்பிடப்பட வில்லை. இவ்வறிக்கையானது வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பான விவகாரத்தில் இலங்கை அரசு வித்தியாசமான அணுகுமுறை ஒன்றை கொண்டுள்ளது எனக் குறிப்பிடுகின்றது. இது மிகவும் வெட்கக்கேடான சொற்பிரயோகம் ஆகும். தற்போதைய அரசாங்கமும் இதற்கு முன்னைய அரசாங்கமும் தமது சிறைகளில் இருந்த எந்தவொரு நபரும் காணாமல் போகவில்லை என முற்றாக நிராகரித்ததை ஏன் நீங்கள் கூறவில்லை? படையினரிடம் தமது உறவுகளை ஒப்படைத்த சாட்சிகளாக நாம் இருக்கிறோம்.

காணாமல் போனவர்கள் தொடர்பான அலுவலகம் முக்கியமான பூர்வாங்க நடவடிக்கைகளை முன்னெடுத்து வருவதாக நீங்கள் எழுதியுள்ளீர்கள் பாதிக்கப்பட்டவர்கள் சமுதாயம் என்ற வகையில் அவ்வாறான பூர்வாங்க நடவடிக்கைகள் எவையென நாம் தெரிந்துகொள்ள விரும்புகிறோம்.

லெப்டினன் ஜெனரல் சவேந்திர சில்வா அல்லது ஜெனரல் ஜெகத் ஜயசூரிய ஆகியோரிடம எம் குடும்ப அங்கத்தவர்களுக்கு என்ன நேர்ந்தது என்பது தொடர்பில் விசாரணை செய்துள்ளீர்களா? இவர்கள் முன்னிலையிலே 18.05.2009 அவர்கள் சரணடைந்தார்கள். அத்தகைய பூர்வாங்க நடவடிக்கைகளின் விளைவாக ஒரு தனிப்பட்ட நபர் கூட உண்மை நிலைமையை அண்மிக்க முடியவில்லை. நீங்கள் certificates of absence கோடிட்டு காட்டுகிறீர்கள். ஆனால் பாரியளவில் நிகழ்ந்தேறிய வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் குற்றவியல் பொறுப்புக்கூறலுக்கான தேவையை நீங்கள் வலியுறுத்தவில்லை.

மேலும் இழப்பீட்டு தொகையை பொறுத்தவரையில் உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதலில் கொல்லப்பட்ட 250 குடும்பங்களும் நட்ட ஈடாக 265 மில்லியன் ரூபாய் பெற இருக்கிறர்கள். அதே நேரம் யுத்தத்தில் எல்லாவற்றையும் இழந்த பத்தாயிரக் கணக்கான எங்களுக்கு 500 மில்லியன் ரூபாய்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. இவை உங்களுக்கு எதை புலப்படுத்துகிறது.

ஓ.எம்.பி.மற்றும் திருத்தத்துக்கான அலுவலகங்களில் (reparations) படை அதிகாரிகளை மாத்திரம் உள்ளடக்கியுள்ளார்கள். அதில் ஏன் முன்னாள் போராளிகள் உள்ளீர்க்கப்படவில்லை.

நீங்கள் சரியாக பாதிக்கப்பட்டவர்களை அடையாளம் காண எத்தனிக்கவில்லை என்பது பெரியளவில் பாதிக்கப்பட்ட குடும்பங்களை அவமதிக்கும் விதமாக உள்ளது.

விசுவமடுவில் இடம்பெற்ற பாலியல் பலாத்கார சம்பவம் உங்கள் அறிக்கையில் இடம் பெறவில்லை. கூட்டு பாலியல் பலாத்காரம் தொடர்பில் குற்றம் சாட்டப்பட்ட படை வீரர்களை சட்டத்தின் பிடியிலிருந்து விடுவித்து சுதந்திரமாக நடமாட அனு மதித்தால் எமது பாதுகாப்பு எவ்வாறு உறுதிப்படுத்தப்படும். அத்தோடு பாதிக்கப்பட்டவர்கள் ஓடி ஒழிய வேண்டிய நிலைக்கு தள்ளப்படுகின்றனர்.

பாதிக்கப்பட்டவர்கள் அவர்களது குடும்பங்கள் சார்பில் தாங்கள் குரல் கொடுக்கின்ற பணியை திறம்பட மேற்கொள்ள வேண்டுமென மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

குறித்த மகஜர் வடக்கு- கிழக்கில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கத்தாலும் முல்லைத்தீவில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் சார்பில் அவர்களின் கையெழுத்துக்களை பெற்று சட்டத்தரணி மனோன்மணி சதாசிவம் ஊடாகவும் ஆணையாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (9)

## அபிவிருத்தித் திட்டங்கள் நிறைவுபெற்றதும் மதிப்பீட்டுடன் ஒப்பிட்டு கண்காணிக்க வேண்டும்

### பிரதேசசபை உறுப்பினர் வலியுறுத்து

(சாவகச்சேரி)

அபிவிருத்தித் திட்ட மதிப்பீட்டிற்கும் வேலை முடிவிற்கும் தொடர்பில்லாமல் காணப்படுகிறது. எனவே அபிவிருத்தித் திட்டங்கள் நிறைவு பெற்றதும் அவை மதிப்பீட்டுடன் ஒத்துப் போகின்றனவா? என்று கண்காணிக்க வேண்டும் என சாவகச்சேரி பிரதேசசபையின் சுதந்திரக் கட்சி உறுப்பினர் கு.குகானந்தன் தெரிவித்தார். சாவகச்சேரி பிரதேச சபையில் இடம்பெற்ற மாதாந்த அமர்வின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கடந்த 2017 ஆம் ஆண்டு துரித கிராமிய அபிவிருத்தித் திட்ட நிதி ஒதுக்கீடு மூலமாகப் புனரமைக்கப்பட்ட கொடிகாமம் புகையிரத நிலைய குறுக்கு வீதி மதிப்பீட்டில் உள்ளவாறு அமையவில்லை. மதிப்பீட்டில் .90 மீற்றர் எனக் குறிப்பிடப்பட்ட போதிலும் 75 மீற்றர் வீதியே புனரமைக்கப்பட்டது.

எனவே அபிவிருத்தித் திட்டங்கள் நிறைவு பெற்றதும் அவை மதிப்பீட்டுடன் ஒத்துப் போகின்றதா? என்பதனைக் கண்காணிக்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-30)

## பெரும்போக மரக்கறிச் செய்கையில் விவசாயிகள் பெரிதும் ஆர்வம்



(குப்பிழான்)

யாழ்.வலிகாமம் தெற்கு, வடக்கு, கிழக்கு ஆகிய பிரதேசங்களில் பெரும் போக மரக்கறிப் பயிர்ச் செய்கையில் விவசாயிகள் அதிக ஆர்வம் காட்டி வருகின்றனர்.

குறிப்பாக வலிகாமத்தில் குப்பிழான், ஏழாலை, புன்னாலைக்கட்டுவன், ஈவினை, குரும்பசிட்டி, வயாவிளான், கட்டுவன், தெல்லிப்பழை, அளவெட்டி, மல்லாகம், சுன்னாகம், ஊரெழு, உரும்பிராய், அச்செழு, இணுவில், கோண்டாவில், நீர்வேலி, இருபாலை, சிறுப்பிட்டி, கோப்பாய், புத்தூர் ஆகிய பகுதிகளில் பச்சைமிளகாய், கறிமிளகாய், வெங்காயம், கரட், பீட்ரூட், உருளைக்கிழங்கு, தக்காளி, கோவா போன்ற பல வகையான பயிர்கள் நூற்றுக்கணக்கான ஏக்கர் நிலப் பகுதிகளில் பயிரிடப்பட்டுள்ளன.

தற்போது யாழ்.குடாநாட்டுச் சந்தைகளில் மரக்கறிகளின் விலைகள் உயர்வாகக் காணப்படும் நிலையில் எதிர்வரும் சில நாட்களில் சந்தைகளுக்கு மரக்கறிகளின் வரத்து அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. இதன் காரணமாக மரக்கறிகளின் விலைகள் குறைவடையலாமென சந்தை வியாபாரிகளும் விவசாயிகளும் தெரிவித்தனர். (இ-18)

## பெரிய வெங்காயத்துக்கான நிர்ணய விலையை மீறினால் சுற்றிவளைப்பு நடவடிக்கை

(கொழும்பு)

அரசாங்கம் பெரிய வெங்காயத்திற்கு நிர்ணய விலையை விதித்துள்ள நிலையில் நிர்ணய விலையை விட அதிகரித்த விலைக்கு பெரிய வெங்காயத்தை விற்பனை செய்யும் வர்த்தகர்களுக்கு எதிராக சுற்றிவளைப்பு நடவடிக்கைகள் நேற்று முன்தினம் முதல் ஆரம்பித்ததாக நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபை தெரிவித்தது.

நிர்ணய விலைக்கு அதிகமாக விற்பனை செய்யும் வர்த்தகர்களுக்கு எதிராக கடும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமென்றும் குறித்த அதிகார சபையின் பணிப்பாளர் அசேல பண்டார தெரிவித்தார்.

தற்போது கொழும்பு மெனிங் மார்கட்டில் ஒரு கிலோகிராம் பெரிய வெங்காயம் 150 ரூப்பாவுக்கு விற்பனை செய்யப்படுவதாகவும் இறக்குமதி செய்யப்படும் பெரிய வெங்காயத்துக்கு கடந்த 23 ஆம் திகதி முதல் அமுலாகும் வகையில் அதிகபட்ச சில்லறை விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளதையும் அவர் சுட்டிக் காட்டினார்.

அதற்கிணங்க, ஒரு கிலோ இறக்குமதி செய்யப்படும் பெரிய வெங்காயத்தின் உச்ச சில்லறை விலை 190 ரூபாவாக நிர்ணயிக்கப்பட்டது. சந்தையில் அண்மைக்காலமாக பெரிய வெங்காயத்தின் விலை 300 ரூபாவுக்கு மேல் அதிகரித்துள்ள நிலையில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டதாக அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## வெளிச்சவீடு திறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கத்தின் ஏற்பாட்டில் சேந்தாங்குளம் கடற்கரையில் அமைக்கப்பட்ட வெளிச்சவீடு திறப்பு விழா நாளை மறுதினம் 29 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 5 மணியளவில் சேந்தாங்குளம் கடற்கரையில் நடைபெறும்.

இதில், பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் (காணி) எஸ். முரளிதரன், சிறப்பு விருந்தினர்களாக சிவன் அறக்கட்டளை நிறுவனத்தின் தலைவர் கணேஸ்வரன் வேலாயுதம், A.V.R அறக்கட்டளை நிறுவனத்தின் தலைவர் பொ. சிவகுமார் ஆகியோர் கலந்து கொள்வர்.(இ-5)

# சஜித் கூட்டணியில் உத்தியோகபூர்வமாக இணைந்த தமிழ் முற்போக்கு கூட்டணி



(கொழும்பு)

**மூன்னாள் அமைச்சர் மனோ கணேசன் தலைமையிலான தமிழ் முற்போக்கு கூட்டணி நேற்றுப் புதன்கிழமை உத்தியோகபூர்வமாக சஜித் பிரேமதாஸ தலைமையிலான புதிய கூட்டணியில் இணைந்துகொண்டது.**

**சஜித் பிரேமதாஸ தலைமையில் நேற்று நாடாளுமன்ற கட்டடத் தொகுதியில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே தமிழ் முற்போக்குக் கூட்டணி இந்த அறிவிப்பை வெளியிட்டது.**

இதில் கருத்துத் தெரிவித்த மனோ கணேசன், புதிய கூட்டணியில் இணையவும் வரவிருக்கும் நாடாளுமன்றத் தேர்தலில் சஜித் பிரேமதாஸவை ஆதரிக்கவும் கட்சியிலுள்ள அனைத்து உறுப்பினர்களும் ஏகமனதாக ஒப்புக்கொண்டதாகக் கூறினார்.

ஐக்கிய தேசிய முன்னணியின் பயணம் முக்கியமாக தேசிய பாதுகாப்பு, நல்லிணக்கம் மற்றும் சகவாழ்வு மற்றும் பொருளாதாரம் ஆகியவற்றில் கவனம் செலுத்தும் என்றும் மனோ கணேசன் சுட்டிக்காட்டினார்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையிலான கூட்டணியில் இணைந்து கொள்வதாக ஜாதிக ஹெல உறுமய, தமிழ் முற்போக்குக் கூட்டணி மற்றும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆகிய கட்சிகள் கடந்த 12 ஆம் திகதி அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# 130 கோடி ரூபாய் பெறுமதியான அதிநவீன தகவல் தொடர்பாடல் கருவிகள் இறக்குமதி செய்தது குறித்து விசாரணை!

(கொழும்பு)

முறையற்ற விதத்தில் கொள்வனவு செய்யப்பட்ட 130 கோடி ரூபாய் பெறுமதியான தகவல் தொடர்பு சாதனங்கள் பற்றிய விசாரணையை குற்றப் புலனாய்வுப் பிரிவு ஆரம்பித்தது.

கடந்த 2016, 2017 ஆம் ஆண்டுகளில் இந்தக் கொள்வனவு இடம்பெற்றது.

மத்திய கிழக்கு நிறுவனமொன்றில் கொள்வனவு செய்யப்பட்ட அதி நவீன தொலைத் தொடர்பு சாதனங்களான இவற்றை கொள்வனவு செய்தபோது, பொலிஸார், புலனாய்வுத்துறையினர் மற்றும் தொடர்புடைய நிறுவனம் எதிலும் அது பற்றிக் கலந்துரையாடப்படவில்லை.

இந்நிலையில் இது குறித்து ஓய்வுபெற்ற இராணுவ அதிகாரியொருவர் விசாரணைக்குட்படுத்தப்படவுள்ளார். (இ-7)

# யாழ். நகரில் கட்டாக்காலியாகத் திரிந்த 45 நாய்கள் இதுவரை அப்புறப்படுத்தல்

(யாழ்ப்பாணம்)

வீதி அபிவிருத்தி மற்றும் வீதி பாதுகாப்பு தொடர்பாக அண்மையில் அனைத்து பொறுப்புசார் அதிகாரிகளுடனும் வடமாகாண ஆளுநர் திருமதி பி.எஸ்.எம். சார்ள்ஸ் விரிவாக ஆராய்ந்து சில நடவடிக்கைகளை விரைந்து எடுக்குமாறு பணிப்புரை விடுத்திருந்தார்.

அதற்கமைவாக நேற்று முன்தினம் முதல் யாழ்.நகரில் கட்டாக்காலி நாய்களைப் பிடிக்கும் நடவடிக்கையை யாழ் .மாநகரசபை ஊழியர்கள் ஆரம்பித்தனர். இதுவரை 45 இற்கும் மேற்பட்ட நாய்கள் இவ்வாறு அப்புறப்படுத்தப்பட்டதாக குறித்த நடவடிக்கைகளை வழிநடத்தும் சுகாதார அலுவலர் தெரிவித்தார். (இ-7)

# தென்மராட்சியில் மூன்று இடங்களில் புதிதாக ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்க வேண்டிய தேவை உள்ளது

(சாவகச்சேரி)

தென்மராட்சியில் மூன்று இடங்களில் புதிதாக ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கப்பட வேண்டிய அவசியம் காணப்படுவதாக சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி சிவகுமார் சுட்டிக்காட்டினார்.

கடந்த திங்கட்கிழமை சாவகச்சேரி கலாசார மண்டபத்தில் இடம்பெற்ற பிரதேச மட்ட அபிவிருத்தித் தேவைப்பாடுகள் தொடர்பான கலந்துரையாடலின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

தென்மராட்சியில் நுணாவில், கொடிகாமம் மற்றும் மிருசுவில் ஆகிய பகுதிகளில் கர்ப்பிணித் தாய்மார் மற்றும் குழந்தைகளுக்கான புதிய ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்க வேண்டிய தேவை உள்ளது.

நுணாவில் பகுதியில் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கான காணி இதுவரை கிடைக்கப்பெறாமை பெரும் சவாலாக உள்ளது.

அத்துடன் ஆரம்ப சுகாதார நிலையங்கள் காற்றோட்டம் மற்றும் வெளிச்சமான சூழலில் காணப்பட வேண்டும். மந்துவில் மற்றும் மறவன்புலவு பகுதிகளில் அமைந்துள்ள ஆரம்ப சுகாதார நிலையங்களில் குடிநீர் வசதி செய்யப்பட வேண்டிய தேவை இருப்பதுடன் திருத்த வேலைகளும் காணப்படுவதாக அவர் மேலும் தெரிவித்தார். (இ-30)

# பண் மகள் வெளியீடு இன்று

(யாழ்ப்பாணம்)

பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலையின் பண் மகள் வெளியீடு இன்று 27 ஆம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 10 மணியளவில் நூலகத்தில் அதிபர் திருமதி செ.தேவராஜ் தலைமையில் இடம்பெறும்.

இதில் பிரதம விருந்தினராக, வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் சு.சுந்தரசிவம் கலந்து கொள்வார். (இ-5)

# செய்தித்துளிகள்

## கருத்தரங்கு தொடரில் கலிய நாயனார் புராணம்

(யாழ்ப்பாணம்)

பெரியபுராணம் காட்டும் வாழ்வியல் கருத்தரங்குத் தொடர் - 02 இல் "கலிய நாயனார் புராணம்" எதிர்வரும் முதலாம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணியளவில் உரும்பிராய் பலாலி வீதியில் அமைந்துள்ள கருணை இல்ல பொன்.தெய்வேந்திரம் அரங்கு-சைவ வித்தியா விருத்திச் சங்கத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் யாழ்.பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறை ஓய்வுநிலை முதுநிலை விரிவுரையாளர் திருமதி.நாச்சியார் செல்வநாயகம் தலைமையில் நடைபெறவுள்ளது. (இ-5)

## மின்சார ரயில் சேவை ஆரம்பம்

(கண்டி)

இலங்கையின் முதலாவது மின்சார ரயில் சேவை கண்டி நகரில் ஆரம்பிக்கப்படவுள்ளதாக தெரிவிக்கும் அமைச்சர் மகிந்த அமரவீர அந்தத் திட்டத்தை ஆரம்பிக்கும் பணிகளை துரிதப்படுத்துமாறும் பணித்தார்.

போக்குவரத்து அமைச்சில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பொன்றிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்த ரயில் போக்குவரத்து திட்டத்தின் படி ரம்புக்கனையிலிருந்து கடுகன்னாவை வரையிலும், கடுகன்னாவையிலிருந்து கண்டி, கடுகஸ்தொட வரையிலும் இரட்டைப் பாதைகள் மூலம் ரயில் சேவை முன்னெடுக்கப்படும் என்றும் தெரிவித்தார்.

மேலும் குண்டசாலை பகுதியையும் உள்வாங்கும் வகையில் கம்பளை வரையில் இத்திட்டத்தை விஸ்தரிக்க எதிர்பார்த்துள்ளதாக தெரிவித்த அவர், கண்டி குட்செட் பஸ் தரிப்பு நிலையம் அமைந்துள்ள பகுதியை போக்குவரத்து மையமாக மேம்படுத்தி அங்கிருந்து சுரங்க ரயில் பாதையொன்றை தலதா மாளிகை வழியாக அமைக்கப்படு மெனவும் தெரிவித்தார். (ஜ)




சிவன் அறக்கட்டளை ஸ்தாபகர் கணேஸ்வரன் வேலாயுதத்தால் யாழ்.அளவெட்டி தெற்கு அமெரிக்க மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலைக்கு 43 ஆயிரம் ரூபாய் பெறுமதியான பிளாஸ்ரிக் கதிரைகள் அண்மையில் வழங்கப்பட்டன. (படம்:-குப்பிழான் செய்தியாளர்)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கொடிகாமம் | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 130 | 120 | 140 | 120 | 120 |
| உருளைக்கிழங்கு | 100 | 120 | 130 | 120 | 120 |
| பச்சைமிளகாய் | 140 | 140 | 280 | 110 | 100 |
| தக்காளி | 150 | 200 | 120 | 80 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 100 | 120 | 120 | 80 | 120 |
| கோவா | 120 | 180 | 150 | 110 | 120 |
| கரட் | 160 | 180 | 280 | 250 | 250 |
| பூசணி | 60 | 120 | 60 | 70 | 120 |
| புடோல் | 80 | 120 | 90 | 80 | 120 |
| வாழைக்காய் | 60 | 80 | 80 | 150 | 100 |
| சின்ன வெங்காயம் | 300 | 300 | 350 | 250 | 250 |
| பெரிய வெங்காயம் | 190 | 250 | 140 | 260 | 200 |
| பாகற்காய் | 150 | 160 | 250 | 150 | 160 |
| வெண்டிக்காய் | 80 | 140 | 60 | 70 | 140 |
| கருணைக் கிழங்கு | 80 | 90 | 100 | 80 | 80 |
| பயற்றங்காய் | 120 | 150 | 120 | 80 | 100 |
| லீக்ஸ் | 200 | 200 | 320 | 250 | 200 |
| பீற்றூட் | 100 | 100 | 200 | 90 | 120 |
| கறிமிளகாய் | 150 | 120 | 320 | 120 | 120 |
| முருங்கைக்காய் | 600 | 500 | 550 | 250 | 400 |
| போஞ்சி | 160 | 150 | 200 | 100 | 160 |
| கத்தரிதம்புள்ள | 120 | 120 | 160 | 100 | 100 |
| கீரை - 1பிடி | 50 | 30 | 80 | 25 | 30 |
| தேசிக்காய் | 40 | 80 | 150 | 50 | 50 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 60 | 45-60 | 50 | 40-70 |
| இராசவள்ளி | 160 | 180 | 400 | 120 | 150 |
| வெங்காயப்பூ | 240 | 200 | — | 90 | 200 |
| முள்ளங்கி | 80 | 80 | — | 40 | 80 |
| பொன்னாங்காணி | 40 | 35 | 50 | 20 | 30 |
| வல்லாரை | 15 | 30 | 15 | 20 | 30 |
| ஈரப்பலா | 80 | — | 80 | 100 | 100 |




# முள்ளம்பன்றி



ஒரு காட்டில் ஒரு தாய் முள்ளம்பன்றியும் அதன் குட்டியும் வசித்து வந்தன. குட்டி முள்ளம் பன்றி மிகவும் துருதுருவென இருக்கும். அங்கும் இங்கும் ஓடிக்கொண்டு இருக்கும். ஒரு நாள் அது காட்டில் உள்ள மற்ற விலங்குக் குட்டிகளுடன் விளையாடச் சென்றது. மற்ற விலங்குக் குட்டிகள் ஓடிப் பிடித்து விளையாடிக்கொண்டு இருந்தன. முள்ளம்பன்றி குட்டி அங்கே சென்று "என்னையும் விளையாட சேர்த்துக் கொள்ளுங்கள்" என்று வேண்டியது. மற்றக் குட்டிகளும் அதை விளையாடச் சேர்த்துக் கொண்டன. எல்லா விலங்குக் குட்டிகளும் ஓடிப் பிடித்து விளையாடிக் கொண்டு இருந்தன. முள்ளம் பன்றி குட்டி ஓடிப்பிடித்து விளையாடும் போது அதன் முட்கள் மற்றக் குட்டிகள் மீது குத்தியது. இதனால் மற்றக் குட்டிகள் முள்ளம் பன்றி குட்டியிடம் "உன்னுடைய முட்கள் எங்கள் மேல் குத்துகிறது. அதனால் எங்களுடன் விளையாட வேண்டாம்" என்று கூறின. அதற்கு முள்ளம் பன்றிக்குட்டி "நான் உங்கள் மேல் குத்தாமல் விளையாடுகிறேன். என்னை விளையாட்டிலிருந்து நீக்க வேண்டாம்" என்று கேட்டது. ஆனாலும் மற்ற குட்டிகள் அதற்கு சம்மதிக்கவில்லை. இதனால் மிகவும் மன வருத்தம் அடைந்த முள்ளம் பன்றிக் குட்டி சோகமாக வீடு திரும்பியது. அம்மாவிடம் வந்து அழுதது. அது தன் அம்மாவிடம் "அம்மா எனக்கு இந்த முட்கள் வேண்டாம். எல்லாவற்றையும் வெட்டி விடு" என்று கூறியது. அதற்கு அதன் அம்மா "நீ அப்படி சொல்லக்கூடாது. இயற்கையில் கிடைத்துள்ள அந்த முட்கள் தான் நமக்கு அழகு. நம்மை எதிரிகள் யாராவது தாக்க வந்தால் நாம் அந்த முட்களால் அவர்களை குத்தி தப்பித்து கொள்ளலாம்" என்றது.

ஆனால் குட்டி அதை காது கொடுத்து கேட்கவில்லை. "அதெல்லாம் கிடையாது. எனக்கு இப்போதே எனது முட்களை வெட்டி விடு" என்று அடம் பிடித்தது.

அதற்கு அதன் அம்மா "நான் அந்த முட்களை வெட்டி விட்டு விடுவேன். ஆனால் திரும்பி வேண்டுமென்றால் பிறகு உடனடியாக கிடைக்காது" என்றது.

"அதனால் பரவாயில்லை" என்றது குட்டி. தாயும் தன் குட்டியின் ஆசைப்படியே அதன் முட்களை வெட்டி விட்டது.

முட்களை கத்தியால் சரித்து விட்ட பின் முள்ளம் பன்றி குட்டி மொழுமொழுவென இருந்தது. உடனே முள்ளம் பன்றி குட்டி மீண்டும் தனது நண்பர்களுடன் விளையாடச் சென்றது. மொழுமொழுவென இருந்த முள்ளம் பன்றி குட்டியை பார்த்தவுடன் எல்லா குட்டிகளும் கொல்லென சிரித்து விட்டன. உடனே கோபம் கொண்ட முள்ளம் பன்றி குட்டி "நீங்கள் எல்லோரும் குத்துகிறது என்று சொன்னதால்தான் நான் என் அம்மாவிடம் சொல்லி முட்களை வெட்டி கொண்டு வந்திருக்கிறேன். நீங்கள் அனைவரும் இப்படி சிரித்தால் எனக்கு கோபம் வரும்" என்று கூறியது.

உடனே மற்ற குட்டிகள் "சேச்சே. அப்படியெல்லாம் இல்லை. இப்போது நீ மிகவும் அழகாக இருக்கிறாய்" என்று கூறி சிரித்துக் கொண்டன. "உன்னை நாங்கள் மறுபடியம் விளையாட்டில் சேர்த்துக் கொள்கிறோம்" என்று கூறின.

முள்ளம் பன்றிக்குட்டி மொழுமொழுவென இருந்ததால் எல்லா குட்டிகளும் அதை தொட்டு தொட்டு பார்த்தன. பிறகு ஒரு குரங்குக் குட்டி அதைக் கிள்ளி, கிண்டல் செய்தது. மீண்டும் கோபம் கொண்ட முள்ளம் பன்றிக்குட்டி, குரங்கு குட்டியுடன் சண்டைக்கு சென்றது. இப்படியாக சண்டை அதிகரித்தது.

இதனால் மிகவும் மன வருத்தம் அடைந்த முள்ளம் பன்றி குட்டி, மீண்டும் சோகமாக வீடு திரும்பியது.

அதைப் பார்த்த தாய் முள்ளம் பன்றி, குட்டியை பார்த்து "ஏன் மிகவும் சோகமாக வீடு திரும்பி விட்டாய்?" என்று கேட்டது.

முள்ளம் பன்றி குட்டி, நடந்ததை கூறியது. உடனே அதன் அம்மா "இதற்குத்தான் நான் முள்ளை எல்லாம் வெட்ட வேண்டாம் என்று கூறினேன்" என்றது.

அப்போது முள்ளம் பன்றி குட்டி, "எனக்கு மறுபடியும் எனது முட்கள் வேண்டும். எப்போது அவை வளரும்?" என்று கேட்டது. அதன் அம்மா "அவை வளர ஒரு மாதம் ஆகும்" என்றது.

அதற்கு குட்டி "ஐயோ, அதுவரை நான் என்ன செய்வது?" என்று வருத்தப்பட்டது.

அதன் அம்மா "அதுவரை விளையாட எங்கும் போக வேண்டாம். வீட்டில் பாடம் படித்துக் கொண்டு சும்மா இரு" என்றது.

இப்படியாக ஒரு மாதம் ஓடியது. அதற்குள் குட்டிக்கு முட்கள் மீண்டும் வளர்ந்து விட்டன. மறுபடியும் முள்ளம் பன்றி குட்டி தனது நண்பர்களுடன் விளையாட சென்றது. இப்போது மற்ற குட்டிகள் அதைப் பார்த்து "மீண்டும் நீ முட்களுடன் வந்து விட்டாயா? நீ எங்களுடன் விளையாடினால் உன் முட்கள் எங்கள் மேல் குத்தும்" என்றன.


மீண்டும் கோபம் கொண்ட முள்ளம் பன்றி குட்டி, "என்ன நீங்கள் எல்லாம் விளையாடுகிறீர்களா? முள் இல்லாமல் வந்தால் கிண்டல் செய்து என்னை கிள்ளுகிறீர்கள். முட்களுடன் வந்தால் குத்தும் என்கிறீர்கள். இப்போது என்னை விளையாட்டில் சேர்த்துக் கொள்கிறீர்களா? அல்லது எல்லாரையும் எனது முள்ளால் நன்றாக குத்தி விடட்டுமா?" என்று அதட்டியது.

இதைப் பார்த்து பயந்த மற்ற குட்டிகள் அதை விளையாட்டுக்கு சேர்த்துக் கொண்டன. இப்போது முள்ளம் பன்றி குட்டி தனது நண்பர்களுடன் விளையாடி சந்தோசமாக நாட்களை கழித்தது.

## விடுகதைகளும் விடைகளும்

- கால் நான்கு நடக்காது கண் ஆயிரம் இமைக்காது.
  **நார்க்கட்டில்**
- உச்சியிலே குடுமி உண்டு மனிதனல்ல. உருண்டையான வடிவம் உண்டு முட்டையல்ல. நீர்ததும்பி நிறைந்திருக்கும் குளமும் அல்ல. நெற்றியிலே கண் இருக்கும் சிவனும் அல்ல.
  **தேங்காய்**
- ஆயாள் வீட்டுத் தோட்டத்திலே பச்சைப் பாம்பு தொங்குது.
  **புடலங்காய்**
- மஞ்சப் பெட்டி, மரக்காப் பெட்டி, ஒருநாளும் திறக்காப் பெட்டி.
  **வயிறு**
- உரித்த முயல் ஊருக்குப் போகுது.
  **புளி**
- கொத்துக் கொத்து ஈச்சங்காய் கோடாலி ஈச்சங்காய் மதுரைக்குப் போனாலும், வாடாத ஈச்சங்காய்.
  **பற்கள்**
- ஆத்தாள் தெருவிலே, மகள் கொலுவிலே.
  **வைக்கோல், நெல்**
- கண்ணாடிக் குண்டு காற்றிலே பறக்குது கையாலே தொட்டால் காணாமல் போகுது.
  **சோப்பு நீர்க்குமிழி**
- ஐந்து வீட்டுக்கு ஒரே முற்றம்.
  **உள்ளங்கை**
- கேட்டால் பேசமாட்டான் - இரண்டு போட்டால் பேசுவான்.
  **மத்தளம்**
- அதிசயக் குளத்திலே அற்புதக் குருவி. வாலினால் தண்ணீரை வற்றவற்றக் குடிக்குது.
  **விளக்குத் திரி**
- அடிமலர்ந்து நுனி மலராத பூ என்ன பூ?
  **வாழைப்பூ**

## புள்ளிக்கோட்டை இணைத்து உருவைக் கண்டுபிடியுங்கள்



நேரத்தை தள்ளிப் போடாதீர்கள் தாமதங்கள் அபாயமான முடிவைக் கொண்டுள்ளன. – ஷேக்ஸ்பியர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## தேர்தலில் வெல்வதற்காக நாடகம் நடிக்காதீர்கள்

பொதுத் தேர்தலுக்கான அறிவித்தல் எதிர் வரும் மார்ச் மாதம் வெளிவரலாமென நம்பப் படுகிறது.

இந்நிலையில் தேர்தல் வெற்றிக்காக பொய் வேடம் தரித்துக் கொண்டு, தேர்தல் களம் இறங்குவதற்கான ஏற்பாடுகளில் சிலர் ஈடுபட் டிருப்பதைக் காணமுடிகிறது.

இதுகாறும் மௌனம் சாதித்தவர்கள் இப் போது திடீரென விழித்துக் கொண்டவர்கள் போல சர்வதேச விசாரணை தேவை என்ற பொருள்பட கருத்துரைத்து வருகின்றனர்.

ஏலவே சிங்கள அரசுடன் சேர்ந்து கொண்டு, ஐ.நா மனித உரிமை ஆணையம் விதித்த நிபந் தனைகளை நிறைவேற்ற இலங்கை அரசுக் குக் கால அவகாசம் கொடுக்க வேண்டு மென்று கூறியவர்கள் இப்போது ஐ.நாவுக்கு அழுத்தம் கொடுப்பதுபோல தங்கள் உரை களையும் கருத்துக்களையும் மாற்றி வரு கின்றனர்.

சரி, பரவாயில்லை, முன்பு மோசம் செய்த வர்கள் இப்போது திருந்தி நன்மை செய்ய வருகிறார்கள் என்றால் அதுதான் இல்லை.

இலங்கையில் நடந்த போர்க்குற்றம் தொடர் பில் சர்வதேச விசாரணை தேவை என்று கேட் பதுகூட, பொதுத் தேர்தல் வருவ தால் அன்றி வேறில்லை என்பதுதான் உண்மை.

இதுதவிர, தாங்கள் கொடுக்கின்ற அழுத் தம் காரணமாக இலங்கை அரசு அச்சம் அடைந்துள்ளது போன்ற காட்டாப்புகளும் நடந்த வண்ணமுள்ளன.

இவ்வாறு செய்வதன் மூலம் எதிர்வரும் பொதுத் தேர்தலிலும் தங்களை வெல்ல வைத் தால் மட்டுமே ஐ.நாவுக்கான அழுத்தத்தைத் தொடர்ந்து தாம் கொடுக்க முடியும் என்று தேர்தல் பிரசாரத்தை அமைத்துக் கொள்வதற் கான திருகுதாள வேலையே இதுவாகும்.

இதை நாம் கூறும்போது இல்லை நாங்கள் தமிழினப் பற்றோடுதான் இதைச் சொல்கி றோம் என்றால்,

கடந்த வருடமோ அல்லது அதற்கு முந்திய வருடமோ இந்த அழுத்தம் இல்லாமல் போனது ஏன் என்பதுதான் நம் கேள்வி.

நடைமுறை ஒன்றும் நடிப்பு இன்னொன்று மாக இருப்பது கடவுளுக்கு ஏற்புடையதல்ல.

எனவே யாராக இருந்தாலும் நாங்கள் இல்லாவிட்டால் எதுவும் நடக்காது என்று மட் டும் பிரசாரம் செய்யாதீர்கள். இவ்வாறு பிர சாரம் செய்வது தமிழினத்தை அழிவுப் பாதைக்கு இட்டுச் செல்வதாகும்.

மாறாக நீங்கள் ஏற்கனவே பாராளுமன்ற பதவியில் இருந்திருந்தால், அப்போது செய்தது என்ன? என்பதை எடுத்துக் கூறுங்கள் இனி யும் என்ன செய்வோம் என்பதைத் தெரிவியுங் கள்.

இதைவிட்டு அப்பாவித் தமிழ் மக்களை ஏமாற்றி அவர்களுக்கு ஏற்பட்ட இழப்புகளை உங்களுக்கான தேர்தல் மூலதனமாக ஆக்கி, அதனூடு வாக்குப் பெறும் வஞ்சகத்தை ஒரு போதும் செய்யாதீர்கள் என்பதுதான் நம் தய வான கோரிக்கை.

எதிர்க்கட்சியை விமர்சிப்பதால் நாட்டுக்கு நன்மையில்லை

# சலுகைகளை பெற்றுக் கொடுப்பதற்கு ஐ.தே.கட்சி எதிர்ப்புகளை காட்டாது

## ரவி கருணாநாயக்க தெரிவிப்பு

(கொழும்பு)

மக்களுக்கான சலுகை களை பெற்றுக் கொடுப்ப தற்கு ஐக்கிய தேசியக் கட்சி எதிர்ப்பு தெரிவிக்கவில்லை என அக்கட்சியினபாராளு மன்ற உறுப்பினர் ரவி கரு ணாநாயக்க தெரிவித்தார்.

எதிர்க்கட்சியை விமர் சித்துக் கொண்டிருக்கும் அரசாங்கத்தால் நாட்டிற்கு நன்மையக்கும் வகையி லான செயற்பாடுகள் எத னையும் எதிர்பார்க்க முடி யாது என்றும் அவர் குறிப் பிட்டார்.

ஐக்கிய தேசியக் கட்சி யின் தலைமையகத்தில் நேற்று (புதன்கிழமை) இட ம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவித்த போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவி க்கையில், "பாரிய பொரு ளாதார நெருக்கடியின் மத் தியிலே நல்லாட்சி அரசா ங்கம் ஆட்சியை கைப்ப ற்றியது. இருந்தபோதும் மக்களுக்கு வழங்கிய வாக் குறுதிகளை ஆட்சியை கை ப்பற்றி நூறு நாட்களுக்குள் நிறைவேற்றியிருந்தோம்.

இரு மாதத்திற்குள் தேசிய வருமானத்தையும் 90 வீதமாக வளர்ச்சிய டையச் செய்திருந்தோம். இதன் காரணமாக 2017 ஆம் ஆண்டு சிறந்த நிதி முகாமைத்துவத்தை நாங் கள் மேற்கொண்டு வரு வதாக ஏசியா பசுபிக் வங்கி எமக்கு வாழ்த்து தெரிவி த்திருந்தது.

எமது ஆட்சிகாலத்தில் மக்களின் வாழ்வாதார செலவுகளை குறைப்பதற் காக பல்வேறு செயற்பாடு களை முன்னெடுத்திரு ந்தோம். ஆனால் தற்போ தைய அரசாங்கம் இந்த விடயங்கள் தொடர்பில் அவதானம் செலுத்துவதாக தெரியவில்லை.

நிறைகுறை பிரேர ணைக்கு நாங்கள் ஆதர வளிக்கவில்லை. அதனா லேயே வாழ்வாதார செலவு களை குறைக்கமுடியாது இருப்பதாக அரசாங்கம் தெரிவித்து வருகின்றது. நாங்கள் ஒரு போதும் அவ் வாறு செய்யவில்லை. மக்க ளுக்கான சலுகைகளை பெற்றுக் கொடுப்பதற்கு நாங் கள் எதிர்ப்புத் தெரிவிக்க வில்லை. மேலதிகமாக கடன்களை பெறவேண் டாம் என்றே தெரிவித் தோம்.

தற்போதைய அரசாங் கம் மக்களின் பிரச்சினை கள் தொடர்பில் அவதானம் செலுத்துவதாக தெரியவி ல்லை. அவர்கள் எதிரக் கட்சியை விமர்சிப்பதனூ டாக திருப்திகண்டு வருகின் றனர். இவ்வாறான அரசா ங்கத்திடம் நாட்டின் நலன் கருதிய செயற்பாடுகள் எத னையும் எதிர்பார்க்க முடி யாது. எதிர்காலத்திலும் எதிர்க்கட்சியினர் விடும் பிழைகளையே அவதானி த்து வருவதற்கான வாய் ப்பிருக்கின்றது.

அரசாங்கம் தொடர்ந் தும் இவ்வாறு செயற்படா மல் சிறந்த வேலைத்திட் டங்களை முன்னெடுக்கும் என்றால் அதற்கான ஒத்து ழைப்புகளை பெற்றுக் கொடுக்க நாங்கள் தயா ராகவே உள்ளோம் "என்று அவர்கூறினார். (ம)

# அரச ஊழியர் ஓய்வு பெற்று ஒரு மாதத்தில் ஓய்வூதியம்

## ஜனாதிபதி கோட்டா உத்தரவு

(கொழும்பு)

அரச ஊழியராக இரு ந்து ஒருவர் ஓய்வு பெற்றால் ஒரு மாதத்தில் அவருக் கான ஓய்வூதியத்தை வழ ங்க வேண்டும் என ஜனா திபதி கோட்டாபய ராஜபக்ஷ உத்தரவிட்டுள்ளார்.

இந்தத் தகவலை ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமு னவின் ஸ்தாபகர் பசில் ராஜபக்ஷ தெரிவித்துள் ளார்.

அதிகாரிகளுடன் இடம் பெற்ற கலந்துரையாடலின் போது பசில் ராஜபக்ஷ இத னை குறிப்பிட்டுள்ளார்.

"இலங்கையின் நடை முறையில் அரச ஊழியர் ஒருவர் ஓய்வூதியம் பெற் றால் அவரது ஓய்வூ தி ய த்தை பெற இரண்டு வரு டங்களாகும். எனினும் அதனை ஒரு மாதத்திற்குள் வழங்கும் முறையை முன் னெடுக்குமாறு ஜனாதிபதி ஆலோசனை வழங்கியு ள்ளார்.

ஓய்வு பெற்றவரின் ஓய் வூதிய கோப்புகள் பல மாத ங்கள் வைத்துக் கொள் ளப்படுகின்றன. ஓய்வூதிய த்தை பெற இரண்டரை வருடங்களாகின்றன.

அத்துடன் அரசியல் பழி வாங்கல் அல்லது வேறு தனிப்பட்ட பழிவாங்கல்கள் காரணமாக ஓய்வு பெற் றவருக்கு அடுத்த மாதமே ஓய்வூதியம் கிடைக்கவி ல்லை என்றால் அந்த நபர் எப்படி வாழ்வார்.

இந்நிலைமையினால் இந்த உத்தரவை ஜனா திபதி பிறப்பித்துள்ளார். நாளை ஒருவர் ஓய்வு பெற் றால், அவரது அடுத்த சம் பள தினத்தன்று ஓய்வூ தியம் கிடைக்க வேண்டும்.

எவ்வித குறைபாடுகள் இருந்தாலும் பரவாயில்லை ஓய்வூதியத்தை வழங்க வேண்டும். பின்னர் பிழை என்றால் அதனை திருத் திக் கொள்ளலாம்" என பசில் ராஜபக்ஷ மேலும் தெரிவித்துள்ளார். (ம)

## யாழ்.பல்கலையின் பேரவையின் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பஷ்கலைக்கழக த்தின் பேரவைக் கூட்டம் தகுதிவாய்ந்த அதிகாரி பேராசிரியர் கந்தசாமி தலை மையில் நேற்று நடைபெ ற்றது

மேலும் பேரவை உறு ப்பினர்களின் 1வது கூட்டம் எதிர்வரும் 29.02.2020 சனிக்கிழமை காலை 9.00 மணியளவில் யாழ் பல் கலைக்கழக கேட்போர் கூட த்தில் நடைபெறவுள்ளது (ம-10)

## வாழ்வைப் பொன்னாக்கும் வைர வரிகள்

**வாழ்க்கை என்பது அவரவர் வாழ்வதற்கு என்று மட்டுமே எனக் கருதக்கூடாது. மற்றவர்கள் நலனுக்கும் என்றும் கருத வேண்டும். -பெரியார்**

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநி யோக மார்க்கங்களின் கட்ட மைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை வியாழக்கிழமை காலை 8.30 மணி யிலிருந்து மாலை 5 மணி வரை

**யாழ்.பிரதேசத்தில்** கொழும்புத்துறை வீதி, யுஏ வீதி, துண்டி, நெடுங்குளம், மணியந்தோட்டம், கெனன் தோட்டம், உதயபுரம், Infentas Ice Solutions Pvt Ltd ஆகிய இடங்களி லும்,

**வவுனியா பிரதேசத் தில்** சாம்பல்தோட்டம், கூடுவெந்தபுலவு கிராமம், இலுப்பைக்குளம் ஆகிய இடங்களிலும்,

**மன்னார் பிரதேசத் தில்** தலைமன்னார் கிரா மம், தலைமன்னார் Palmy rah house, தலைமன்னார் நீர்ப்பாசன சபை ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும்.

# சத்திய தரிசனம்

## பக்தி எப்போதும் இருக்கட்டும்



❖ இதயத்தைக் கவனி. அது சொல்லும் சொல், செயல், சிந் தனை, நடத்தை ஆகியவற்றை யும் கவனி.

❖ ஆசிரியர் சொல்வதைப் பின்பற்று. தீமையை எதிர் கொள். இறுதி வரை போராடு. வாழ்க்கை விளையாட்டை ரசித்து முடி.

❖ வாழ்க்கை என்பது நேசித்தல், கவனித்தல், வளர்ச்சி பெறுதல், கற்றுக்கொள்ளுதல் இவைய னைத்தும் சேர்ந்ததாகும்.

❖ நீங்கள் அனைவரும் ஒரே குடும்பத்தின் அங்கத்தினர்கள். நீங்கள் எல்லோரும் அன்பு என்னும் மதத்தால் கட்டப்பட்டிருக்கிறீர்கள்.

❖ பிறரிடம் உள்ள தீயவற்றைத் தேடி அலை யாதீர்கள். அம்முயற்சியே உங்களைக் கறைபடியச் செய்து விடும்.

❖ பக்தி என்பது குறிப்பிட்ட நேரத்தில் அணியும் சீருடை போன்றதல்ல. அது, எப்போதும் உங்களிடம் இருத்தல் வேண்டும்.

❖ கடவுள் கொடுப்பதை அழிக்கமுடியாது. மனிதன் கொடுப்பதை பாதுகாக்கமுடியாது.

# மகாஜனா-ஸ்கந்தவரோதயா மோதும் வீரர்களின் போர் நாளை ஆரம்பம்


தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி அணி


சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணி

வடக்கின் வீரர்களின் போர் என வர்ணிக்கப்படும் தெல்லிப்பழை மகாஜனக்கல்லூரி சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணிகள் மோதும் மாபெரும் கிரிக்கெட் சமர் நாளை வெள்ளிக்கிழமை மற்றும் சனிக்கிழமை ஆகிய இரு நாட்களும் தெல்லிப்பழை மகாஜனக்கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இருபதாவது போட்டியாக நடைபெறவுள்ள வீரர்களின் போர் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி அதிபர் ம.மணிசேகரம், சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி அதிபர் மு.செல்லஸ்தரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இவ்வாண்டு மிகவும் சிறப்பாக நடைபெறவுள்ள இப்போட்டியில் இரு கல்லூரி அணிகளும் வடமாகாணத்தின் பாடசாலைகளில் பலம் பொருந்திய அணிகளாகக் கருதப்படும் நிலையில் போட்டி சிறப்பான விறுவிறுப்பாக நடைபெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

2001 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இப்போட்டியில் பத்து போட்டிகள் சமநிலையில் முடிந்தன. 4 போட்டிகளில் சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி வெற்றி பெற்றது.

5 போட்டிகளில் மகாஜனக்கல்லூரி வெற்றிபெற்ற நிலையில் இவ்வாண்டு 20 ஆவது போட்டி நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக வடமாகாண கல்வித் திணைக்கள உடற்கல்வித் துறை கல்விப் பணிப்பாளர் ராஜசீலன் கலந்து கொள்கின்றார். (க-105)


## அன்பு வாசகர்களே!

உங்கள் பிரதேச விளையாட்டுச் செய்திகளை Valampurisp@gmail.com அல்லது 076 636 3378 என்னும் Viber இலக்கத்துக்கு அனுப்பி வையுங்கள்.

உங்களை உலகறியச் செய்ய நாம் தயார்


# தமிழ்ஸ் எப்.சி.அணியை வென்றது மன்னார் அயன்ட் எப்.சி.அணி



மன்னார் மாவட்ட உதைபந்தாட்ட சம்மேளனத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட மன்னார் பிறீமியர் லீக் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியின் 4 ஆம் நாள் போட்டிகள் கடந்த புதன் கிழமை இரவு 7.30 மணியளவில் மன்னார் பொது விளையாட்டு மைதானத்தில் மின் ஒளியில் வெகு சிறப்பாக ஆரம்பமானது. குறித்த உதைபந்தாட்ட போட்டியானது மன்னார் தமிழ்ஸ் எப்.சி உதைபந்தாட்ட அணிக்கும் அயலன்ட எப்.சி உதைபந்தாட்ட அணிக்கும் இடையில் போட்டி இடம்பெற்றது.

போட்டி ஆரம்பமாகி 6 ஆவது நிமிடத்தில் அயலன்ட் எப்.சி உதைபந்தாட்ட அணியின் வீரர் அன்றூ டிலைக்ஸன் முதலாவது கோலை போட்டார்.

அதனைத்தொடர்ந்து முடியும் வரை போட்டி விறுவிறுப்பாக இடம் பெற்ற அயலன்ட் எப்.சி உதைபந்தாட்ட அணி 1:0 என்ற கணக்கில் வெற்றி பெற்றமை குறிப்பிடத்தக்கது. (க-285)



# பள்ளிமுனை எப்.சி.அணி வெற்றி



மன்னார் மாவட்ட உதைபந்தாட்ட சம்மேளனத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட மன்னார் பிறீமியர் லீக் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியின் 7 ஆம் நாள் போட்டிகள் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு 7.30 மணியளவில் மின் ஒளியில் மன்னார் பொது விளையாட்டு மைதானத்தில் இடம் பெற்றது.

குறித்த உதைபந்தாட்ட போட்டியானது மன்னார் லயன்ஸ் எப்.சி. உதைபந்தாட்ட அணிக்கும் பள்ளிமுனை எப்சி உதைபந்தாட்ட அணிக்கும் இடையில் போட்டி இடம் பெற்றது.

இதன்போது பள்ளிமுனை எப்.சி. உதைபந்தாட்ட அணி வீரரான ஏ.பேடினன் 3 கோல்களையும் மன்னார் லயன்ஸ் உதைபந்தாட்ட அணி வீரரான எஸ். றொட்னி ஒரு கோலையும் அடித்தனர். இந்த நிலையில் பள்ளிமுனை எப்.சி.உதைபந் தாட்ட அணி 3:1 என்ற கணக்கில் வெற்றி பெற்றது. (க-285)

வவுனியா கருங்காலிக்குளம் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையின் திறனாய்வுப் போட்டி.பாடசாலையின் அதிபர் புனிதவதி கிருபராசா தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் கடற்றொழில் மற்றும் மீன்பிடித்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மற்றும் வலயக் கல்வி திணைக்கள அலுவலர் செந்தில்குமரன், ரவிச்சந்திரன், கிராம உத்தியோகத்தர் சர்வேந்திரன், அபிவிருத்தி உத்தியோகத்தர் மாரிமுத்து சுரேந்திரன், மாமடு பொலிஸ் பொறுப்பதிகாரி செனரத் பண்டார மற்றும் ஆசிரியர்கள், மாணவர்களெனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர். (க-299)

## இலக்கு வைக்கப்...

வைக்கப்பட்டதாக வடக்கு மாகாண சபையின் முன்னாள் அமைச்சர் அனந்தி சசிதரன் தெரிவித்துள்ளார்.

ஜெனிவாவில் நடைபெற்றுவரும் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் கூட்டத்தொடரில் கலந்து கொண்டிருக்கும் அவர் வழங்கிய பிரத்தியேக செவ்வியிலே இவ்வாறு கூறினார்.

அவர் இதன்போது மேலும் தெரிவிக்கையில்,

இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் தினேஸ் குணவர்த்தன ஐ.நா சபையின் 30/1 தீர்மானத்திலிருந்து விலகுவதாக தெரிவித்திருக்கின்றார்.

இது நாம் எதிர்பார்த்த முடிவே. யுத்தம் முடிந்து 10 வருடங்கள் கழிந்தும் ஈழத்தமிழர்களுக்கு கிடைக்காத நீதி மறுக்கப்பட்ட நீதியாகும்.

ஆனால் இன்று வெளிவிவகார அமைச்சர் தினேஸ் குணவர்த்தன கூட்டத்தொடரில் வெறுமனே அபிவிருத்திப் பணிகள் தொடர்பிலே உரையாற்றிச் சென்றிருக்கிறார்.

ஈழத்தமிழர்களை ஏமாற்றியது போல 30/1 தீர்மானத்திலிருந்து விலகி சர்வதேசத்தையும் இலங்கை ஏமாற்றியுள்ளது.

வழக்கமாக விமான நிலையத்தில் மேற்கொள்ளும் சோதனை நடவடிக்கைகளை பார்க்கிலும் இம்முறை ஜெனிவா வரும் போது குறிவைக்கப்பட்டு சோதனைகளில் அதிக சிரமங்களை நாம் எதிர்கொண்டோம் என்று தெரிவித்தார். (ம)

## ஆர்.எம்.சோபித...

மூத்த பிரதி சொலிசிஸ்டர் ஜெனரல் ஆர்.எம்.சோபித ராஜகருணா மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசராக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ முன்னிலையில் நேற்று பதவியேற்றார்.

நேற்று பிற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் இந்நிகழ்வு இடம்பெற்றது.

சட்ட மா அதிபர் திணைக்கள மூத்த பிரதி சொலிசிஸ்டர் ஜெனரல் சோபித ராஜ கருணாவை மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசராக நியமிக்க அரசியலமைப்புச் சபை ஒப்புதல் வழங்கியது.

மேன்முறையீட்டு நீதிமன்ற தலைவராக நீதியரசர் ஏ.எச்.எம்.டி.நவாஸ் நியமிக்கப்பட்டதையடுத்து ஏற்பட்ட வெற்றிடத்துக்கே மூத்த பிரதி சொலிசிஸ்டர் ஜெனரல் சோபித ராஜ கருணா நீதியரசராக நியமிக்கப்பட்டுள்ளார். (ம)

## 22 கிலோ கிராம்...

மதுவரித் திணைக்களத்தினர் தெரிவித்தனர்.

நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை இரவு பலாலி பகுதியூடாக கஞ்சா கடத்தப்படுவதாக கடற்படையினருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலையடுத்து சங்கானை மதுவரித் திணைக்களத்தினர் அப்பகுதியில் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர்.

இதன்போது 22 கிலோகிராம் கஞ்சாவுடன் சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். இவரை நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மதுவரித் திணைக்களத்தினர் மேற்கொண்டுள்ளனர். (60)

## வர்த்தக நிலைய...

றுள்ளது

இந்தச் சம்பவம் யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை முருகமூர்த்தி வீதியில் உள்ள வர்த்தக நிலையம் ஒன்றில் நேற்று புதன்கிழமை மாலை 6.00 மணியளவில் இடம்பெற்றது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இரண்டு மோட்டார் சைக்கிள்களில் 5 பேர் கொண்ட கும்பல் வந்துள்ளது. முழுமையாக தலைக்கவசம் அணிந்திருந்த அவர்கள் கடைக்குள் புகுந்து பொருட்களை அடித்து சேதப்படுத்தியுள்ளனர்.

அவர்கள் பயணித்த மோட்டார் சைக்கிள்களுக்கு இலக்கத்தகடுகள் இல்லை. வர்த்தக நிலையத்தில் இருந்து புறப்பட்ட கும்பல் அந்த வீதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த முச்சக்கரவண்டியில் இருந்த உதிரிப்பாகங்களை அடித்து சேதப்படுத்தி விட்டு சென்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாணம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர் எனத் தெரிவிக்கப்பட்டது. (ம-114)

## நீதிமன்ற குற்ற...

ங்கியுள்ளார் என பாராளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் குற்றஞ் சாட்டினார்.

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிற்கும், இந்நாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிற்கும் எவ்வித வேறுபாடுகளும் கிடையாது. தேர்தல் காலத்தில் தேசத்துரோக ஒப்பந்தமாக விமர்சிக்கப்பட்ட எம்.சி.சி.ஒப்பந்தத்தை பொதுத்தேர்தலுக்கு பிறகு இரகசியமான முறையில் கைச்சாத்திடும் முயற்சியினை அரசாங்கம் முன்னெடுக்கின்றது எனவும் குறிப்பிட்டார்.

மக்கள் விடுதலை முன்னணியின் தலைமைக் காரியாலயத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துரைக்கையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

மத்திய வங்கியின் பிணைமுறி மோசடி தொடர்பில் அரசாங்கம் தரமான நடவடிக்கைகளை இதுவரையில் முன்னெடுக்கவில்லை.

ஆனால் தமக்கு தேவையானவர் களை நாட்டுக்கு கொண்டு வந்து அவர்கள் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்களில் இருந்து அவர்களை விடுவிக்கும் நடடிக்கைகளை முன்னெடுத்துள்ளது.

ஜெனிவா விவகாரத்தில் அரசாங்கம் தற்போது முன்னெடுத்துள்ள தீர்மானங்கள் ஒன்றும் புதிதான விடயமல்ல, சர்வதேசத்தின் மத்தியில் நாடு பல நெருக்கடியை எதிர்கொள்ள 2009ஆம் ஆண்டு முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஐக்கிய நாடுகள் சபையின் அப்போதைய செயலாளர் நாயகத்துடன் செய்து கொண்ட கூட்டு அறிக்கையே பிரதான காரணம் என்றார். (ம)

## நள்ளிரவு வீட்டுக்...

கொடிகாமம் மாசேரிப் பகுதியிலுள்ள வீடொன்றுக்குள் நேற்றுமுன்தினம் இரவு வாகனமொன்றில் வந்த பத்திற்கும் மேற் பட்ட வாள்வெட்டுக் குழுவினர் அந்த வீட்டினுள் நுழைந்து அட்டகாசத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இதன்போது வீட்டு உரிமையாளர் வெளியில் வந்த போது அவரைத் தாக்க முற்பட்டுள்ளனர். இதனையடுத்து வீட்டுக்குள் சென்ற உரிமையாளர் வீட்டின் கதவுகள் அனைத்தையும் பூட்டிவிட்டு அயலவர்கள், நண்பர்கள் மற்றும் பொலிஸாருக்கு தகவல் கொடுத்துள்ளார்.

இதனையடுத்து வீட்டின் முன்பாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த தனியார் பேருந்து மற்றும் அங்கிருந்த பொருட்களை அடித்து நொருக்கி சேதப்படுத்தினர். அயலவர்கள் ஓடி வந்ததைத் தொடர்ந்து வாள்வெட்டுக் கும்பல் அங்கிருந்து வாகனத்தில் தப்பியோடியுள்ளது.

இந்நிலையில் சம்பவ இடத்திற்கு வந்த கொடிகாமம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-60)

## உள்ளக விசா...

ஐ.நா. மனித உரிமைகள் சபையின் 43 ஆவது அமர்வு ஜெனிவாவில் நடைபெற்று வருகிறது.

இதில் நேற்று சுவிஸ் நேரப்படி முற்பகல் 10 மணிக்கு இலங்கை விவகார அமைச்சர் தினேஸ் குணவர்த்தன உரையாற்றினார்.

அங்கு உரையாற்றும்போதே அமைச்சர் தினேஷ் குணவர்த்தன இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

"கடந்த அரசு அனைத்து ஜனநாயக நடைமுறைகளையும் மீறியது. இலங்கையின் பொறுப்புக் கூறலுக்கான தீர்மானத்துக்கு இணை அனுசரணை வழங்குவது குறித்து அமைச்சரவை ஒப்புதல் வழங்கப்படவில்லை. பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவில்லை.

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் இந்த விடயம் தொடர்பில் ஆலோசிக்கப்படவில்லை"

இந்த விடயம் நடைமுறைக்கு சாத்தியமற்றது மற்றும் அரசியலமைப்பிற்கு விரோதமானது. எனவே கடந்த அரசால் இணை அனுசரணை வழங்கப்பட்ட தீர்மானம் 40/1 மற்றும் 30/1 மற்றும் 34/1 இல் இருந்து முறையாக விலக நாம் தீர்மானித்துள்ளோம்" என்றும் தினேஷ் குணவர்த்தன தனது உரையில் சுட்டிக்காட்டினார். (ம)

## இலங்கையின்...

மல் ஆக்கப்பட்ட சம்பவங்கள் தொடர்பிலும் விவாதங்கள் நடைபெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (ம)

## பணிஸ் விலை...

தெரிவித்துள்ளார்.

கோதுமை மாவின். விலை குறைப்புத் தொடர்பில் கோதுமை மா வழங்கும் கம்பனிகளுடன் பேச்சுவார்த்தை நடைபெற்று வருவதாகவும் மாவின் விலை குறைவடைந்தால் பாணின் விலையும் ஒரு வாரத்தின் பின்னர் குறைவடையும் என்றும் தெரிவித்தார். (ம)

## நாடளாவிய ரீதி...

பனவை வழங்குதல்உள்ளிட்ட சம்பள முரண்பாட்டுக்கான தீர்வினைப் பெற்றுத்தருமாறு கோரி நேற்று நாடளாவிய ரீதியிலுள்ள அதிபர், ஆசிரியர்கள் சுகவீன விடுமுறைப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

இதன் காரணமாகவே அரச பாடசாலைகளின் மாணவர்களுடைய கற்றல் கற்பித்தல் நடவடிக்கைகள் ஸ்தம்பிதமடைந்தன.

நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்பட்ட இந்த எதிர்ப்பு நடவடிக்கையின் காரணமாக 100 இற்கும் அதிகமான பாடசாலைகள் மூடப்பட்டிருந்தன.

இரண்டு இலட்சத்திற்கும் அதிகமான ஆசிரியர்களும் 10 ஆயிரத்திற்கும் அதிகமான அதிபர்களும் இந்த எதிர்ப்பு நடவடிக்கைக்கான ஆதரவை வழங்கியிருந்ததுடன், 97 வீதமானவர்களுடைய பங்களிப்பு இந்த ஆர்ப்பாட்டத்திற்கு கிடைக்கப்பெற்றதாக இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்தார். (ம)

## ஐ.நா தீர்மானத்...

குணவர்தன ஜெனிவா பேரவையில் உத்தியோகபூர்வமாக அறிவிததுள்ளார்.

ஐக்கியநாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 43ஆவது கூட்டத் தொடரில் நேற்று ஜெனிவா நேரப்படி காலை 10 மணிக்கு உரையாற்றும் போதே வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்த்தன ஐ.நாவிலிருந்து இலங்கை வெளியேறுவதாக உத்தியோகபூர்வமாக அறிவித்தார். (ம)


வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532

மெகா பவர்
திகதி 2020/02/26
சீட்டிழுப்பு இலக்கம் 503
L 01 28 56 73 79

கொவிசெத உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 26-02-2020
சீட்டிழுப்பு இலக்கம் 2404
A 01 27 42 75

தன நிதானய
திகதி - 2020.02.26
சீட்டிழுப்பு இலக்கம் - 270
K 29 36 68 74

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 26-02-2020
சீட்டிழுப்பு இலக்கம் 1021
W 958003

அத கோடிபதி ADA KOTIPATHI
சீட்டிழுப்பு இல: 895
வர்ணம் : இளஞ்சிவப்பு
சீட்டிழுப்பு திகதி: 2020.02.26
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 51,435,680/-
வெற்றி இலக்கங்கள் 04 12 50 63 L

சனிக்கிழமை அதிர்ஷ்டம்
சீட்டிழுப்பு இல.: 3306 திகதி: 2020.02.26
பச்சை புதன்கிழமை
வெற்றி இலக்கங்கள் 13 25 42 45 P
அடுத்த திங்கட்கிழமை ஜக்பொட் 35,228,790/-

சංවර්ධන වාසනාව
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 326
சீட்டிழுப்பு திகதி 26.02.2020 நீலம்
ஆங்கில எழுத்து Y
வெற்றி இலக்கங்கள் 24 37 62
விதி எண் 7
அடுத்த சுப்பர் பரிசுப்பொதி ரூ. 52,447,364
2020/02/28ம் திகதி வெள்ளிக் கிழமை சிவப்பு நிற டிக்கட்டுகள் சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
அபிவிருத்தி லொத்தர் சபை
www.dlb.lk

ராசி அதிர்ஷ்டம்
திகதி 26.02.2020 வெற்றி வாரம் 2781 வர்ணம் பச்சை
கன்னி 10 27 35 46
வியாழக் கிழமை வெற்றிப் பொதி ரூ. 2,409,602
ரூ.500 பரிசுக்குரிய 2332
ரூ.100 பரிசுக்குரிய 910
பவர் சான்ஸ் விசேட இல.
2020.02.27 ம் திகதி வியாழக் கிழமை கபிலம் நிற டிக்கட்டுக்களாகும்
வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்

# ரஷ்யாவிற்கான இலங்கையின் முன்னாள் தூதுவர் உதயங்கவை

## மறியலில் வைக்க நீதவான் உத்தரவு

(கொழும்பு)

ரஷ்யாவிற்கான இலங்கையின் முன்னாள் தூதுவர் உதயங்க வீரதுங்கவை விளக்கமறியலில் வைக்க நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

குறித்த வழக்கு நேற்று கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றில் விசாரணைக்கு வந்தபோது அவரை மார்ச் 11 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்க நீதவான் உத்தரவிட்டார்.

மிக் கொடுக்கல் வாங்கல் தொடர்பான குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்ட உதயங்க வீரதுங்க கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து இம்மாதம் 14 ஆம் திகதி கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட அவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம)

# அரசாங்கத்தின் இயலாமை ஒவ்வொரு நாளும் வெளிப்படுகின்றது

## –ஜே.வி.பி குற்றச்சாட்டு

(கொழும்பு)

இந்த அரசாங்கத்தின் இயலாமை ஒவ்வொரு நாளும் வெளிப்படுவதாக மக்கள் விடுதலை முன்னணி குற்றம் சாட்டியுள்ளது.

நேற்று(புதன்கிழமை) கொழும்பில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் பேசிய அக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத், தற்போதைய அரசாங்கம் தேர்தலில் வெற்றிபெறுவதற்காக பொதுமக்களை ஏமாற்ற முயற்சிக்கிறது எனவும் குற்றம் சாட்டினார்.

மைத்திரிபால சிறிசேனவை போன்று கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாக மாறியிருந்தாலும் கொள்கைகள் அப்படியே இருப்பதாகவும் பொருளாதாரத்தில் சிறப்பான மாற்றம் ஏதும் ஏற்படவில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

மேலும் வாக்குகளைப் பெறுவதற்காக இந்த அரசாங்கம் தொடர்ந்து தேர்தல் வாக்குறுதிகளை அளித்து வருவதாகவும் ஆனால் பொதுமக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை அரசாங்கம் தீர்க்கவில்லை என்றும் விஜித ஹேரத் சுட்டிக்காட்டினார்.

புதிய ஜனாதிபதியாக பொறுப்பேற்று தற்போது 100 நாட்கள் கடந்துள்ள நிலையில்,கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கம் அதன் இயலாமையை மக்களுக்கு காட்டியுள்ளது என்றும் அவர் கூறினார்.

(ம)

## ஏப் 25 – மே 6 ஆம் திகதிக்கு

# இடைப்பட்ட காலப்பகுதியில் பொதுத்தேர்தல் நடைபெறும்

## –மகிந்த தேசப்பிரிய

(கொழும்பு)

ஏப்ரல் மாதம் 25ஆம் திகதிக்கும் மே மாதம் 6ஆம் திகதிக்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் பொதுத் தேர்தலை நடத்த முடியும் என்று தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

அரசியல் கட்சிகளின் பொதுச் செயலாளர்களுக்கான நேற்றைய கூட்டத்திலேயே அவர் இந்தத் தகவலை வழங்கியுள்ளார்.

அரசியல் கட்சிகளின் பொதுச் செயலாளர்களை தேர்தல்கள் ஆணைக்குழு நேற்று முற்பகல் சந்தித்தது. தேர்தல்கள் செயலகத்தில் இந்தக் கூட்டம் இடம்பெற்றது.

பாராளுமன்றை வரும் மார்ச் 2ஆம் திகதிக்கும் 6ஆம் திகதிக்கும் இடையே கலைப்பதற்கு ஜனாதிபதி திட்டமிட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

(ம)

# அரச துரோக குற்றச்சாட்டில் மங்களவை கைது செய்க

## –தேசிய சுதந்திர முன்னணி

(கொழும்பு)

"முன்னாள் வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீரவை அரச துரோகக் குற்றச்சாட்டின் கீழ் உடன் கைதுசெய்ய வேண்டும்."

இவ்வாறு அமைச்சர் விமல் வீரவன்ச தலைமையிலான தேசிய சுதந்திர முன்னணியின் ஊடகப் பேச்சாளர் மொஹமட் முஸ்ஸம்மில் கோரிக்கை விடுத்துள்ளார்.

தேசிய சுதந்திர முன்னணியின் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

"ஐ.நா. மனித உரிமைகள் சபையின் 30/1 மற்றும் 40/01 ஆகிய தீர்மானங்களுக்கு நல்லாட்சி அரசு இணை அனுசரணை வழங்கியது சட்டவிரோதம். அப்படியான நடவடிக்கையை எடுக்க அப்போதைய வெளிவிவகார அமைச்சராக இருந்த மங்கள சமரவீரவுக்கு எந்த வகையிலும் அதிகாரம் வழங்கப்படவில்லை.


இதன் காரணமாக அரச துரோகக் குற்றச்சாட்டின் அடிப்படையில் மங்கள சமரவீரவை உடனடியாகக் கைதுசெய்ய வேண்டும்" - என்று குறிப்பிட்டுள்ளார். (ம)

# ரயில் மோதி இளைஞன் பலி!

மட்டக்களப்பு - வாழைச்சேனை, நாவலடி ரயில்வே கடவைக்கு அருகில் ரயில் மோதி இளைஞன் ஒருவர் உயிரிழந்தார். மட்டக்களப்பில் இருந்து கொழும்பு நோக்கி பயணித்த ரயில் மோதியதில், வாழைச்சேனை, நாவலடி பகுதியை சேர்ந்த 28 வயதுடைய ஒருவர் உயிரி ழந்துள் ளார்.சம்பவம் தொடர்பில் வாழைச்சேனை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.(ம)

# மரண அறிவித்தல்

பிறப்பு 23 - 09 - 1950



இறப்பு 25 - 02 - 2020

## தங்கராசா சௌந்தரராசா

ஒடக்கரை, பருத்தித்துறையை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட தங்கராசா சௌந்தரராசா அவர்கள் 25.02.2020 செவ்வாய்க் கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தங்கராசா-வள்ளியம்மாள் தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை-செல்வரத்தினம் தம்பதிகளின் அன்பு மருமகனும் இராஜேஸ்வரி அவர்களின் பாசமிகு கணவரும் யாழினி (மக்கள் வங்கி, நெல்லியடி), மாதவன் (ஆசிரியர், கிளி/அக்கராயன் மகா வித்தியாலயம்), வாமினி (M.A. தொழிலாளர் திணைக்களம்,கிளிநொச்சி), தமிழினி (M.L.T, Rubins Hospital) ஆகியோரின் பாசமிகு தந்தையும், பகீரதன் (M.A வலயக்கல்வி அலுவலகம், தென்மராட்சி) அவர்களின் அன்பு மாமனாரும், காலஞ்சென்றவர்களான சிவராசா, ஜெயராசா, தவராசா மற்றும் ஈஸ்வரிஅம்மாள் ஆகியோரின் அன்புச்சகோதரரும் பரமேஸ்வரி, செல்வராசா, யோகேஸ்வரி, தங்கராசா, யோகராசா ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.02.2020) வியாழக்கிழமை பி.ப 4 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக சுப்பர்மடம் இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

ஒடக்கரை,
பருத்தித்துறை.

(c-9344)

தகவல்:-
குடும்பத்தினர்

பராமரிப்பாளர் தேவை

யாழ் நகரில் புதிதாக தொடங்கவிருக்கும் கல்லூரியில் துப்பரவாக்கல், பூந்தோட்ட பராமரிப்பு, அலுவலக பராமரிப்பு போன்ற வேலைகளை முழு நேரமாக செய்யக்கூடிய அனுபவமுள்ளவர் தேவை.

சம்பளம் - 25, 000/=

(c-9340)

0768226243

வேலைக்கு ஆட்கள் தேவை

போட்டோ கொப்பி, ரைப்பிங் தெரிந்தவர்கள் உடன் தேவை

(2400)

தொடர்புகளுக்கு
0771961591

சாவகச்சேரியில்...

வெளிநாடுகளுக்கான துரித தபால் பொதிகள் சேவை

லண்டன் - 540/=
ஜேர்மனி - 640/=
இத்தாலி - 690/=
கனடா - 950/=
நெதர்லாந்து - 690/=

சலுகை அட்டை (Discount Card)
பெற வேண்டும் எனும் நிபந்தனை இல்லை.

076 443 1576

அருள்

இல.01, தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி.



(C-9293)

வலம்புரி
விளம்பரத்
தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

கல்லூரி நிர்வாக உத்தியோகத்தர்

யாழ் நகரில் புதிதாக ஆரம்பிக்கப்பட இருக்கும் சர்வதேச தரத்திலான கற்கை நெறிகளை வழங்கும் கல்லூரிக்கு அனைத்து பொறுப்புக்களையும் ஒருங்கமைக்கக்கூடிய முழுநேர நிர்வாக உத்தியோகத்தர் தகைமைக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது.

ஆங்கிலத்தில் புலமை, பல்கலைக்கழக கல்வி, வேலை அனுபவம் என்பன அடிப்படை தகுதிகளாக கருதப்படும்.

சம்பளம் - 30,000/=

(c-9340)

தொடர்புகளுக்கு:- 0768226243

விரைவு பொதிகள் சேவை

விசேட விலை குறைப்பு

UK - 550*/=Kg

DELIVERY IN 3-5 DAYS

எமது நேரடிக்கிளைகள்

● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● சாவகச்சேரி
● நெல்லியடி ● கொடிகாமம் ● திருகோணமலை
● புதுக்குடியிருப்பு ● சுன்னாகம் ● மானிப்பாய்
● மருதங்கேணி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை

0768226240

V2 TRAVELS

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 27.02.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.